இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 33 °c

குறைந்த வெப்பநிலை 27 °c

வெப்பமான காலநிலை



ஜெ பிரதமரானால் ஆதரவு வழங்குவேன்

பக். 06



ரஷ்யா வசமானது ஏவுகணைத் தளம்

பக். 07



15,17 வயதுக் கரப்பந் தாட்டத்தில் வயாவிளான் அணிகள் சம்பியன்

பக். 22



இலங்கை கிரிக்கெட் சபைக்கு எதிராக வீரர்கள் போர்க்கொடி

பக். 23


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 28

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 102 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி 24, சனி 08.03.2014


# சர்வதேச விசாரணை, மத்தியஸ்தத்துடன் பேச்சு அமெரிக்காவிடம் கூட்டமைப்பு நேரில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 08

சர்வதேச விசாரணை, சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சு உள்ளிட்ட கோரிக்கைகளை இறுதித் தீர்மான வரைவில் உள்ளடக்குமாறு அமெரிக்காவிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நேரடியாகக் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்படி விடயங்களை வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக, அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டிருந்தது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த விமோசனத்தையும் இந்தத் தீர்மானம் பெற்றுத் தரவில்லை என்று தமிழ்த் தேசி

21 ஆம் பக்கம் பார்க்க

## மகாலிங்கத்துக்கு முஸ்லிம்கள் பிரியாவிடை

யாழ்ப்பாணம், மார்ச் 08

இந்தியத் துணைத் தூதுவருக்கு யாழ் முஸ்லிம் சமூகத்தினரால் பிரியாவிடை நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கத்துக்கு யாழ்ப்பாண மாவட்ட முஸ்லிம்களால் வழங்கப்படும் இந்தப் பிரியாவிடை இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

யாழ்.முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கான சிவில் சமூக முன்னெடுப்புகள் என்னும் அமைப்பினூடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வுக்கு

21 ஆம் பக்கம் பார்க்க

# கொழும்பைக் கையாள விரைவில் தனிக் குழு

## நவிப்பிள்ளையின் அறிக்கையையொட்டி ஐ.நா. மனித உரிமைகள் சபை அமைக்கும்

ஜெனீவா, மார்ச் 8

இலங்கை தொடர்பான விவகாரங்களைக் கையாள்வதற்கென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தனியான ஒரு குழுவை நியமிக்க உள்ளது என்று ஜெனீவா தகவல்கள் கூறுகின்றன. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை தனது அறிக்கையில் சர்வதேச விசாரணை ஒன்றுக்குப் பரிந்துரைத்துள்ள நிலையில், இலங்கையின் விவகாரங்களைக் கையாள்வதற்கும் ஆலோசனைகளை வழங்குவதற்கும் கண்காணிப்பதற்குமாக சிறப்புக் குழு ஒன்றை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறது.

இலங்கை மீது அமெரிக்கா முன்வைக்கவுள்ள தீர்மானத்துக்குப் புறம்பாக இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு சபை தீர்மானித்திருக்கிறது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கொழும்பு அரசு இதுவரையில் காத்திரமான - நம்பகமான - சுயாதீனமான விசாரணையை நடத்தத் தவறியிருப்பதனால் இந்த முடிவு

21 ஆம் பக்கம் பார்க்க

## தீர்மான வரைவு இந்தியாவுக்கு கிடைத்தது

டில்லி, மார்ச் 08

ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மான வரைவு உத்தியோகபூர்வமாகக் கிடைத்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் இடம்பெற்று வருகின்றது. இந்த அமர்வில் இலங்கைக்கு எதிராக, அமெரிக்காவினால் தீர்

21 ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாத சட்டத்தின் கீழ் நேற்றும் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 08

'தமிழினத்தின் காவலர்கள்' என்ற துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஏழாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏழாலை வடக்கைச் சேர்ந்த சுந்தரம் அகிலன் என்ற ஓட்டோச் சாரதியே நேற்றுப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

'சர்வதேசம் எமக்கான நீதி

21 ஆம் பக்கம் பார்க்க

## நவிப்பிள்ளை ஒரு பொய்யர்

*சாடுகிறார் சமரசிங்க*



*மஹிந்த சமரசிங்க*

கொழும்பு, மார்ச் 08

இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் விடாப்பிடியாக உள்ள நிலையில், நவநீதம்பிள்ளை ஒரு 'பொய்யர்' என்று இலங்கை அரசு மிகக் கடுமையாக விமர்சித்துள்ளது.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவே ஐ.நா. மனித உரிமையாளரை இப்படிக் கடுமையாகச் சாடியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடு

21 ஆம் பக்கம் பார்க்க

## மூதூர் படுகொலை தொடர்பில் உண்மை வெளிவரவேண்டும்

*ஜெனிவாவில் வலியுறுத்தியது பிரான்ஸ்*

ஜெனிவா, மார்ச்.08

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட 17 மனிதநேயப் பணியாளர்களின் கொலை தொடர்பிலான உண்மைகளை இலங்கை அரசு வெளிச்சத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்று பிரான்ஸ் அரசு நேற்று வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் ஜெனிவாவில் இடம்பெற்று வருகின்றது. இந்தக் கூட்டத் தொடரில் உரை

21 ஆம் பக்கம் பார்க்க

## தலைவர் பிரபாகரன் வளர்த்தார் யானை

*உங்களுக்குத் தெரியுமா? கதை சொல்கிறது சிங்கள ஊடகம்*

*கொழும்பு, மார்ச் 08*

*தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பராமரித்து வந்த யானை தற்போது பின்னவெல யானைகள் சரணாலயத்தில் பராமரிக்கப்பட்டு வருவதாகக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.*

*தமிழீழ் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரப்ாகரன் விலங்குகளை நேசிப்பவர். அவர் ஒரு புலி, ஒரு கரடி, ஒரு யானை என்பனவற்றை வளர்த்து வந்தார். அவர் உயிரிழக்கும் வரை புலியைத் தன்னுடன் வைத்திருந்ததாகத் தகவல்*

21 ஆம் பக்கம் பார்க்க



*புகைத்தலை எதிர்த்து நேற்றுக் கரவெட்டியில் எதிர்ப்புப் பேரணி ஒன்று இடம்பெற்றது. இதில் பாடசாலை மாணவர்கள் , பொதுமக்கள், சுகாதாரப் பகுதியினர் எனப் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்றனர். (மேலும் படங்கள் 17 ஆம் பக்கத்தில்)*

## மன்னார்ப் புதைகுழி புராதன மயானமாம்

*தொல்பொருள் திணைக்களம் கண்டுபிடிப்பு*

மன்னார், மார்ச் 8

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பிரதேசம், புராதன மயானம் எனத் தொல் பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட குழுவொன்று மேற்கொண்ட பரிசோதனையின் பின்னர் இந்த முடிவுக்கு வந்துள்ளதாகத் திணைக்களத்தின் அகழ்வுப் பிரிவுப் பணிப்பாளர் நாமல் கொடித்துவக்கு கூறியுள்ளார்.

தொல்பொருள் திணைக்களத்தின் சிரேஷ்ட அகழ்வாராய்ச்சியாளரான ஏ.ஏ.விஜேரத்னவும் இந்தப் பரிசோதனையில் பங்கேற்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த மயானம் சுமார் 100 அல்லது 150 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குறித்த பகுதியில் இருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் அகழ்வுப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அனைத்து உடல்களும் மேற்குத் திசையில் தலைப்பகுதி இருக்கும் வகையிலும், உடல்களின் கைகள் வயிற்றின் மீது

21 ஆம் பக்கம் பார்க்க

## மருதங்கேணி பிரதான வீதியை புனரமைக்காவிடின் போராட்டம்

*அப்பகுதி மக்கள் 3 மாத கால அவகாசம்*

யாழ்ப்பாணம், மார்ச் 08

பருத்தித்துறை - மருதங்கேணி பிரதான வீதியை மூன்று மாதங்களுக்குள் புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால், சாத்வீகப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று மருதங்கேணி

21 ஆம் பக்கம் பார்க்க

## புகைத்தலுக்கு எதிராக விழிப்புணர்வுப் பேரணி

வடமராட்சி, மார்ச் 08

புகைத்தலை எதிர்த்து நேற்று கரவெட்டியில் நடைபெற்ற விழிப்புணர்வு, பேரணியில் மாணவர்கள், பெண்கள் உட்பட ஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ். சுதோகுமார் தலைமையில்-

21 ஆம் பக்கம் பார்க்க

# பாடசாலை பஸ் சேவை சீரில்லை என்று உதயனை முற்றுகையிட்ட மாணவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச், 08
பாடசாலை பஸ் சேவை சீரின்மை காரணமாக நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள நான்கு பாடசாலைகளைச் சேந்த மாணவர்கள் உதயன் பத்திரிகை நிறுவனத்தை நீதி கேட்டு முற்றுகை இட்டனர்.

அச்சுவேலி - யாழ்ப்பாணம் வரையான 750 இலக்க ஆண்களுக்கான பாடசாலை பஸ் சேவை ஒழுங்கின்மையைக் கண்டித்துப் பாடசாலை மாணவர்களால் இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி, யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த 150 இற்கும் அதிகமான மாணவர்கள் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள்,

இரண்டு கிழமையாக எங்களுக்கு பஸ் ஒழுங்கில்லை. பாடசாலை முடிய நாங்கள் பஸ்சுக்கு காத்திருக்க வேண்டி உள்ளது. அப்படிக் காத்திருந்தும் பஸ் வருவதில்லை. நாங்கள் இதைப் பற்றி நிறையத் தடைவை யாழ். மத்திய பஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தோம். ஊடகங்களுக்கு இது குறித்து அறிவிப்போம் என்பதையும் தெரியப்படுத்தினோம். இருப்பினும் அவர்கள் அதைக் கணக்கில் எடுப்பதாக இல்லை. பஸ்களை வேறு இடத்துக்கு அனுப்பிவிட்டதாகச் சொல்கிறார்கள். நாங்கள் பருவகாலச் சீட்டில் தான் வந்து போகின்றோம். இந்நிலையில் எங்களுக்கான சேவையில் ஈடுபடும் பஸ் வரவில்லை என்றால் நாங்கள் வேறு பஸ்ஸில் போக முடியாது. பருவகாலச் சீட்டைக் காரணமாக வைத்து எங்களை வேறு பஸ்ஸில் ஏற்ற மறுக்கிறார்கள். அவர்களுக்கு இலாபம் இல்லை என்கிறார்கள். காசு இல்லாதவர்கள் எவ்வளவு நேரம் சென்றாலும் பஸ் நிலையத்திலும் பாடசாலைகளிலும் நிற்க வேண்டி உள்ளது. காசு இருப்பவர்கள் வேறு பஸ்களில் பயணித்தாலும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குக் கால தாமத்தோடு தான் போய் அடிவாங்கவேண்டி உள்ளது. எங்களுக்கு ஒரு பஸ் கூட ஒழுங்கில்லை. ஆனால் இதே இலக்க பெண்கள் சேவையில் இரண்டு பஸ்கள் ஈடுபடுத்தப்படுகின்றன. இது எவ்வகையில் நியாயம்? பருவகாலச் சீட்டில் போய் வரும் எங்களை ஏற்ற மறுக்கும் 750 சேவை பஸ் பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து ஏற்றுகின்றார்கள். ஒன்பதாம் ஆண்டுக்கு மேல் படிப்பவர்கள் நடந்தென்றாலும் வீட்டுக்குப் போகலாம். சிறுவர்கள் குறித்து உரிய தரப்பினர் சிந்திக்க வேண்டும் - என்று தெரிவித்தனர்.



பஸ் சேவை இடம்பெறாமைக்கு எதிராக நீதி கேட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள்

இவ்விடயம் தொடர்பில் யாழ். சாலை முகாமையாளர் எஸ். குலபாலசெல்வத்தோடு தொடர்பு கொண்டு கேட்டபோது,

யாழ் மாவட்டத்தில் பாடசாலை சேவைக்கென 26 பஸ்கள் ஈடுபடுத்தப்படுகின்றன. எமக்கு இலாபம் இல்லாதபோதும் கூட பாடசாலை மாணவர்களின் நலன் கருதி சேவையில் ஈடுபடுத்தியே வருகின்றோம். இரு வாரங்களாக பஸ் ஒழுங்கில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. திருத்த வேலை காரணமாகவே பஸ் தாமதித்தது. அதனை மாணவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். பெண்களின் பாதுகாப்பு கருதியே பெண்களுக்கு இரண்டு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன' எனத் தெரிவித்தார்.

மாணவர்கள் உதயன் அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவேளை அங்கு வந்த இ.போ.ச பஸ்கள் மாணவர்களை ஏற்றிச் சென்றன.

(த-10-21)

## வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வசிப்பவர்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச்.08
வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தற்காலிகமாக வசிக்கும் பொதுமக்களை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தாம் தற்போது வசிக்கும் கிராம அலுவலர் பணிமனைக்குக் குடும்ப பங்கீட்டு அட்டையுடன் சமூகமளிக்குமாறு நல்லூர் பிரதேச செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(த-5)

## கிணற்றில் தவறி வீழ்ந்து மூதாட்டி சாவு

தென்மராட்சி, மார்ச் 8
கிணற்றில் தவறி வீழ்ந்து மூதாட்டி ஒருவர் சாவடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதடி மேற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சோந்த கந்தையா சின்னம்மா (வயது-79) என்பவரே மரணமானவராவார்.

மரணம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (த-9)

## வடக்குக் கல்வி அபிவிருத்தி மாநாடு எதிர்வரும் ஏப்ரலில் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 8
வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தி தொடர்பான மாநாடு ஒன்று யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்தார்.

கல்வி அபிவிருத்தி மற்றும் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் இசுருபாயவில் உள்ள கல்வி அமைச்சில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, அமைச்சின் அதிகாரிகள் மற்றும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, செயலாளர் எஸ். சத்தியசீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போதே ஏப்ரலில் யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தி தொடர்பான மாநாடு ஒன்றை நடத்துவதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்த மாநாட்டுக்குக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன உள்ளிட்டவர்களும் கலந்துகொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர் இடமாற்றம், தேசியப் பாடசாலைகளில் உள்ள மேலதிக ஆசிரியர்களை பொருத்தமான பாடசாலைகளுக்கு மாற்றுவது, கட்டடத் தேவைகள் உள்ளிட்ட பல விடயங்கள் இதில் கலந்துரையாடப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## வாள்வெட்டில் குடும்பஸ்தர் படுகாயம்

தென்மராட்சி, மார்ச் 8
உடுவில் அம்பலவாணர் வீதியில் உள்ள வீடொன்றில் நுழைந்த திருட்டுக் கும்பல் மேற்கொண்ட வாள் வெட்டுக்கு இலக்காகிக் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சாமிநாதன் தபேந்திரன் (வயது-55) என்பவேர வாள் வெட்டுக்கு இலக்கானவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

நேற்றிரவு உடுவில் அம்பலவாணர் வீதியிலுள்ள வீடு ஒன்றினுள் புகுந்த திருட்டுக் கும்பல் ஒன்று வீட்டு உரிமையாளரை வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-9-400)

## நீதிமன்றத்துக்கு முன்பாக தம்பதிக்கு கொலை மிரட்டல்

### 6 பேர் கைதாகினர்

தென்மராட்சி, மார்ச் 8
நீதிமன்ற வழக்குக்கு வந்த தம்பதிக்கு நீதிமன்றுக்குள் சென்றால் கொலை செய்வோம் என மரண அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றின் முன்னால் இடம்பெற்றது.

இதனால் அச்சமடைந்த தம்பதி நீதி மன்றுக்குச் செல்லாமல் பஸ்ஸில் ஏறி நுணாவிலில் உள்ள சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்தனர்.

இதனை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் வாகனத்துடன் நின்ற 6 பேரைக் கைது செய்தனர்.

இந்த 6 பேரையும் வாகனத்தையும் வாகனத்திலுள் காணப்பட்ட கிரிக்கெட் மட்டை, விக்கெட் ஆகியவற்றையும் நேற்று நீதிமன்றில் ஒப்படைத்தனர்.

வழக்கினை விசாரித்த நீதிவான் 6 பேரையும் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மகள் கடத்தப்பட்ட வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் நடைபெறுவதைப் பார்க்க வந்த பெற்றோருக்கே மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
(த-9)

## நீதித்துறையும், நிர்வாகத்துறையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்

### சிவில் பாதுகாப்புக் குழுக் கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபர்

வலி. வடக்கு, மார்ச் 8
ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை நீதித்துறையும் நிர்வாகத்துறையும். அதே போன்றே நீதி நியாயமும் அமைய வேண்டும் என யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட ஒன்பது பொலிஸ் நிலையங்களின் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் மற்றும் கிராம அலுவலர்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தலைமையில் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிவில் பாதுகாப்புக் குழுக்களின் நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையிலும் கடமைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்காகவும் இந்தக் கலந்துரையாடல் இடம் பெறுகின்றது.

சிவில் பாதுகாப்புக் குழுக்கள் நீதி நியாயங்களுடன் மனிதாபிமானமிக்கதாகச் செயற்பட வேண்டியது அவசியமாகும். இங்கு மதம், மொழி என்பவற்றைச் சுதந்திரமான முறையில் மக்கள் அனுபவிக்க வேண்டும்.

சரியானதைச் சரியான முறையில் செய்ய வேண்டும் என்பதே எமது விருப்பமும் சமூகத்தின் விருப்பமும் ஆகும் - என்றார்.

(த-86)

## சமஷ்டி ஆட்சி கோரும் பிரேரணையை நிராகரித்தார் வடக்கு அவைத் தலைவர்

யாழ்ப்பாணம்,மார்ச்.08
சமஷ்டி ஆட்சி என்ற அடிப்படையில் அரசியல் தீர்வு ஒன்றுக்கான புதிய அரசியல் யாப்பு சர்வதேச உதவியுடன் உருவாக்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் அடுத்த அமர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த அமர்வுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையே நிராகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபைகள், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகளைப் பூரணமாகப் பூர்த்தி செய்யத் தவறிய காரணத்தால், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த இறைமையுள்ள தமிழ்த் தேசத்தில் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சமஷ்டித் திட்டத்தின் கீழ், ஒரு நாடு இரு தேசம் என்ற அடிப்படையில் அரசியல் தீர்வு ஒன்றுக்கான புதிய அரசியல் யாப்பு ஒன்றைச் சர்வதேசத்தின் உதவியுடன் உருவாக்க ஏற்பாடுகளை செய்ய வேண்டுகோள் விடுக்கும் அதே வேளை, இலங்கை ஆட்சியாளர்களால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் இன அழிப்பையும், இனச் சுத்திகரிப்பையும், நில அபகரிப்புக்களையும் தடுப்பதற்காக ஐ.நா. உதவியுடன் வடக்கு, கிழக்கில் ஒரு இடைக்கால அரசை நிறுவவேண்டும் என்று, சர்வதேச சமூகத்துக்கு வேண்டுகோள் விடுப்பதென இச்சபை தீர்மானிக்கின்றது என்று அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பிரேரணையை நிராகரித்துள்ள அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், அது தொடர்பில் அனுப்பியுள்ள பதிலில், இது ஒரு தெளிவற்ற பிரேரணை மட்டுமல்ல, சர்வதேச சமூகத்துக்கு வேண்டுகோள் விடுப்பதென்றால் அதன் முகவரி தெரியப்படுத்தப்படவில்லை. இவ்வாறான உணர்வுபூர்வமான பிரேரணைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தின் தீர்மானத்தின் அடிப்படையிலேயே கையாளப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார். (த-5)

## ஒன்பது இந்திய மீனவர்களுக்கு விளக்க மறியல்

மன்னார், மார்ச் 8
இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைதான 9 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டார்.

9 இந்திய மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் பொலிஸார் குறித்த மீனவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் நேற்று அவர்களை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். குறித்த மீனவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-56)

# புதிய உத்திகள் வேண்டும் பனைசார் உற்பத்திகளுக்கு

*பொறியியல் பீட மாணவர்களின் உதவியை நாடுகிறது சபை*

யாழ்ப்பாணம்.மார்ச் 8
பனை சார் உற்பத்திகளை நவீன முறையில் தயாரிப்பதற்கான தொழில் நுட்பங்கள் கண்டறியப்பட வேண்டியது அவசியமாகவுள்ளது . இது தொடர்பாக கிளிநொச்சி பொறியியல் கல்லூரி பீட மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி நிலையத்தை பார்வையிடுவதற்காக கடந்த வாரம் கிளிநொச்சி பொறியியல் கல்லூரியின் முதலாவது அணி மாணவர்கள் வருகை தந்திருந்தனர்.

இதன்போது வடமாகாணத்தின் பனை வளத்தின் பயன்பாட்டின் அபிவிருத்தி தொடர்பாக அவர்கள் கேட்டிருந்தனர்.

இதற்குப் பதிலளிக்கையில்:-
தற்போது பனைவளத்தை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள் உள்ள போதும் நவீன முறையில் உற்பத்திகளைத் தயாரிப்பதற்கு இயந்திரப் பொறிமுறைகள் போதுமானதாக இல்லை . எனவே நவீன முறையில் அவற்றைத் தயாரிப்பதற்கு புதிய உபகரணங்களைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

சமூக மாற்றத்துக்கு ஏற்ப அதிக உற்பத்திகளைத்தயாரிக்கக் கூடிய, சந்தை வாய்ப்பைப் பெறக்கூடிய உற்பத்திகளைத் தயாரிப்பதற்கு புதிய தொழில் நுட்பங்களைக் கண்டறிய வேண்டியுள்ளது.

இதன்காரணமாக பொறியியல் கல்லூரி மாணவர்கள் தமது கற்றல் காலத்தில் இத்தகைய உபகரணங்களைத் தயாரிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு ஆலோசனைகள் தெரி விக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

(வ-14)

# சதொசவுக்கு உருளைக் கிழங்கு வழங்க விவசாயிகள் பின்னடிப்பு

*கொழும்புச் சந்தையில் விலை அதிகரிப்பால் இந்த மாற்றம்*

யாழ்ப்பாணம்.மார்ச் 8
கொழும்புச்சந்தையில் உருளைக்கிழங்கின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் 'சதொச' நிறுவனத்துக்கு உருளைக் கிழங்கை விற்பனை செய்வதற்கு யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு விவசாயிகள் பின்னடிப்பதால் 15 வீதமான விளைச்சல் விற்பனைக்காக இதுவரை அறுவடை செய்யப்படாமல் உள்ளது என்று யாழ்.மாவட்ட உருளைக் கிழங்கு விற்பனைக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
உருளைக்கிழங்குக்கான இறக்குமதி வரியை அதிகரிக்குமாறு விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக உருளைக்கிழங்குக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டது. இதனால் உருளைக்கிழங்கின் விலை தற்போது அதிகரித்துள்ளது.

கொழும்பு சந்தைகளில் ஒரு கிலோ உருளைக்கிழங்கு 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.


எனினும் 'சதொச' நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு அமைவாக இதுவரை ஒரு கிலோ உருளைக்கிழங்கை 70 ரூபா வீதம் சதொச நிறுவனத்துக்கு விவசாயிகள் விற்பனை செய்து வந்தனர்.

யாழ்.மாவட்டத்தில் பிரதானமாக 3 பிரதேச செயலர் பிரிவுகளில் உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டதால் உற்பத்தி செய்யப்பட்ட 85 வீதமான உருளைக்கிழங்கு 'சதொச' நிறுவனத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

குறிப்பாக 'சதொச' நிறுவனத்தால் இதுவரை ஒரு இலட்சத்து 8 ஆயிரம் கிலோ கிராம் உருளைக்கிழங்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இன்னமும் 15 வீதமான உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்படாமல் உள்ளது. தற்போது 100 ரூபாவுக்கு வெளிச் சந்தையில் உருளைக் கிழங்கு விற்பனை செய்யப் படுவதால் விவசாயிகள் 'சதொச' நிறுவனத்துக்கு கிலோவொன்றை 70 ரூபாவுக்கு விற்பனை செய்யப் பின்னடிக்கின்றனர்.

தாம் நேரடியாகவே வெளிச் சந்தையில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யக்கூடியதாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளதால் சதொசவுக்கு உருளைக்கிழங்கை விற்பனை செய்வது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.


கோப்புப்படம்

சதொச நிறுவனம் உருளைக் கிழங்கை கொள்வனவு செய்வதற்கு முன்வந்துள்ள போதும் உருளைக்கிழங்குக்கான விலை உயர்வடைந்துள்ளதால் விவசாயிகள் பின்னடிக்கின்றனர் - என்றார்.

இதேவேளை கடந்த கால போகத்தில் 120 ஹெக்ரேயரில் உருளைக்கிழங்கு நடுகை செய்ய இலக்கு வைக்கப்பட்டும் 80 ஹெக்ரேயரிலேயே உற்பத்தி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-14)

# மடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை திறப்பு

மன்னார்,மார்ச் 8
'யுனிசெப்' அமைப்பின் நிதி உதவியுடன் மடுவில் அமைக்கப்பட்ட மடு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நேற்று வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'யுனிசெப்' அமைப்பின் நிதி உதவியுடன் சுமார் 27 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட குறித்த பணிமனையின் திறப்பு விழா மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என். பரீட் தலைமையில் இடம் பெற்றது.


கட்டடத்தைத் திறந்து வைத்தார்
வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம்

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம், வடக்கு மாகாண போக்குவரத்து, மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பிரிமூஸ் சிராய்வா ஆகியோர் இதில் கலந்து கொண்டு பணிமனையைத் திறந்து வைத்தனர்.

இதன்போது 'யுனிசெப்' அமைப்பின் பிரதிநிதி எஸ்.பிரகாஸ், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் யூட் ரதனி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(கு-56)


கிளிநொச்சியில்
தலைவர் மனோகணேசன்
உறவுகளை இழந்த
தாய்மார்களுடன்..

யாழ் மண்ணின் மைந்தன்
சண்.குகவரதன்
(பொறியியலாளர்)
அண்ணன் மனோவுடன்
மேல்மாகாண சபைத் தேர்தலில்..



வடபுலத்து உடன் பிறப்புகளே,
"உரிமைகளுக்கு குரல் கொடுப்போம், உறவுக்கு கை கொடுப்போம்"
தென்னிலங்கை மேல்மாகாணசபை தேர்தலில் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் நமது கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணி, நமது தலைவர் **மனோ கணேசன்** அவர்களது தலைமையில் களமிறங்கியுள்ளது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அனைத்து பெரும்பான்மை கட்சிகளையும் இனவாத பேய் உச்சந்தலையில் பிடித்தாட்டும் இந்த வேளையிலே, மேல்மாகாணத்திலும் எமது இனம் அரசியல்ரீதியாக பலம் பெறவேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். தலைநகர் மாவட்டங்களில் தலைவர் மனோ கணேசனின் கரங்கள் பலம்பெறுவது, மேல்மாகாணத்தில் வாழும் மக்களுக்கு மட்டுமல்ல, வடக்கு - கிழக்கில் வாழும் மக்களுக்கும் உறுதுணையானது என்பதை நமது வரலாறு தொடர்ச்சியாக நிரூபித்துள்ளது. மேல்மாகாணத்தில் வாழும் உங்கள் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் தொடர்புகொண்டு எங்கள் **ஏணி** சின்னத்திற்கு அவர்களது வாக்குகளை அளிக்கும்படி கேட்டுக்கொள்ளுங்கள் என வேண்டுகிறோம். வடமாகாண தேர்தலில் நடைமுறையான 80 சதவிகித வாக்களிப்பு மேல்மாகாண தேர்தலிலும் நடைமுறையாக வேண்டும் என்பதுவே எங்கள் இலக்கு. ஆகவே **" வாக்குரிமையுள்ள ஒவ்வொருவரும் தேர்தலன்று வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களியுங்கள்"** என தமது மேல்மாகாண உறவுகளை வலியுறுத்தும்படி அனைத்து வடபுலத்து உடன்பிறப்புகளையும் நாம் வேண்டுகிறோம்.

**தேர்தல் பரப்புரைக் குழு -ஜனநாயக மக்கள் முன்னணி** (45444)


தங்கத்தாத்தா நவாலியூர்
சோமசுந்தரப்புலவரின் பூட்டன்,
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவன்

# யாழில் திருட்டுகள், கொள்ளைகளைத் தடுக்க சிவில் பாதுகாப்புக் குழுக்கள் உதவவேண்டும்

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 08

யாழ்ப்பாணத்தில் களவு, கொள்ளைகள் அதிகரித்துள்ளன. பாடுபட்டு உழைத்தவர்கள் தமது பொருள்கள் அபகரிக்கப்படுவதை விரும்ப மாட்டார்கள். எனவே சிவில் பாதுகாப்புக் குழுவினர் திருட்டு, கொள்ளைகளைத் தவிர்க்க உதவுவதோடு மக்கள் மத்தியில் உள்ள பிரச்சினைகளையும் இனங்காணுதல் வேண்டும் என்று வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களின் கீழ் உள்ளடங்கும் சிவில் பாதுகாப்புப் குழுவினருடனான கலந்ரையாடல் ஒன்று யாழ். இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி அரங்கில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீண்டும் ஒரு பேரழிவு, பயங்கரவாதம் மற்றும் போர் என்பன ஏற்படுவதனையோ அதன் மூலமாக மக்கள் அங்கவீனர்களாவதனையோ எவரும் விரும்பமாட்டார்கள். அதற்காகவே இந்தக் குழுவைக் கூட்டியுள்ளோம். பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நல்ல நம்பிக்கை ஏற்பட வேண்டும். சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பிரதான நோக்கம் தேசிய பாதுகாப்பே.

இங்கு களவு, கொள்ளை, மோசடி உள்ளிட்ட குற்றச் செயல்கள் மலிந்துள்ளன. அவற்றைத் தடுத்தல் வேண்டும். அவை வீடுகள், கடைகள் என்பவற்றைப் பிரித்து இடம்பெறுகிறன. யாழ்ப்பாணத்தில் களவு, கொள்ளை மேற்கொள்ளத் தெவேந்திர முனையிலிருந்தா வருகிறார்கள்? அல்லது வன்னியிலிருந்தா? அல்லது இந்தியாவிலிருந்தா? வருகிறார்கள். இல்லையே. இங்குள்ளவர் கள்தானே எடுக்கிறார்கள். கிராம மக்கள் விழிப்பாயிருக்கிறார்கள். இங்கு கொள்ளையடிப்பவர்கள் யார் என்று அவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். கொள்ளை, திருட்டுக்களில் ஈடுபடுபவர்களைப் பொதுமக்கள் சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு அறிவித்தல் வேண்டும். அவர்கள் மூலமாக என்றாலும் பொலிஸாருக்கு அறிவிக்கவேண்டும். இரகசியம் பேணப்படும்.

இங்கு நடக்கும் ஊழல் களைக் கட்டுப்படுத்த வேண்டும். அரச அதிகாரிகள் ஊழல்களில் ஈடுபட்டால் அவை தொடர்பில் ஆதாரத்துடன் சமர்ப்பித்தால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை தேவையில்லை. அது தேவையென்றால் அது தொடர்பில் விண்ணப்பித்தால் வழங்குவது தொடர்பில் ஆராயப்படும். சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டங்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை கட்டாயம் 2 மணித்தியாலங்கள் என்றாலும் இடம்பெறல் வேண்டும்-என்றார் பூஜித ஜயசுந்தர.



பூஜித ஜயசுந்தர

இந்தக் கூட்டத்தில் கொலை, கொள்ளைச் சம்பவங்களைத் தவிர்க்க ஆக்கபூர்வமான கருத்தை முன்வையுங்கள், நடவடிக்கை எடுங்கள் என்று உறுப்பினர் ஒருவரால் வலியுறுத்தப்பட்டது. அங்கு கருத்துக்களை முன்வைத்தவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தில் அரசியல் நோக்கம் கருதி கலாசாரம் திட்டமிட்டு அழிக்கப்படுகிறது. கலாசாரச் சீரழிவுகளுக்கு முடிவு கட்டப்பட வேணடும். இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்க ஊடகவியலாளர்கயையும் இணைத்துச் செயற்பட ஏற்பாடு செய்தல்வேண்டும் என்று கோரினார். அதற்கு உரிய பதில் வழங்கப்படவில்லை.

.(த-4-86)

**ஜோதிடர் வருகை**

இந்தியாவின் பிரபல ஜோதிடர்
C.M. சாமி (B.B.A, Dip.in Astrology)
யாழ் வருகை. ஜாதக விளக்கங்களுடன் மலையாள மாந்திரீக முறைப்படி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.
ஜோதிடர் இராஜகுருசாமி அவர்களின் மருமகன்
N.பாலசுப்பிரமணியம், அம்மன் வீதி, தலங்காவல் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி, 077 768 4406
(44603)(4.6.3)

**கணனி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்**

northern PC PARK




TOWN SHOW ROOM
10-14, STANLY ROAD
JAFFNA
021 222 2050

TECHNICAL DIVISION
288, PALALY ROAD.
KANTHARMADAM, JAFFNA.
021 222 9581

MAIN SHOW ROOM
269E, PALALY ROAD,
KANTHARMADAM, JAFFNA
021 222 0388

**சானியா கேபல் கெயர்**

262 செம்மணி வீதி, நாயன்மார்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை நல்லூர்.

- எமது பிரசித்தி பெற்ற கருமைநிறநீக்கம் உட்பட அனைத்து சருமப் பிரச்சினைகளுக்கான நிரந்தரத்தீர்வு
- முடி சார்ந்த பிரச்சினைகள்
- உடற்பருமன் அதிகரிப்பு மற்றும் குறைப்பு
- அழகுச்சிகிச்சை
- மற்றும் அழகு தொடக்கம் ஆரோக்கியம் வரையிலான அனைத்து வைத்தியசிகிச்சைகள்

குறிப்பு : இது எமது நிரந்தர முகவரியாகும்
அனைத்தும் வைத்திய மேற்பார்வையிலேயே நடைபெறுகிறது.
நிரந்தர தொலைபேசி - 077 7351954 முற்பதிவு அவசியம்

**க.பொ.த. உயர்தரம் மீள்பரீட்சார்த்திகளுக்கு**

2014 க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் மீள் பரீட்சார்த்திகள் 10.03.2014 அன்று பாடசாலைக்குத் தவறாது சமுகம் தரும்படி கேட்கப்படுகிறீர்கள்.

அதிபர்
உடுவில் மகளிர் கல்லூரி

## கைதடி விபத்தில் ஒருவர் படுகாயம்

கைதடி, மார்ச் 08

ஏ - 9 வீதியில் கைதடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நேற்று மாலை இடம்பெற்ற பஸ் - பிக்கப் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தென் பகுதி நோக்கிப் பயணம் செய்த சுற்றுலாப் பயணிகள் பஸ்ஸும் யாழ்ப்பாணம் நோக்கி வந்த பிக்கப் வாகன மும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது. அம்பாந்தோட்டையில் இருந்து மாணவர்களுடன் யாழ்ப்பாணம் சுற்றுலா வந்து திரும்பிய பஸ்ஸே விபத்தில் சிக்கியது.

இரு வாகனங்களுக்கும் பலத்த சேதங்கள் ஏற்பட்ட போதும் அதில் பயணம் செய்தவர்களில் பிக்கப் வாகனச் சாரதி தவிர எவரும் சிறுகாயங்கள் கூட இல்லாமல் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். இது தொடர்பான விசாரணையை சாவ கச்சேரி பொலிஸார் மேற் கொண்டுள்ளனர்.

(த-400-288)

## சுழிபுரத்தில் மோதல்

சுழிபுரம் கிராமத்தில் ஏற்பட்ட கைகலப்பில் இரு வர் படுகாயமடைந்தனர். அப் பகுதியிலுள்ள காணியைப் பகிர்தளிப் பதில் ஏற்பட்ட பிணக்கே கைகலப்பாக மாறியது.

குறித்த கிராமத்தில் உள்ள அம்மக்களுக்குரிய பலநூறு ஏக்கர் காணியை ஊர்மக்களுக்கு பகிர்ந்து கொடுப்பதா? அல்லது தனியார் நிறுவனம் ஒன்றுக்கு குத்தகைக்கு கொடுப்பதா என்பது தொடர்பில் இரு பகுதியினருக்கிடையில் முரண்பாடு காணப்பட்டது. இதன் காரணமாகவே கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த-400)

## காதல் திருமணம் செய்த 17 வயதுச் சிறுமி சாவு

### கணவனும் நஞ்சருந்தி வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், மார்ச் 08

17 வயதுச் சிறுமி காதல் திருமணம் செய்து 20 நாள்களேயான நிலையில் குடும்பத் தகராறு காரணமாகத் தூக்கில் தொங்கி உயிரிழந்தார். இதனையடுத்து அவரைக் காதல் திருமணம் செய்த இளைஞனும் நஞ்சருந்திய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேகத்தில் அவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இணுவிலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த சிறுமியே தூக்கில் தொங்கியநிலையில் உயிரிழந்தவராவார். காதல் திருமணம் செய்து 20 நாள்களேயான நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குடும்பத் தகராறு காரணமாகக் குறித்த சிறுமி தூக்கில் தொங்கியுள்ளார். அவரைக் குறித்த இளைஞர் தூக்கில் இருந்து கீழே இறக்கியபோது சிறுமி மூச்சுப் பேச்சின்றி இருந்துள்ளார். இதனையடுத்து இளைஞர் அங்கிருந்து சென்று நஞ்சருந்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. சடலத்தைப் பொலிஸார் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

நேற்று உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் விசாரணையின் பின்னர் சடலம் சிறுமியின் தாயாரிடம் ஒப்படைக்கப் பட்டது. (த-4)

## எந்தச் சவாலையும் எதிர்கொள்ள தயார்

### பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 8

எந்தவொரு சவாலையும் எதிர்நோக்கத் தயார் எனப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நாட்டின் சுதந்திரத்தையும், இறைமையையும் பாதுகாத்துக் கொள்வதற்காக எந்தவொரு சவாலையும் எதிர்நோக்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் பங்கேற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்கப்படக் கூடிய அபாயம் கிடையாது எனவும் அவர் அங்கு குறிப்பிட்டார். மேற்குலக நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான தரப்பினர் குரோத உணர்வைத் தூண்டும் வகையில் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாக அவர் மேலும் கூறினார். (த)

## அருள் திரு அடிகளாரின் பெருமங்கல விழா

ஆன்மிகக் குரு அருள் திரு அடிகளாரின் 74 ஆவது அவதாரத் திருநாள் பெருமங்கல விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு சட்டநாதர் சிவன் கோயிலுக்க அண்மையிலுள்ள திவ்ய தீவன சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. யாழ். மன்றம், லண்டன் ஈஸ்ட்காம் மன்றம் மற்றும் ஹறோ மன்றம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இடம்பெறும் இப் பெருவிழாவில் சமூக நலப்பணிகள் இடம்பெறவுள்ளதுடன் மதியம் மகேஸ்வரபூசையும் இடம் பெறவுள்ளது.

(400-13)

**விற்பனைக்கு**

ஐஸ்கீறீம் உற்பத்தி செய்யும் கொம்பிறசர் பார்த்தும், டீப்பிறசரும்விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 0592241

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road, Jaffna.

**வீடு வாடகைக்கு உடன் தேவை**

ஐஸ்கிறீம் தொழிற்சாலை இயங்குவதற்கு 1600 சதுரஅடிக்கு மேற்பட்டதும். வாகன தரிப்பிட வசதியும் கொண்ட வீடு வாடகைக்கு வேண்டும்.
தொடர்புகளுக்கு : 077 5532055, 021 2223857

**வீடு விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு பழைய வீதியில் 4 பரப்புக் காணியுடன் 5 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.
கோப்பாய் தெற்கு மாதா கோயிலுக்கு பின்னால் 10 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 8839854

**காணி விற்பனைக்கு**

கொழும்புத்துறை துறைமுகம் சந்திக்கும், முத்துமாரி அம்மன் கோயில் சந்திக்குமிடையில் குடியிருப்புக்கான காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 021 2223318, 077 7425484
செ. பிருந்தாபன்

**மரண அறிவித்தல்**



**திருமதி சின்னம்மா கந்தையா**

கைதடி மேற்கைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா கந்தையா நேற்று (07.03.2014) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -நாகமுத்து தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான காராளர்-காதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவயோகநாதன் மற்றும் தங்கமுத்து காலஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் செல்லம்மா, சிவபாக்கியம், சிவனேஸ்வரி, சிவஞானசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இராசலட்சுமி காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் சிவஞானேஸ்வரி, சின்னத்தம்பி, சங்கரலிங்கம், தங்கராசா, செல்வரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2014) சனிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு, கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

## பாலாவி வாசிக்கு விளக்கமறியல்

கொடிகாமம், மார்ச் 8

கட்டுத்துவக்கு வைத்திருந்த கொடிகாமம் பாலாவி வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்து பாலாவிப் பகுதியில் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தப்பட்ட போது அனுமதியின்றி கட்டுத் துவக்கு வைத்திருந்தநபர்கைதுசெய்யப்பட்டார். பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறிப்பிட்ட நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஒ-9)

## இத்தாவில், முகமாலைப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துங்கள்

### வெடி பொருள்களையும் துரிதமாக அகற்றுமாறு கிராம அபிவிருத்திச் சங்கம் மனு

பளை, மார்ச்7

பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதியில் இதுவரை மீளக் குடியமர அனுமதிக்கப்படாத இத்தாவில், வேம்பொடுகேணி, முகமாலை ஆகிய இடங்களில் மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தாவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரை மனு ஒன்றின் மூலம் கேட்டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மேற்படி மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த அம்பனை, பளை, இந்திராபுரம், முகமாலை தெற்கு ஆகிய பகுதிகளில் இன்னமும் மக்கள் மீள்குடியமர்வு இடம்பெறவில்லை.

இந்தப்பகுதியில் வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் வருடக் கணக்கில் இடம்பெற்று வருகின்றன.

இடம்பெயர்ந்து 14 வருடங்கள் பூர்த்தியடையும் நிலையில் வெடிபொருள்கள் அகற்றும் பணிகளை துரிதப்படுத்தி ஏனைய பிரதேசங்களில் தங்கியுள்ள இப்பிரிவுகளைச் சேர்ந்த மக்களை விரைவில் மீள்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் .

ஏ-9 வீதியிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் முருகமூர்த்தி வீதி, காதபுரம், இத்தாவில் உள்ளடக்கிய மொண்டுவான் வீதி, தேவாலயத்திலிருந்து அரசர் கேணி வீதி ஆகிய மூன்று வீதிகளையும் புனரமைக்க வேண்டும். கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும். குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் அந்த மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9-18)

# பிணைப்பணம் மீள கிடைக்கவில்லை

### பாரவூர்தி சங்க உறுப்பினர்கள் கவலை

வலி.வடக்கு, மார்ச் 8

யாழ்.மாவட்ட பாரவூர்திச் சங்கத்தின் உறுப்பினர்கள் மகேஸ்வரி நிதியத்தில் மணல் ஏற்றி இறக்கும் பணிக்கான பிணைப் பணமாகச் செலுத்திய 5 ஆயிரம் ரூபா பணத்தை மீள கையளிக்குமாறு கூறி கடிதங்கள் கையளித்து சுமார் நான்கு மாதங்கள் கடந்த நிலையிலும் தமது பணம் மீள இதுவரை வழங்கப்பட வில்லை என்று ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஐந்து வருடங்களாக மணல் ஏற்றி இறக்கும் பணிக்கு தம்மை பயன்படுத்தாத நிலையில் பிணையாகத் தாம் செலுத்தியிருந்ததமது பணத்தை மீள கையளிக்கும்படி கோரி உரிய அமைப்பிடம் கடிதங்களை கையளித்த போதிலும் அந்தப் பணம் மீள வழங்கப்படவில்லை என்று கோண்டாவிலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ்.மாவட்ட பாரவூர்தி சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் அங்கத்தவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

> யாழ்.மாவட்ட பாரவூர்தி சங்கத்தின் உறுப்பினர்கள் தமது தற்போதைய உண்மை நிலைமையை வெளிக்கொண்டு வரும் வகை யில் பேரணி ஒன்றை நடத்து வதற்கு
>
> — — — — — —

தனித்தனியாக குறிப்பிட்ட பணத்தை மகேஸ்வரி நிதியத்தில் செலுத்தியமையால் அவர்கள் சங்கத்திடம் வழங்க முடியாது என்றும் உரியவர்களிடமே வழங்க முடியும் என்று தெரிவித்துள்ளதாகவும் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்.மாவட்ட பாரவூர்தி சங்கத்தின் உறுப்பினர்கள் தமது தற்போதைய உண்மை நிலைமையை வெளிக்கொண்டு வரும் வகையில் பேரணி ஒன்றை நடத்துவதற்கு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

யாழ்.மாவட்ட பாரவூர்திச் சங்கத்தின் விசேட கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் தமது தொழில் வாய்ப்பற்ற அற்ற நிலைமையை எவரும் முழுமையாக புரிந்து கொள்ளவில்லை என்று கவலை வெளியிட்டனர். இதனையிட்டு அரச அதிகாரிகளும் ஏனைய அரசியல் வாதிகளும் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளாது காலம் கடத்துவதால் தாம் தொழில் வாய்ப்பற்ற நிலையில் கடும் பொருளாதாரப் பாதிப்புக்கு உட்பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்தனர். (வ-86)



யாழ்.குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக முஹமட் மக்கி நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி முன்பாக அவரை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேம்சங்கர் மாலை அணிவித்து வரவேற்பதைக் காணலாம். (வ-4)

## சுழிபுரம் அறநெறி பாடசாலைக்கு சமய நூல்கள்

சுழிபுரம், மார்ச் 8

சுழிபுரம் யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பாவனைக்காக இந்து சமய நூல் களை இந்து சமய கலாசார அமைச்சு வழங்கியுள்ளது. இந்த நூல்கள் பாடசாலை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

நூல்களை வாசிக்க விரும்புவோர் பாடசாலை நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு இரவலாக பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்களின் சமய வகுப்பு வாரம் தோறும் நடைபெற்று வருகின்றன. கல்வி கற்கும் மாணவர்களுக்கு வேண்டிய பரிசுகளை வழங்க கனடாவில் வாழும் கு.வி.கந்தசாமி தனது மைந்தன் நினைவாக அறக்கொடை நிதியம் மூலமாக உதவி வருகின்றார். (ஒ-28)

## அபிவிருத்திக் குழு அமைக்க ஏற்பாடு

### சாவகச்சேரி நகர் எல்லைக்குள்

தென்மராட்சி, மார்ச் 8

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வட்டார ரீதியாக அபிவிருத்திக் குழுக்களை அமைப்பதற்கான கூட்டங்களை நடத்த மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் தகவல் வெளியிடுகையில்;

ஒவ்வொரு வட்டாரத்தின் தேவைகள், குறைபாடுகள் இனங்காணப்பட்டு அதற்கு ஏற்ற வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டு வட மாகாண சபை நிதி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி போன்றவற்றை சகல பிரிவுகளுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் திட்டங்கள் தயாரிக்கப்படும்.

இதன் முதலாவது கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணிக்கு சாவகச்சேரி நகர சபையின் முதலாம் வட்டாரத்தில் உள்ள மலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

நகரசபை உறுப்பினர் அ.பாலமயூரனின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள கூட்டத்துக்கு அந்தப் பகுதியில் உள்ள பொது அமைப்புகளான கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையங்கள், விவசாய சம்மேளனம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், விளையாட்டு கழகங்கள், ஆலய திருப்பணி சபைகள், பரிபாலன சபைகள், விவசாய, உற்பத்தி கைத்தொழில் தொடர்புடைய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள வேண்டும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் பிரதேச வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் பிரதேச நலன் விரும்பிகளையும் அவசியம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. (வ-9)

## சிறந்த தொழில்வாய்ப்புக்கு ஆங்கில அறிவு அவசியம்

### பேராசிரியர் சத்தியசீலன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.மார்ச்7

ஆங்கிலமொழிக் கல்வியூடாக எதிர் காலத்தில் சிறந்த தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதுடன் தனிப்பட்ட ரீதியில் எமது அறிவாற்றல்களையும் விருத்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

இதற்கு உரிய கற்றல் செயற்பாடுகளை நாம் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும் என்று உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சத்தியசீலன் தெரிவித்தார்.



*ஆங்கிலக் கல்வி டிப்ளோமா ஆசிரிய மாணவர்களுக்கான அறிவுப்பகிர்வுச் செயலமர்வில் பேராசிரியர் சத்தியசீலன் உரை யாற்றுகிறார். யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலை வர் இராசகுமாரன், பட்டப்பின் ஆங்கிலக் கல்வி நெறிக்கான இணைப்பாளர் கலாநிதி. சரவணபவ ஐயர், தேசிய கல்வி நிறுவக ஆங்கிலப்பாட நெறி இணைப்பாளர் முகுந்தன் மற்றும் கலாநிதி. சிறிகணேசன் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.*

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் ஆங்கிலக் கல்வி டிப்ளோமா ஆசிரிய மாணவர்களுக்கான அறிவுப்பகிர்வுச் செயலமர்வு பட்டப்பின் ஆங்கிலக் கல்வி நெறி மாணவர் சங்கத் தலைவர் சுதாகரன் தலைமையில் கடந்த 25 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியஅவர்தொடர்ந்து கருத்து வெளியிடு கையில்;

தற்காலச் சூழலில் மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியறிவு மிகவும் அவசியமான ஒன்று. அந்த அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய கற்றல் நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம். இந்தக் கற்றல் செயற்பாடுகள் எமக்கு எதிர்காலத்தில் நல்ல தொரு தொழில்வாய்ப்பையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக அமையும் என்று கூறினார். (வ-14)

## குருநகர் மருத்துவமனையின் தேவைகளை நிறைவேற்றித் தரவும்.

### நோயாளர் நலன்புரி சங்கம் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கோரிக்கை

குருநகர், மார்ச் 8

குருநகர் பிரதேச மருத்துவமனையின் தேவைகளை நிறைவேற்றித் தருமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் குருநகர் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

குருநகர் பிரதேச மருத்துவமனையில் இயங்கத் தொடங்கியுள்ள நோயாளர் நலன்புரி சங்கம் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை நேரில் சந்தித்து நோயாளர் நலன்புரி சங்கத்தின் பொதுக் கூட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குருநகர் பிரதேச மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவுக்குரிய அறை, பொதுக் களஞ்சிய அறை, வைத்தியர் ஓய்வு அறை, மருந்து கட்டும் அறை, தாய்ப்பாலூட்டும் அறை என்பவற்றுக்கான இடவசதி இல்லை. மருத்துவமனை வளாகத்தில் இயங்கும் பாடசாலை வைத்திய அதிகாரியின் அலுவலகத்தை வேறு இடத்துக்கு கட்டம் கட்டமாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளல்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குரிய களஞ்சிய அறையை பாடசாலை வைத்திய அதிகாரியின் அலுவலகத்திலுள்ள அறை ஒன்றுக்கு மாற்றுதல், மருத்துவமனையில் பற்சிகிச்சைப் பிரிவு அமைக்க நடவடிக்கை எடுத்தல், மருத்துவமனை வளாகத்தில் போதிய காணி வசதி உள்ளதால் ஆண், பெண் விடுதி அமைக்க நடவடிக்கை எடுத்தல்.

தற்போது குறித்த மருத்துவமனையில் எம்.பி.பி.எஸ். மருத்துவர் ஒருவரே கடமையாற்றி வருகிறார்.

நோயாளர்கள் தொகை அதிகரித்து வருவதால் மேலதிகமாக மருத்துவர் ஒருவரை கடமையாற்றுவதற்கு நியமிக்க நடவடிக்கை எடுத்தல்.

தற்போது ஒரே ஒரு மருத்துவமாது மட்டுமே கடமையில் உள்ளார்.

அவரே சுகாதார வைத்திய அதிகாரியால் நடத்தப்படும் கிளினிக்குக்கு செல்ல வேண்டியுள்ளதால் மேலதிகமாக மருத்துவமாது ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (வ-51)

## கிரண்குமார் ஆரம்பிக்கிறார் புதிய கட்சி

ஹைதராபாத், மார்ச் 8

ஆந்திர மாநில முன்னாள் முதலமைச்சர் கிரண்குமார் ரெட்டி புதிய கட்சி ஒன்றைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"எதிர்வரும் 12ஆம் திகதி ராஜமுந்திரியில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் கட்சியின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் குறித்து அறிவிக்கப்படும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். குறித்த செய்தியாளர் சந்திப்பில் காங்கிரஸ் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர். (ற)

## 'ஜெ' பிரதமரானால் ஆதரவு வழங்குவேன்

### *மம்தா பானர்ஜி அறிவிப்பு*

சென்னை, மார்ச் 8

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை ஆதரிப்பதற்குத் தயாராக உள்ளேன் என்று தெரிவித்துள்ளார் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி.


மம்தா பானர்ஜி

தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிரதமர் பதவிக்கு குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியை ஆதரிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை ஆதரிப்பதற்குத் தயாராக உள்ளேன்.

வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசில் திரிணாமுல் காங்கிரஸும், அ.தி.மு.கவும் இணைந்து பணியாற்றின. எங்களுக்குள் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. காங்கிரஸை திரிணாமுல் காங்கிரஸ் ஆதரிக்காது. மேற்கு வங்க அரசின் பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசு போதிய நிதி வழங்கவில்லை" - என்று தெரிவித்துள்ளார். (ற)

## தேர்தல் விதி மீறல்; ஆத்மி மீது வழக்கு

புதுடில்லி, மார்ச் 8

குஜராத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறினார் என்று தெரிவித்து ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அர்விந்த் கெஜ்ரிவால் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கெஜ்ரிவால் விதிமுறைகளை மீறியதற்கான காணொலி ஆதாரங்கள் தம்மிடம் உள்ளன என்று கட்சி மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் தீபக் மேஹானி தெரிவித்துள்ளதுடன், தேர்தல் ஆணையத்தின் அனுமதி இன்றி ஒலி பெருக்கிகளை கெஜ்ரிவால் பயன்படுத்தினார் என்றும் தெரிவித்துள்ளார்.


அத்துடன் தேர்தல் அலுவலர்கள் முன்னிலையிலே கெஜ்ரிவால் விதிமுறைகளை மீறினார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ற)

## குஜராத் குறித்து மோடி கூறுவதெல்லாம் பொய்

### *அர்விந்த் கெஜ்ரிவால் குற்றச்சாட்டு*

புதுடில்லி, மார்ச்.8

குஜராத் மாநிலம் வளர்ச்சியடைந்து விட்டது என்று அந்த மாநில முதல்வர் நரேந்திர மோடி பொய் உரைக்கின்றார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அர்விந்த் கெஜ்ரிவால்.



அர்விந்த் கெஜ்ரிவால்

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

" மோடியிடம் கேட்பதற்காக நான் 16 கேள்விகளைத் தயார் செய்து வைத்திருக்கின்றேன். மோடிக்கு நேரம் கிடைத்தால் இது குறித்து நேரடியாக பேசவும் தயாராக இருக்கின்றேன். குஜராத் மாநிலம் அபரிமித வளர்ச்சி கண்டுள்ளதாக கூறும் மோடி, எரிவாயு விலையை ஏற்றி உள்ளது ஏன்? ஏனைய மாநிலங்களில் ஒரு யூனிட் சூரிய மின்சக்திக்கு 8 ரூபா அறவிடப்படும்போது குஜராத் மாநிலத்தில் மட்டும் ஏன் சூரிய மின் சக்தி ஒரு யூனிட்டுக்கு 15 ரூபா அறவிடப்படுகின்றது?." என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை, நரேந்திர மோடியை நேரடியாகச் சந்திக்கப் போகின்றேன் என்று தெரிவித்த கெஜ்ரிவால் தனது ஆதரவாளர்களுடன் மோடியின் இல்லம் நோக்கிப் பயணித்தார். எனினும் இடைவழியில் அவரைத் தடுத்து நிறுத்திய பொலிஸார் முதலமைச்சரைப் பார்க்க முன் அனுமதி பெற வேண்டும் என்று தெரிவித்து அவர்களைத் திருப்பியனுப்பியுள்ளனர். (ற)

## தே.மு.தி.க. - பா.ஜ.க. பேச்சுக்கள் ஆரம்பம்

சென்னை, மார்ச் 8

நாடாளுமன்றத் தேர்தலில் யாருடன் கூட்டணி என்பதை நீண்ட நாள்களாக தெளிவுபடுத்தாமல் இருந்த தே.மு.தி.க., பா.ஜ.கவுடன் தான் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாக நேற்று முன்தினம் மாலை அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணிப் பேச்சுக்கள் கடந்த ஆண்டு இறுதியில் ஆரம்பமானபோதே பா.ஜ.க.வுடன், தே.மு.தி.க. கூட்டணி சேரும் என்ற எதிர்பார்ப்பு உருவானது. இதற்கிடையே, தே.மு.தி.க.- பா.ஜ.க.- ம.தி.மு.க. கூட்டணியை அமைக்கவும் சிலர் முயற்சி மேற்கொண்டனர்.

அதை மெய்ப்பிக்கும் வகையில் ம.தி.மு.கவும், பா.ஜ.கவும் கூட்டணிப் பேச்சுக்களை ஏற்கெனவே தொடங்கிவிட்டன. ஆனால் தே.மு.தி.க. மட்டும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தாமல் மௌனம் காத்தது.

இந்த நிலையில் நீண்ட நாள்களாக நிலவி வந்த குழப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் "எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுக்களும் ஆரம்பமாகியுள்ளன" என்று தே.மு.தி.க. நேற்று முன்தினம் மாலை அறிவித்துள்ளது. (ற)

Jaffna Wedding Fair 2014



யாழ் மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரபல திருமண சேவைகள் வழங்குவோர் மற்றும் ஒழுங்கமைப்பாளர்களை ஒரே கூரையின் கீழ் பார்வையிட ஓர் அரிய வாய்ப்பு.

(மணவறை,Settibacks,Cakes,Bridal Makeup,Wedding Cards & Gift, Wedding Car மற்றும் அனைத்து சேவைகளும்)

2014/2015 க்கான சகலவிதமான wedding Bookings 20% Off



Little Asia வின் திருமண மற்றும் அனைத்துரக ஆடைகளும் மாபெரும் விலைத்தள்ளுபடி

மற்றும்

முதன்முறையாக யாழ் மண்ணில்.

Limousine அறிமுகம்

இடம்:- இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி,
63, இந்துக் கல்லூரி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

காலம் - 09.03.2014

நேரம் - மு.ப08.00 –பி.ப08.00 Tel-0777726367



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C/12380)(10.6.3)



சா்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பிலிப்பைன்ஸ் தலைநகர் மனிலாவில் இடம்பெற்ற பேரணியில் பொலிஸாருக்கும் பேரணியில் சென்றவர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. பேரணியாகச் சென்ற மாணவிகள் அந்நாட்டு ஜனாதிபதி மாளிகை முன்பாக ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டனர். அதையடுத்துப் பெருந்தொகையான பொலிஸார் குவிக்கப்பட்டு அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். அதனால் மாணவிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. (ற)

## பனாமாவுடன் உறவுகள் இல்லை - வெனிசுவேலா

கராக்கஸ், மார்ச் 8
பனாமாவுடனான பரஸ்பர உறவுகளை முறித்துக் கொள்வதாக வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அறிவித்துள்ளார்.
மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஹியூகோசாவேஸின்நினைவு தின அனுசரிப்பின்போது அவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.
"பனாமா அரசு அமெரிக்காவுடன் இணைந்து வெனிசுவேலாவுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டி வருகின்றது. பல முறை இது தொடர்பாக பனாமா அரசை நாம் எச்சரித்தோம். வேறு வழியில்லாத நிலையில் அந்நாட்டுடனான ராஜாங்க மற்றும் வர்த்தக ரீதியான ஒப்பந்தங்களை முறித்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளோம். வெனிசுவேலாவின் இறையாண்மை மற்றும் மக்களின் அமைதியான வாழ்க்கையை உறுதிசெய்யவே இந்த முடிவை எடுத்துள்ளோம்" என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)


## சிரியாவில் வலுக்கும் மோதல்கள்

டமாஸ்கஸ், மார்ச் 8
சிரியாவில் அரச தரப்பினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மோதல்கள் அதிகரித்துள்ளன.
அங்கு நடைபெறும் மோதல்கள் தொடர்பான காணொலிகள் இணையத்தளங்களில் வெளியாகியுள்ளன.
கடந்த வார இறுதியில் இருந்து அரச படைகளும் கிளர்ச்சியாளர்களும்கனரகஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# ரஷ்யா வசமானது ஏவுகணைத் தளம்

## உக்கிரமடைகின்றது உக்ரைன் விவகாரம்

மொஸ்கோ, மார்ச் 8
உக்ரைன் அரசுக்குச் சொந்தமான இரு ஏவுகணைத் தளங்களை ரஷ்ய இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் பதவியில் இருந்து அகற்றப்பட்டு தற்போது புதிய இடைக்கால அரசு நிறுவப்பட்டுள்ளது. அந்த அரசை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அறிவித்துள்ள ரஷ்யா, முன்னாள் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சின் வேண்டுகோளின்படி அந்நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றது.
இந்தநிலையில் ரஷ்யா- உக்ரைன் எல்லைப் பகுதியில் உள்ள உக்ரைனுக்குச் சொந்தமான கிரிமீயாவில் உள்ள இரு ஏவுகணைத் தளங்களை ரஷ்ய இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. தெற்கு கிரிமீயாவில் உள்ள கேப்பெய் லண்ட் என்ற இடத்திலேயே இந்த ஏவுகணைத் தளங்கள் அமைந்துள்ளன. இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பெயர் குறிப்பிட விரும்பாத உக்ரைன் இராணுவ அதிகாரி ஒருவர், "ஏவுகணைத்தளங்கள் ரஷ்ய இராணுவத்தால் கைப்பற்றப்பட்டுள்ளபோதும், அங்கு ஏவுகணைகளோ வேறு எந்த ஆயுதங்களோ இல்லை." என்று தெரிவித்துள்ளார்.



கிரிமீயாவில் நிலைகொண்டுள்ள இராணுவக் குழு

அதேவேளை, இந்தக் குற்றச்சாட்டை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மறுத்துள்ளார். "ரஷ்ய இராணுவத்தினர் உக்ரைனின் எந்தப் பகுதியையும் கைப்பற்றவில்லை. அங்குள்ள ரஷ்யாவுக்கு ஆதரவான மக்களே போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்" என்று அவர் தெரிவித்துள்ளார்.
இந்த விவகாரம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது உக்ரைன் அரசு. (ற)

# முற்றுகையிடப்பட்டார் ஐ.நா. சிறப்புத் தூதர்

கீவ், மார்ச் 8
உக்ரைன் நிலவரம் குறித்து ஆராயச் சென்ற ஐ.நாவின் சிறப்பு தூதர் ரோபேர்ட் செர்ரி அந்நாட்டு விமான நிலையத்தில் ரஷ்ய ஆதரவாளர்களால் முற்றுகையிடப்பட்டார்.
உக்ரைனின் க்ரைமியா பகுதியில் அவரை ஆயுதம் ஏந்திய குழுவி னர் தடுத்து நிறுத்தினர். அவர்கள் ரஷ்யாவுக்கு ஆதரவாக கோஷங்களை எழுப்பியவாறு அவரை முற்றுகையிட்டனர் என்று கூறப்படுகின்றது. அதையடுத்து அங்குள்ள விடுதி ஒன்றில் தஞ்சமடைந்த அவர் பின்னர் உக்ரைன் பாதுகாப்புத் தரப்பினரின் உதவியுடன் பத்திரமாக மீட்கப்பட்டார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)



ரோபேர்ட் செர்ரி

# இந்தோனேஷியாவில் பெரும் காட்டுத் தீ

## புகைமண்டலத்தால் பெரும் பிரச்சினை

லண்டன், மார்ச் 8
இந்தோனேஷியாவின் ரியாவ் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள காட்டு தீயினால் சுற்றியுள்ள பிரதேசங்களில் பெரும் புகை மூட்டம் சூழ்ந்துள்ளது. அதையடுத்து ரியாவ் மாகாணத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று அந்நாட்டின் தேசிய பேரிடர் எதிர்ப்பு அமைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
புகைமூட்டம் காரணமாக விமான சேவை. கப்பல் போக்குவரத்து போன்றவை் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பலர் சுவாசம் தொடர்பாக பிரச்சினைகளையும் எதிர்கொண்டுள்ளதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ற)

# பூச்சிகளை உண்டு மூன்று வாரம் உயிர் வாழ்ந்தவர்

பெர்லின், மார்ச் 8
ஜேர்மனைச் சேர்ந்த ஒருவர் மூன்று வாரங்களாகப் பூச்சிகளை மட்டும் உண்டு உயிர் வாழ்ந்துள்ளார்.
டேனியல் டட்சீஸ் என்ற 26 வயது வாலிபர் சாதனை படைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் நடைப்பயணம் ஒன்றை ஆரம்பித்தார்.
அவர் தனது நடைப்பயணத்தின் போது கடந்த பெப்ரவரி 17ஆம் திகதி ஆஸ்திரேலியாவின் அவுட்பேக் என்ற பகுதிக்கு வந்தார். அங்கே வறண்ட பகுதியில் தான் வந்த வழியைத் தவறவிட்டுவிட்டார்.
பசியால் நொந்த அவர் வேறு வழியின்றி அப்பகுதியில் இருந்த பூச்சிகளை உண்டு உயிர் வாழ்ந்து வந்துள்ளார்.
மூன்று வாரங்களுக்குப் பின்னர் பொலிஸாரால் மீட்கப்பட்டார். அதுவரை அவர் பூச்சிகளைப் பிடித்து உண்டே உயிர் வாழ்ந்துள்ளார்.
இதுகுறித்து அவர் கூறுகையில்:
"அந்தப் பகுதியில் புரோட்டீன் சத்து நிறைந்த பூச்சிகள் இருக்கும் போது பசியால் அவதிப்பட முடியாது. அவற்றைப் பிடித்து உணவாக்கிக் கொண்டேன்." - என்று தெரிவித்துள்ளார்.
டேனியல் டட்சீஸுக்கு நீரிழிவு நோய் உண்டு. எனினும் அதனைப் பொருட்படுத்தாமல் 4000 கிலோ மீற்றர் தூரம் நடைபயணம் செய்து சாதனை படைத்துள்ளார். (ற)



## மூன்றாம் வார வெற்றியாளர்கள் (02.03.2014)

உதயன் சூரியகாந்தி

தரும் பரிசு மழை

பல நனையுங்கள்

வெல்லுங்கள் கொண்டாடுங்கள்

வாரம் 50 பரிசுகள் வெற்றி நிச்சயம்

10 வாரங்களுக்கு

**7,500/=** பெறுமதியான 1 பரிசு கூப்பன்

Green Grass

1. தர்மரத்தினம் ஆதீசன்
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

**4,500/=** பெறுமதியான 3 பரிசு கூப்பன்கள்

Kiruba Learners Driving School

01. ராஜஸ்ரீதரன் கிருஷ்ணவாணி
இல.06 முதலாம் ஒழுங்கை, எமில்நகர்,மன்னார்.

02. விநோதன் சுகந்தினி
பாலிநகர், வவுனிக்குளம்.

03. வல்லிபுரம் சுபாசன்
பிள்ளையார் கோயில் வீதி, தும்பளை, பருத்தித்துறை.

**1,000/=** பெறுமதியான 10 பரிசு கூப்பன்கள்

யாழ்ப்பாணம். லலிதா ஜுவலரி

Rasi Collections — மின்சார நிலைய வீதி, யாழ்.

1. நாகரத்தினம் சுகிதா
2 ஆம் வட்டாரம், அத்திப்புலவு
கைவேலி, புதுக்குடியிருப்பு.
2. குணசேகரன் சத்தியாதேவி
வேரவில்,பூநகரி.
3. திருமதி யேசுதாசன் அஞ்சலினா
இல.10/25 கர்த்தர் கோயில் வீதி, கீரிமன்னார்.
4. திருமதி வளர்மதி மகவதாஸ்
3 ஆம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு.
5. ஜெயந்தன் கஜந்தன்
இல.300 மாயவனூர், வட்டக்கச்சி.
6. சுதாகர் தனுஷியா
"விஸ்ணுகிரி" கண்டி வீதி, முல்லையடி, பளை.
7. ஸ்ரீகாந்தன் அபிராம்
சாந்தைவீதி, உடுப்பிட்டி.
8. திருமதி தவக்குமார் சிவறஞ்சினி
கலை மணி வீதி, கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.
9. ஸ்ரீதரன் நிலாஜினி
நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.
10. திருமதி செந்தில்வேல் சந்திரமணி
71, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

**500/=** பெறுமதியான 16 பரிசு கூப்பன்கள்

அபி (pvt) ltd. பேபி மாட்ஸ்
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
55. சுன்னாகம்

கோகில்ஸ் பேபி நீட்ஸ்
65, பிரதான வீதி, நெல்லியடி

PCH NORTHERN PC HOUSE
303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Creative Desk
உடுவில் வீதி,
மானிப்பாய்.

பெஷன் ஹவுஸ்
யாழ்ப்பாணம்.

01. பரநிருபசிங்கம் அருள்தாசன்
இரத்தின இல்லம், வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை.
02. பிரபாகரன் விஜயந்தி
ஊரங்குணை, ஏழாலை வடக்கு, ஏழாலை.
03. வெற்றிவேலு எழிலரசி
புலோலி வடமேற்கு, தம்பசிட்டி, பருத்தித்துறை.
04. கிருஷ்ணசாமி இரவீந்திரன்
2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.
05.திருமதி சிவமணி நாகமுத்து
பாடசாலை வளவு, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
06. ஜெயந்தன் குபிதா
அம்பன், குடத்தனை.
07 . சித்திரவேல் சௌமியா
உபஅஞ்சல் அலுவலகம், அளம்பில்.
08.தயாகரன் அருட்செல்வி
இல.25/2, ஐயனார்புரம், வன்னேரிக்குளம், கிளிநொச்சி.
09. சிவசற்குணசீலன் அருள்பாலன்
76/16 புதிய வீதி, உப்புக்குளம், மன்னார்.
10. சிவகுமாரன் சயந்தன்
இலங்கை மின்சாரசபை, ஏ—9 வீதி, மாங்குளம்.

22. கணேசமூர்த்தி ஆதவன்
காசிப்பிள்ளை கறாஜ், முல்லைத்தீவு, மாங்குளம்.
23. ரகுநாதன் தீபா
56, பிரம்படிவீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
24. சண்முகம் விஜயரெத்தினம்
இல 148/1, படித்த மகளிர் திட்டம், மிருசுவில்.
25. மேனகா தவநேசன்
இல 71/7 ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
26. ஜோதிராசா பிரதீப்
கதிரமலை வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
27. றொபேட் தவச்செல்வம்
பிறின்ஸ் றொனால்டோ செல்வகிரி, மல்வம், உடுவில்.

**200/=** பெறுமதியான 20 பரிசு கூப்பன்கள்

பொதிகை மல்ரி சென்ரர்
புதுக்குடியிருப்பு

அறிவொளி புத்தகசாலை
முல்லைத்தீவு

அருண் ரெக்ஸ்
நெல்லியடி.

தாயன்பு புத்தகசாலை
புதுக்குடியிருப்பு

01. வடிவேல் ரூபதயாளன்
சுட்டைக்காடு, தர்மபுரம்.
02 .ஜெயபாலினி ஜெகதீஸ்வரன்
விவேகானந்தர் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்
03. அஜந்தனா திரவியநாதன்
மருதங்கேணி தெற்கு, தாளையடி.
04. இராமநாதன் கணபதிப்பிள்ளை
2 ஆம் வட்டாரம், பெரியதுறை, நெடுந்தீவு.
05. புனிதவதி கஜேந்திரன்
பிரதேச வைத்தியசாலை, காரைநகர்.
06. முத்துலிங்கம் பிரதீபன்
சின்னடம்பன், நெடுங்கேணி, வவுனியா.
07. பிரேமசிவம் நிர்மலன்
இல.236, சுண்டிக்குளம் சந்தி, தருமபுரம்.
08. சிவானந்தம் உமாசிவம்
இல—90, கற்குழி, வவுனியா.
09. கலாரங்கா கயிலாயநாதன்
5/2, 6 ஆம் ஒழுங்கை, மன்னார் வீதி,
வேப்பன்குளம், வவுனியா.
10. காமராஜ் கிரிதரன்
இல.41, கந்தசாமி நகர், வாரிக்குட்டியூர், வவுனியா.
11. எஸ்.வசீகரன்
375, கொரவபத்தான வீதி, இறம்பைக்குளம், வவுனியா.
12. மகேந்திரன் அன்ரனி
ஒமக்ஸிலிலியா இல.16, அம்பிகைபாலன்
கோட்டம், நெளுக்குளம், வவுனியா.
13.ஆனந்தராஜா ஜஹானி
இல.36 ஆர்.டி.எஸ். லேன், வெளிக்குளம், வவுனியா.
14. சிவகுரு அருளானந்தம்
உபதபால் அருகாமை, வியாபாரி மூலை.
15. சிவகுரு அருளானந்தம்
மயிலாவளை, அல்வாய் வடமத்தி, அல்வாய்.
16. அமிர்தலிங்கம் குகராஜன்
இல. 04, வன்னேரிக்குளம், கிளிநொச்சி.
17. மரியதாஸ் டெனிஸ்ரா.
3 ஆவது மைல் கல், சிலாவத்தை, முல்லைத்தீவு.
18. செல்லத்துரை விஜித்தா
கிராஞ்சி, சிவபுரம், பூநகரி.
19. தங்கராசா சுஜீந்திரன்
அம்பன், குடத்தனை.
20 . லாவண்யா சிவராமன்
"சிவபதி" இல—1 2/1, 2 ஆம் ஒழுங்கை,
ஒயார்சின்னகுளம், வவுனியா.

உதயனுடன் இணைந்திருக்க மறவாதீர்கள்

### கொக்கிளாய் மீனவர்களின் தொழிலுக்குப் பாதிப்பு

கிளிநொச்சி, மார்ச் 8

முல்லைத்தீவு கொக்கிளாய் முதல் பேப்பாறைப்பிட்டி வரையான கடற்பகுதிகளில் கடற்றொழில் செய்வதில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக அந்தப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு கொக்கிளாய் முதல் பேப்பாறைப்பிட்டி வரையான 84 கிலோ மீற்றர் கரையோரப்பகுதிகளில் கடற்றொழில் செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், குறிப்பாக கடற்றொழில் உபகரணங்கள், படகுகள் இன்மையால் தாம் பாதிக்கப்படுவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றர். அத்துடன் இந்திய மீனவர் வருகை சில பகுதிகளில் பிற மாவட்ட மீனவர்கள் வருகை போன்ற காரணங்களாலும் தமது தொழில் பாதிக்கப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிகளில் கடற்றொழிலை வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்ட 4000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றமை குறிப் பிடத்தக்கது. (ஜ-55)

# முத்துஐயன்கட்டு குளத்துக்கு அருகில் சட்டவிரோதமாக கருங்கற்கள் அகழ்வு

***எதிர்காலத்தில் குளம் பாதிக்கப்படலாம் என விவசாயிகள் கவலை***

யாழ்ப்பாணம். மார்ச் 8

ஒட்டுசுட்டான் தட்டயமலை காட்டுப்பகுதியில் முத்துஐயன் கட்டுக் குளத்துக்கு அருகில் கருங்கற்கள் பெருமளவில் அகழப்பட்டு வருகின்றன. இதனால் முத்துஐயன் கட்டுக்குளத்துக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறித்த காட்டுப் பகுதியில் இருந்து கருங்கற்கள் அகழப்பட்டு இரவிரவாக காட்டு வழிப்பாதை ஊடாக வேறு பிரதேசங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. தட்டயமலைப் பகுதியில் ஏற்கனவே நிறுவனம் ஒன்று அனுமதிப் பத்திரம் பெற்று கருங்கற்களை அகழ்வு செய்வதால் அங்கிருந்தே இந்தக் கற்கள் கொண்டு செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் நம்பி இருந்தனர்.

எனினும், பிறிதொரு காட்டுப் பகுதிக்குள் இருந்து அதாவது முத்துஐயன் கட்டுக்குளத்துக்கு அருகில் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக இரகசியமாக கற்கள் அகழப்பட்டு இவ்வாறு கொண்டு செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இவ்வாறு திருட்டுத்தனமாக கற்கள் அகழப்படுவதால் முத்துஐயன்கட்டுகுளம் ஆபத்தை எதிர்நோக்கும்நிலைதோன்றியுள்ளது. எனினும் புவிச்சரிதவியல் சுரங்கத் திணைக்களத்தின் அனுமதியுடனேயே இந்த கல்லகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், முத்துஐயன் கட்டுக்குளத்தில் இருந்து 100 மீற்றர் தொலைவிலேயே கற்கள் அகழப்படுவதால் குளத்துக்கு பாதிப்பு ஏற்படாது என்றும் அதிகாரிகள் மட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப்பகுதி விவசாய அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக சம்பவ இடத்துக்குநேரடியாகச் சென்றுபார்வையிட்ட வடமாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவிக்கையில்,


முல்லைத்தீவு மாவட்டத்தின் சொத்துக்களில் ஒன்றாக காணப்படும் முத்துஐயன்கட்டுகுளத்துக்கு அருகில் கருங்கல் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதனால் குளத்தின் பாதுகாப்பு பலவீனம் அடையலாம். தட்டயமலை, பூந்தோட்டம், முருகனூர், பெரியசாளம்பன் உட்பட பல்வேறு கிராமங்களுக்கு மையமாக முத்து ஐயன் கட்டு குளம் அமைந்துள்ளது.



கல் அகழும் பைகோ இயந்திரம்

இந்தக் குளத்தின் கீழ் தற்போது 6,112 ஏக்கர் விவசாய நிலம் நீர்ப்பாசன வசதி பெறுகின்றது. குளம் புனரமைப்புச் செய்யப்பட்டால் மேலும் 2000 ஏக்கருக்கு நீர் விநியோகிக்க முடியும். குளம் இயற்கையாக அமைந்த கருங்கல் பாறைகளை அணையாகக் கொண்டு இருக்கிறது. தற்போது குளத்துக்கு அருகில் கருங்கல் அகழப்படுவதால் அது குளத்தின் அணைக்கட்டை பாதிக்க வாய்ப்புண்டு. இது குறித்து விரிவாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவுள்ளோம் - என்றார். (ஐ-14-5)

## கிராமிய அபிவிருத்தித் திணைக்கள குறைபாடுகளுக்கு விரைவில் தீர்வு



அமைச்சருடனான சந்திப்பின் போது.

மன்னார், மார்ச் 8

மன்னார் மாவட்டத்தில் உள்ள கிராமிய அபிவிருத்தி சார் திணைக்களங்களில் நிலவும் குறைபாடுகள் வெகுவிரைவில் தீர்க்கப்படும் என வட மாகாண போக்குவரத்து, மீன்பிடி, கிராமிய அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மன்னார் மாவட்ட அலுவலர்களுக்கும், அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த சந்திப்பின் போதே அமைச்சர் மேற் படி உறுதிமொழியை வழங்கி னார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்தி திணைக்களங்களில் நிலவும் குறைபாடுகள், திணைக்களத்தின் எதிர்கால செயற்பாடுகள், தொடர்பாக அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

அலுவலர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று இதன் போது அமைச்சர் உறுதியளித்தார்.

இந்த சந்திப்பில் அமைச்சின் செயலாளர் கே. வரதீஸ்வரன், வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் ஜெ. ஜெ. எஸ். பெலிசியன், பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தவத்த மற்றும் வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மன்னார் மாவட்ட அலுவலர்களும் கலந்து கொண்டனர். (ஐ-56)

## போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மன்னாரில் வாழ்வாதார உதவி

கிளிநொச்சி, மார்ச் 8

மன்னார் மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக லண்டன் அகிலன் பவுண்டேசன் நிறுவனம் பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையின் வேண்டுகோளுக்கிணங்க இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான நிகழ்வு அண்மையில் மன்னார் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது 20 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் மன்னார் ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை, அருட்தந்தை விக்டர், அருட் சகோதரிகள், அகிலன் பவுண்டேசன் நிறுவனத்தின் இணைப்பாளர் வி.ஆர்.மகேந்திரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-18)

## மனைவியை தாக்கிய கணவருக்கு மறியல்


கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் தமது மனைவியைத் தாக்கிப் படுகாயப்படுத்தியவரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன் றம் உத்தரவிட்டது. அதேவேளை நிலுவையாகவுள்ள தாபரிப்புப்பணம் செலுத்தத் தவறினால் பதினாறு மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் கடந்த திங்கட்கிழமை குறித்த நபர், பிரிந்து வாழும் தனது மனைவியைத் தாக்கி தலையில் காயப்படுத்தியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டில் குறித்த சந்தேகநபர் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மறுநாள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

விசாரணைகளை மேற் கொண்ட நீதிவான் குறித்த நபரை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டதோடு அவர் தமது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் என செலுத்த வேண்டிய தாபரிப்புப் பணத்தைச் செலுத்த தவறின் 16 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டார்.

# கரைதுறைப்பற்றில் வீடுகள் கையளிப்பு



புதிய வீடு கையளிப்பின் போது அருட்பணி போல் நட்சத்திரம் அடிகளார் நாடா வெட்டுகிறார்.

முல்லைத்தீவு, மார்ச் 8

லிபரா பவுண்டேஷன் நிறுவனத்தின் நிதி உதவியுடன் அமலமரி தியாகிகள் சபையினரால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அமைக்கப்பட்ட 50 வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கோயில்குடியிருப்பு, மணற் குடியிருப்பு, முல்லைத்தீவு தெற்கு கிராம அலுவலகர் பிரிவுகளைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் வீடற்ற மக்களுக்கென இந்த வீடுகள் அமைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். மோகன்தாஸ், வடமாகாண அமலமரி தியாகிகள் சபையின் குரு முதல்வர் அருட்பணி போல் நட்சத்திரம் அடிகளாரும், லிபரா பவுண்டேஷன் நிறுவனத்தின் இலங்கைக்கான பொறுப்பதிகாரி கிளறன்ஸ், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ். திரேஸ்குமார் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# கிளிநொச்சி சாந்தபுரத்தில் ஓய்வு மண்டபம் திறப்பு


கிளிநொச்சி, மார்ச் 8

கிளிநொச்சி சாந்தபுரத்தில் நன்னீர் மீன்பிடியாளர்கள் இளைப்பாறுவதற்காக ஓய்வு மண்டபம் ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

அங்கு உரையாற்றிய வட மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன்; புரதச்சத்து மிகுந்த நன்னீர் மீன்களை உணவாக உட்கொள்ளும் தன்மைமக்களிடையேகுறைந்து வருகின்றது என தெரிவித்தார்.

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் இரணைமடு நன்னீர் மீன்பிடியாளர்களுக்கென கடற்றொழில் அமைச்சின் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட ஓய்வு மண்டபத்தை கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரட்னாவுடன் இணைந்து திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

இரணைமடு நன்னீர் மீன் பிடி மாத்திரமன்றி வடக்கு கடற்றொழிலாளர்களின் நலன்களுக்காக அமைச்சர் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார். குறிப்பாக தென்னிலங்கை மீனவர்கள் வடக்கு கடலில் மீன் பிடியில் ஈடுபடுகின்றமை தொடர்பில் அமைச்சர் மிகவும் உறுதியாக உள்ளார். தென்னிலங்கை மீனவர்கள் வடக்கு கடலில் சென்று தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்றும் அவர் தெரிவித்திருந்தார். அத்தோடு தென்னிந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பிலும் அவர் எங்கள் மீனவர்களின் நலன்களை முதன்மைப்படுத்தியே செயற்பட்டு வருகின்றார். அது மட்டுமன்றி தமிழ் மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயங்களிலும் அவர் நியாயமாக தனது கருத்துக்களை தெரிவித்து வருகின்றார். அதிக புரதம் கொண்ட நன்னீர் மீன் பாவனை எங்கள் சமூகத்தில் குறைவாகவே காணப்பட்டு வருகின்றது. இது தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். குறைந்த விலையில் அதிக புரதம் கொண்ட மீன் சந்தையில் கிடைக்கின்ற போதும் எங்கள் மக்கள் அதில் ஆர்வம் செலுத்துவது இல்லை. இந்த நிலை மாறுமாயின் நன்னீர் மீன் பிடி தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு வழிவ குக்கும் என்றார். கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் விரிவாக்கல் உத்தியோகத்தர் எஸ். சலீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரட்ன, அமைச்சின் மேலதிக செயலாளர் தேசிய கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஜெயந்த சந்திரசோம மற்றும் அதன் பணிப்பாளர் திருமதி புஸ்பானந்த, கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் இரவீந்திரன், கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் அன்ரன் அன்பழகன், இரணைமடு நன்னீர் மீன் பிடி சங்கத்தின் பிரதிநிதிகள் அங்கத்தவர்கள் என பலர் கலந்துகொண்டனர். (க-18)



ஓய்வு மண்டபத்தை அமைச்சர் ராஜிதவுடன் மாகாண சபை உறுப்பினர் தவநாதன் உதவி திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன் ஆகியோர் இணைந்து திறந்து வைக்கின்றனர்.



மின்கம்பத்துடன் மோதி நிற்கும் வாகனம்

# ஜெனிவாத் தீர்மானம் இலங்கைக்கு பாதிப்பு


## சர்வாதிகார ஆட்சிதான் நாட்டில் நடக்கிறது என்கிறார் செல்வராசா எம்.பி.

மட்டக்களப்பு,மார்ச் 8

அரசு எத்தகைய போலிப் பரப்புரைகளை முன்னெடுத்துச் சென்றாலும் ஜெனிவா தீர்மானம் அரசுக்கு அதிர்வலைகளை ஏற்படுத்தத்தான் போகின்றது. இலங்கையில் குடும்ப சர்வாதிகார ஆட்சியே நிலவுகின்றது என்பதை உலக நாடுகள் சுயமாக விமர்சிக்கும் அளவுக்கு இலங்கையின் அரசியல் பண்பு வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது.

இதனால் இலங்கை அரசு இன்று கதிகலங்கிப் போய் இருக்கின்றது. ஜெனிவாவில் இறுக்கமான தீர்மானம் ஒன்று நிறைவேறத்தான் போகின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு



செல்வராசா

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்தார்.

கோட்டைக்கல்லாறு, திருவள்ளுவர் விளையாட்டுக் கழகத்தின் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுபான்மை மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று அகில உலகமே அக்கறை கொண்டுள்ளது. ஆனால் அரசோடு ஒட்டிக் கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல்வாதிகள் தமிழர்க்கு நியாயம் கிடைக்கக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருக்கின்றனர்.

அபிவிருத்தி என்ற சொல்லை வைத்துக் கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பால் அபிவிருத்தி செய்ய முடியுமா? என்று அரச தரப்பினர் சவால் விடுக்கின்றனர்.

அபிவிருத்தி வேண்டாம் என்று நாங்கள் கூறவில்லை. அது அரசின் கடமை.

மண்முனைப் பால நிர்மாணிப்புக்கு இரு தடவைகள் அரசின் இரு பிரிவினரால் அடிக்கல் நடும் வைபவம் கோலாகலமாக நடைபெற்றது. ஆனால் அதற்கான நிதி சுனாமி நன்கொடையாக ஜப்பான் அரசினால் வழங்கப்பட்டது என்ற உண்மையை மறைத்து அரசு தானே அதற்கு நிதி ஒதுக்கியது போல பாசாங்கு செய்கின்றது.

அரசு எத்தகைய போலீப் பரப்புரைகளை முன்னெடுத்துச் சென்றாலும் ஜெனிவா தீர்மானம் அரசுக்கு அதிர்வலைகளை ஏற்படுத்தத்தான் போகின்றது. கூட்டமைப்பு தெளிவாக உலக அரங்கில் தனது நிலைப் பாட்டை முன்வைத்திருக்கின்றது- என்றார். (ச-31)

# மின் கம்பத்துடன் மோதியது வாகனம்

களுவாஞ்சிக்குடி,மார்ச் 8

மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதியில் நேற்று வெள்ளிக் கிழமை அதிகாலை 2 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் கடும் காயமடைந்துள்ளார்.

கல்முனையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனம், மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதியில் களுதாவளை பகுதியில் சென்று கொண்டிருந்த போது வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள மதகு ஒன்றினுள் பாய்ந்து வீதியின் அருகே கிடந்த மின் கம்பத்துடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த சாரதி களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-32)

# முஸ்லிம்களுக்கு எதிரான அநீதியை கைகட்டி வேடிக்கை பார்க்க முடியாது

## மாநகர சபை எதிரணித் தலைவர் ஹனீபா காட்டம்

அக்கரைப்பற்று , மார்ச்8

அரசின் பங்காளிக்கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருக்கின்றது என்ற ஒரே காரணத்துக்காக முஸ்லிம் சமூகத்துக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் அநியாயங்களையும் பார்த்துக்கொண்டு கைகட்டி இருக்க முடியாது என்று அக்கரைப்பற்று மாநகர சபை எதிரணித் தலைவர் எஸ்.எல்.எம் ஹனீபா தெரிவித்தார்.


இவ்விடயம் குறித்து அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜெனிவா விவகாரம் பேசுபொருளாக இருக்கின்ற ஒரேயொரு காரணத்துக்காக இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு இழைக்கப் பட்டு வரும் அநியாயங்களை மூடி மறைக்கப்பட வேண்டுமென எவரும் எதிர்பார்க்க முடியாது.

இலங்கைக்கு வருகைதந்த மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் களின் பிரச்சினைகள் தொடர்பில் 50 பக்க அறிக்கை ஒன்றை கையளித்தமை குறித்து இப்போது பேரினவாதிகள் கூச்சல் போடுகின்றனர். இதனைப் பயன்படுத்தி அரசிலிருந்து முஸ்லிம் காங்கிரஸை எப்படியாவது வெளியேற்றி விடலாம் என துடிக்கின்றனர்.

நாம் உயிரிலும் மேலாக மதிக்கும் பள்ளி வாசல்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படும் போதும் எமது இஸ்லாமிய பண்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போதும் நாம் மௌனிக ளாக இருக்க வேண்டுமென இனவாதிகள் எதிர்பார்ப்பது சிறுபிள்ளைத் தனமான விடயமாகும்.

முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இருப்பதற்கு பல் வேறு புறக்காரணிகளும் உண்டு. அமைச்சுப் பதவி மட்டும் முஸ் லிம் காங்கிரஸுக்கு ஒருபோதும் முக்கியமானதாக இருந்ததில்லை -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-10)



சம்பளத்தை வழங்குமாறு கோரி வாழைச்சேனை காகித ஆலை ஊழியர்கள் போராட்டம்.

# சம்பளத்தை வழங்குமாறு ஊழியர்கள் போராட்டம்

மட்டக்களப்பு,மார்ச் 8

மட்டக்களப்பு - வாழைச்சேனை காகித ஆலை ஊழியர்கள் தங்களது 3 மாதகால சம்பளத்தை நிலுவையுடன் வழங்க வேண்டும் என பல கோரிக்கைகளை முன்வைத்து மேற்கொள்ளும் தொடர்ச்சியான பணி புறக்கணிப்பு வரிசையில் நேற்று வெள்ளிக்கிழமை ஓட்டமாவடி பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் எங்களது வயிற்றிலடிக்காதே, தொழில்திணைக்களமே, எங்களை 3 மாதங்களாகமறந்து விட்டாயா? 3 மாதச் சம்பளம் எங்கே? தற்காலிக தொழிலாளிகளின் 5 மாதக் கொடுப்பனவுக்கு வழி என்ன உட்பட பல வாசகங்களை ஏந்தியவாறு கோசங்களையும் எழுப்பினர்.

எங்களது சம்பளப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் வாழைச் சேனை காகிதஆலையின் நீர்த் தாங்கி மேல் ஏறி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிரைவிடப்போவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் தெரிவித்தனர். (ச)


## நெஞ்சைவிட்டகலா நினைவலைகள்

30ஆம் ஆண்டு | 7ஆம் ஆண்டு

கண்களை நிறைத்தது

24 . 11 . 1933 | 10 . 02 . 1975

கண்ணீரில் நிறைத்தது

12.01.1984 | 08.03.2007



அமரர்

குருநாதர்.சின்னத்துரை

(முன்னாள் கிராம அலுவலர் - தென்மராட்சி)



அமரர்

சின்னத்துரை.சிவசுதன்

[B.A யாழ்.பல்கலைக்கழகம்]

(முன்னாள் ஆசிரியர் - வரணி மகாவித்தியாலயம்)

இன்ப துன்பங்களில் ஒன்றாய் இணைந்திட்ட
ஒரு கூட்டுக்கிளிகள் எமைவிட்டு காததூரம் நீங்கள் ஓடி
வருடங்கள் பல கழிகின்றன – ஆனால்
நாம் ஒன்றாய் கூடிக் குலாவிய நினைவுகளோ
ரம்பமாய் மனதை இன்றும் அரிக்கின்றதே
நல்லவர் நெடுநாள் வாழ்வதில்லை என்பதை
தங்கள் விரைவான மறைவு நிரூபணமாக்கியது
எம்மைத் துன்பத்திலும் சோதனையிலும் ஆழ்த்த
நினைத்திடும் கொடியவரிடமிருந்து இன்று போல்
என்றும் காத்திட வேண்டுகின்றோம்
நேரிய வழி நின்று தாங்கள் காத்த நற்பெயருக்கு
களங்கம் ஏற்படாது விழுதுகள் யாம் காத்திடுவோம் இது உறுதி.

என்றும் அழியா நினைவுகளுடன்:

குடும்பத்தினர்.

(கைதடி வடக்கு, கைதடி)

71, நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு.

(45422)(12.3.6)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

## நகுலாம்பிகை தம்பு

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/தெல்லிப்பழை மகாஜன கல்லூரி)



தோற்றம் 31★03★1929 | மறைவு 06★02★2014

கடந்த 06.02.2014 அமரத்துவம் அடைந்த தெல்லிப்பழை விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் முள்ளியவளை 4 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்தியம் இன்று (08.03.2014) சனிக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது முள்ளியவளை இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் மறைவின்போது எம்முடன் இருந்து எமது துயரில் பங்குகொண்டு சகலவழிகளிலும் உதவிய உற்றார், உறவினர்கள் மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அரச உத்தியோகத்தர்கள், கல்விச்சமூகம் மற்றும் தொலைபேசி மூலமாகவும் தந்தி மூலமாகவும் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்ட அனைவருக்கும் எமது உளம் உருகிய நன்றிதனைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் இவ்வழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

4 ஆம் வட்டாரம், முள்ளியவளை.

தொ. பே: 021 206 1106, 071 846 3457

(சி/12605)(3.6.4)


குடும்பத்தினர்.



கோப்புப்படம்

## கஞ்சாவுடன் முன்னாள் உறுப்பினர் கைது

கொழும்பு,மார்ச் 8
சிலாபம் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரை 950 கிராம் கஞ்சாவுடன் புதன்கிழமை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்தனர்.
இவருக்கு குளியாபிட்டி பிரதேசத்திலிருக்கும் ஒருவராலேயே கஞ்சா கொண்டு வந்து கொடுக்கப்பட்டு வருகிறது என விசாரணையில் தெரியவந்துள்ளது என்றுபொலிஸார்தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட நபரை சிலாபம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சிலாபம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)



ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் ,பத்தரமுல்லையிலுள்ள நாடாளுமன்ற மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உயிர்நீத்த படையினருக்கான நினைவுத் தூபிக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அருகில் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்னாயக்க காணப்படுகின்றார்.

## கடுவெல நெடுஞ்சாலை மக்கள் பாவனைக்கு

### இன்று திறந்து வைப்பார் மஹிந்த

கொழும்பு,மார்ச் 8
கொட்டாவ - கடுவெல அதி வேக நெடுஞ்சாலை சுற்றுவட்டம் இன்று சனிக்கிழமையும், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் காலி பின்னதுவ முதல் மாத்தறை கொடகம வரையிலான அதிவேக நெடுஞ்சாலை எதிர்வரும் 15 ஆம் திகதியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்படவுள்ளன.
30 கிலோ மீற்றர் நீளமான காலி- மாத்தறை அதிவேக நெடுஞ்சாலை 18 பில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டதுடன், இந்த வீதியில் 5 இடைமாறும் இடங்களும், 8 பெரிய பாலங்களும், 236 சிறிய பாலங்களும் அமைக்கப்பட்டுள்ளன என்று துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் கருத்திட்ட அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்தார்.
கொட்டாவ-கடுவெல அதிவேக நெடுஞ்சாலை சுற்றுவட்டப் பாதையிலேயே இலங்கையில் மிக நீளமான மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)

## தேர்தல் சட்டத்தை மீறியதாக இதுவரை 562 முறைப்பாடுகள்

கொழும்பு,மார்ச்8
தென் மற்றும் மேல்மாகாண சபைத் தேர்தல்களுடன் தொடர்புடைய 562 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.
அதிகளவான முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளன என்று அவர் தெரிவித்தார்.
பெரும்பாலான முறைப்பாடுகள் சட்டவிரோத தேர்தல் பரப்புரை குறித்தும், அரச சொத்துக்கள் தேர்தல் பரப்புரை



ரஞ்சித் கீர்த்தி தென்னகோன்

நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பிலும் பதிவாகியுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# கையாலாகாத கட்சியாக மு.கா. இல்லை என்கிறார் ரவூப் ஹக்கீம்

## நாங்கள் செய்த உதவிகள்தான் மஹிந்த ஆட்சி நீடிக்க காரணம் என்றும் தெரிவிப்பு

கொழும்பு. மார்ச்8
அரசில் தேவையற்ற ஒரு கட்சியாக நாங்கள் இருக்கவில்லை. ஜனாதிபதிக்கு பெரிய உதவியொன்றைச் செய்துவிட்டுத் தான் அரசில் இருக்கிறோம். நாங்கள் செய்த உதவியால் தான் இந்த ஆட்சி நீடிக்கின்றது என்று நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
மேல் மாகாணசபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கொழும்பு - 15, ஹேன முல்லை முகாம் பிரதேசத்தில் புதன்கிழமை நடைபெற்ற பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாம் அரசுக்கு பேருதவியை செய்திருக்கின்றோம். 18 ஆவது அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு நாங்கள் ஆதரவு வழங்கியதன் பயனாகவே, ஜனாதிபதி 3 ஆவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வழிபிறந்திருக்கிறது. அதன் காரணமாகத்தான் அவரது கட்சிக்குள்ளேயே எல்லோரும் அடங்கிப் போயிருக்கிறார்கள். அல்லாது விட்டால் அவர்களில் அதிகமானோர் அவரைக் கைவிட்டு விட்டுப் போயிருப்பார்கள்.
என்னைத் தாக்கிப் பேசுவதில் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச என்பவர்களோடு தற்போது அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் இணைந்து கொண்டிருக்கிறார். ஏன் இவர் அரசோடு ஒட்டிக்கொண்டிருக்கிறார்? தூக்கி வீசிவிட்டு வெளியில் வர வேண்டியது தானே? என்று ரிஷாத் கேள்வி எழுப்புகின்றார். அவர் மேற்குறித்த விடயத்தை நன்கு உணர வேண்டும்.
என்னை அரசை விட்டு வெளியே போகச் சொல்வதற்கு ரிஷாத் பதியுதீன் யார்? ஜனநாயக நாடொன்றில் அமைச்சரவை இருப்பது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடி முடிவு மேற்கொள்ளத்தான். அங்கு எனது சமூகத்துக்காக பேசுவதில் ஒரு தவறுமில்லை.
பள்ளிவாசல்களை தாக்கும் போதுதான் முஸ்லிம் சமூகத்தின் கோபம் பன்மடங்கு அதிகரிக்கின்றது. ஆனால், அதனை இன்னும் சரிவர புரிந்துகொள்கிறார்கள் இல்லை. அநியாயங்களை தட்டிக் கேட்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது.
தெஹிவளை கடவத்தை வீதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் தொடர்பில் நீதிமன்றத்துக்குச் சென்று ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. நீதியமைச்சர் என்ற காரணத்தினால் இங்கு அதைப்பற்றி என்னால் பேச முடியாது.
இந்த நாட்டில் பள்ளிவாசல்களை நிர்மாணிப்பதற்கு வக்பு சபை அனுமதி வழங்குகிறது. நான் இலங்கையில் முஸ்லிம் சமய, கலாசார விவகார அமைச்சராக மூன்று தடவைகள் பதவி வகித்திருக்கிறேன்.
சந்திரிகாவின் ஆட்சியிலும், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த பொழுதும் அந்தப் பதவிகளை மாறி மாறி நான் வகித்திருக்கிறேன். ஆனால், அப்பொழுது இவ்வாறான பிரச்சினைகளுக்கு நாங்கள் முகம் கொடுக்கவில்லை.
ஆனால், இப்பொழுது எங்கிருந்தோ பிரச்சினைகள் உருவாகின்றன. இவற்றினால் தான் சர்வதேசத்தின் கவனம் எமது நாட்டின் பக்கம் திரும்பியிருக்கின்றது. முஸ்லிம் நாடுகளுக்கு நாங்க ளாக இவைகள் குறித்துச் சொல்ல வேண்டியதில்லை.- என்றார். (ச-10)



கொழும்பு - 15, ஹேன முல்லை முகாம் பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் உரையாற்றினார்.

## மீண்டும் பரவுகிறது டெங்குக் காய்ச்சல்

### சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு,மார்ச் 8
கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதிகள் உட்பட 10 மாவட்டங்களில் மீண்டும் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் ஐயாயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று அமைச்சின் தொற்று நோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்தியர் பபா பலிஹவடன தெரிவித்தார்.
கொழும்பு மாவட்டத்திலேயே அதிக அளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். களுத்துறை மாவட்டத்திலும் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் நிலவுகிறது என்று அவர் கூறினார்.
மேல் மாகாணத்தின் சில மாவட்டங்களிலும் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகளவு காணப்படுகிறது.
கடந்த வருடத்தின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில்,

கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளிலும், தெஹிவளை, மொரட் டுவை, கடுவெல, கொலன்னாவை உள்ளிட்ட பகுதிகளிலும் டெங்கு காய்ச்சல் வெகுவாக பரவி வருகிறது.

— — — — — —

கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளிலும், தெஹிவளை, மொரட்டுவை, கடுவெல, கொலன்னாவை உள்ளிட்ட பகுதிகளிலும் டெங்குக் காய்ச்சல் வெகு வேகமாகப் பரவி வருகிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.
• டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 25 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## விபசார நிலையத்தில் இரு பெண்கள் கைது

கொழும்பு, வெள்ளவத்தையிலுள்ள ஹொட்டலொன்றில் விபசாரத்தை நடத்தி வந்தனர் எனக் கூறப்படும் 2 பெண்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரி வித்தனர். அளுத்கடை நீதிவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையைத்தொடர்ந்து அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் .(ச)

## மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்துகிறது தேசிய கீதம்

### சிங்களத்தில் மட்டும் பாட வேண்டும் என்கிறார் சம்பிக்க

கொழும்பு,மார்ச் 8
தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டுமே பாடப்பட வேண்டும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டின் அரசமைப்புக்கு அமைவாக தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டுமே பாடப்பட வேண்டும்.
தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைப்பது அரசமைப்புக்கு முரணானது. பொது நிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தேசிய கீதம் எவ்வாறு இசைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
அந்த விடயங்களை பின்பற்றாதவர்கள் அரசமைப்பை மீறியவர்களாகவே கருதப்படுவர். தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதன் பின்னர், தமிழ் மொழியில் இசைப் பதில் தவறில்லை. எனினும் சில பகுதிகளில் தமிழ் மொழியில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. மக்கள் விரும்பியவாறு தேசிய கீதத்தை இசைக்க அனுமதிக்க முடியாது. அவ்வாறு செய்ய வேண்டுமாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் -என்றார். (ச)



சம்பிக்க ரணவக்க

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com


## அமெரிக்காவின் காதுகளில் இந்தக் கோரிக்கை விழுமா?

ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அமெரிக்கா அதிகாரபூர்வமாக தீர்மானம் எதனையும் இன்னமும் இறுதியாக முன் வைக்கவில்லை. இப்பொழுது வெளிவந்திருப்பது அந்தத் தீர்மானத்தின் உத்தேச முன்வரைவு மட்டும்தான்.

இருந்தாலும் அமெரிக்க தரப்பில் மனித உரிமைகள் சபை 25 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னராக வெளிப்படுத்தப்பட்ட பரப்புரைகளுக்கும், ஆரவாரமான செயற்பாடுகளுக்கும், அதனால் வடக்கு, கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த எதிர்பார்ப்புகளுக்கும் முற்றிலும் பொருத்தமற்ற-எதிர்மாறான வகையில் இந்தத் தீர்மான முன்வரைவு அமைந்திருப்பதுதான் ஏமாற்றமளிப்பதாக, அதிர்ச்சியளிப்பதாக, முகம் சுளிக்க வைப்பதாக மட்டுமல்ல அமெரிக்காவின் நிலைப்பாட்டில் கடைசி கட்டத்தில் மனமாற்றம் ஏற்படும் வகையில் ஏதும் நடந்துவிட்டதோ என்ற வகையில் சிந்திக்கும்படியாகவும் அமைந்திருக்கிறது.

தீர்மானம் மிகவும் வலுவற்றதாக இருப்பது குறித்து அரச தரப்பினர் குதூகலமடைந்திருப்பது நியாயம்தான். அவர்கள் அமெரிக்கத் தீர்மானத்தை நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த தமிழ்த் தரப்பினரைக் கிண்டல் கேலி செய்து மகிழ்கிறார்கள். எதுவானாலும் அமெரிக்கத் தீர்மானம் இவ்வாறு வலு விழந்துள்ளமைக்கான காரணம்தான் என்னவாக இருக்க முடியும்?

★ ஜெனிவா மாநாட்டை முன்வைத்து இலங்கை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அமெரிக்காவில் மேற்கொண்ட பரப்புரைகள் நன்றாக வேலை செய்திருக்கின்றன என்பது ஒருவாதம். ஜெனிவா மாநாடுகளில் கலந்து கொண்டு மனித உரிமை ஆணையாளர் மீது வசை பாடுவதிலேயே அதிக கவனம் செலுத்திய சில அமைச்சர்களைப் போலன்றி கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்படும் முறை-இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள பரிந்துரைகள் பற்றியெல்லாம் வோஷிங்டனில் வெள்ளைமாளிகையுடன் செல்வாக்குள்ள வட்டாரங்களில் பரப்புரை செய்திருந்தார். அதுமட்டுமல்ல ஏனைய பரிந்துரைகளை செயற்படுத்த மேலும் அவகாசம் தேவை என்பதையும் வலுவாக வற்புறுத்தியிருந்தார்.

அதுமட்டுமல்லாது அவரும் அவருடன் இணைந் திருந்தவர்களும், அரசு சார்பில் நியமித்திருந்த பிரசார முகவர் அமைப்புகளும் அமெரிக்க முக்கிய பிரமுகர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகளில் அமெரிக்காவுடன் நெருக்கமாக செயற்படுவதற்கு இலங்கை அரசு ஆர்வம் கொண்டிருப்பதாக தெரிவித்திருந்ததுடன் ஏற்கெனவே சீனா இந் நாட்டின் உள்ளே பல குறுக்கு வழிகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டியிருந்தன. இது இலங்கையின் வெளிநாட்டு கொள்கையில் ஒரு மாற்றத்தை உணர்த்துவதாகவும் இருந்திருக்கலாம்.

★ இதைவிட அதேகாலகட்டத்தில் இஸ்ரேலுக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ராஜபக்ஷ அமெரிக்க சார்பான அந்த நாட்டின் பிரதமரும் அமெரிக்க மேல்மட்ட தலைவர்களிடம் செல்வாக்கு பெற்றவருமான பெஞ்சமின் நிதன்யாகுவை சந்தித்து பேசியபோது தமது நிலைப்பாட்டை எடுத்துக்கூறி இலங்கையின் தரப்பில் அமெரிக்காவின் போக்கை மாற்றுவதற்கு முயற்சி மேற்கொண்டிருக்க முடியும் என்றும் கருத இடமுண்டு.

★ இவை தவிர ஐரோப்பிய நாடுகளில் இப்பொழுது முன்னிலை பெற்றுள்ள உக்ரேன் விவகாரமும் அமெரிக்க நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்படச் செய்திருக்க முடியும்.

எதுவானாலும் மனித உரிமைகள் சபையில் இன்னமும் வலுவான தீர்மானம் ஒன்றை முன்வைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டிருப்பது அமெரிக்காவின் காதில் விழுமா என்பது தெரியவில்லை.

இலங்கையில் தமிழர் பிரச்சினை தீர்வுக்கு தடங்கலாக இருப்பதற்கான காரணமாக அனைத்து கட்சி நாடாளுமன்றக் குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வராமலிருப்பதையே வெளியுறவு அமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது தொடர்பாக பல முறையும் தனது நிலைப்பாட்டை எடுத்துக்கூறிவிட்டது.


அதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்குமிடையில் சர்வதேச நடுவர் மேற்பார்வையில் பேச்சுக்கள் நடத்தப்படுவது உட்பட மூன்று முக்கிய கோரிக்கைகளை அமெரிக்கத் தீர்மானத்தில் உள்ளடக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

இது அமெரிக்கத் தரப்பின் காதுகளில் விழவேண்டும்-விழும் என்று எதிர்பார்ப்போம்.

# பான் கீ-மூன்

## பரிகாரம் தேடிக் கொள்வாரா?

சேரலாதன்




ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை வெளியிட்ட அறிக்கையைத் தாம் வரவேற்பதாக ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ-மூன் தெரிவித்துள்ளமை இலங்கை அர சுக்கு நிச்சயமாகக் கலக்கத்தைக் கொடுத்திருக்கும். இலங்கையைப் பொறுத்தளவில் ஐ.நா.சபையை அது ஒரு பொருட்டாக மதிப்பதாகத் தெரியவில்லை. அதிலும் பான் கீ-மூன் தமது சொற்படி ஆடக் கூடியவர் என்ற மதிப்பீடும் அதனிடம் உண்டு.

இறுதிப் போரின்போது இலங்கையில் நிகழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான போர்க் குற்றங்களுக்கு ஐ.நாவும், அதன் பொதுச் செயலாளரும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் வெள்ளைக் கொடிகளுடன் சரணடையச் சென்றவர்கள் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டமைக்கு ஐ.நாவும் ஒரு காரணமெனக் குற்றம் சாட்டப்படுகின்றது. ஏற்கெனவே இந்த விடயத்திலும், ஏனைய போர்க் குற்றங்கள் இடம்பெற்றதிலும் ஐ.நாவின் கையாலாகாத தன்மை தொடர்பாகப் பகிரங்கமாகவே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பான் கீ-மூன் ஒரு மனச்சாட்சியுள்ள மனிதராக இருந்திருந்தால் தமது பதவியிலிருந்து எப்போதோ விலகியிருப்பார். ஆனால் அவர் இதுவரை தம்மிடம் மனச்சாட்சி இருப்பதை வெளிப்படுத்தவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், சர்வதேச சட்டங்களை மீறியமை தொடர்பான நவிப்பிள்ளையின் அறிக்கை தொடர்பாக எவருமே சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. அவர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராகப் பொறுப்புக்களை ஏற்றபின்னர் அவரது பணிகள் தொடர்பாக உலக நாடுகள் பலவும் பாராட்டியுள்ளன. ஒரு நேர்மையான செயற்பாட்டாளர் என்ற வகையில் ஐ.நா.சபைக்கே அவர் பெருமை சேர்த்தார். அவர் தமிழ் இனத்தைப் பிரதிபலிக்கும் தென்னாபிரிக்கக் குடும்பமொன்றில் பிறந்து தமது சுய முயற்சியால் தற்போதைய உயர் நிலைக்கு உயர்ந்துள்ளார். ஆனால் இலங்கை அரசு தனது வழக்கமான பாணியில் அவரது அறிக்கையை நிராகரித்துவிட்டது. ஆனால் பான் கீ-மூன் இதனை வரவேற்றுள்ளமை இலங்கை அரசைச் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது.

உலக நாடுகளின் நீதி அமைப்புக்களின் பிரகாரம் குற்றம்சாட்டப்படும் ஒருவர் தம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு எதிரான தமது பக்க நியாயங்களைத் தெரிவித்து அதிலிருந்து விடுபடுவதற்கு முயல்வதே வழக்கமாக இருந்து வருகின்றது. இதற்கு மாறாக ஆரம்பத்திலேயே தம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தவறானவையென எழுந்தமானமாகக் குறிப்பிடுவதில் அர்த்தமே இல்லை. தற்போது இலங்கை அரசும் இதே பாணியில்தான் காய்களை நகர்த்தி வருகின்றது. போர் ஓய்ந்த பின்னர் ஐ.நா.பொதுச் செயலாளர் இலங்கைக்கு வருகை தந்தார். பல இடங்களுக்கும் சென்றார். இடம்பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாம்களையும் பார்வையிட்டார். இதனால் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களில் நம்பிக்கைக் கீற்று தெரிய ஆரம்பித்தது. ஆனால் அவரது வருகையால் பெரியளவில் பயன் எதுவும் கிட்டியதாகத் தெரியவில்லை.

ஜப்பானிய விசேட தூதுவர் அகாசியின் வருகையை ஒத்ததாக, பயனற்ற ஒன்றாகவே இவரது வருகையும் அமைந்துவிட்டது. இலங்கை அரசு வழக்கம்போல சில வாக்குறுதிகளை ஐ.நா. பொதுச் செயலரிடம் அள்ளி வீசியது. இவையெல்லாம் பான் கீ-மூனுக்குக் கொடுத்த அல்வா என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஏனென்றால் எத்தகைய ஆள்களுக்கும் அல்வா கொடுப்பதில் எம்மவரை எவராலும் மிஞ்ச முடியாது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்து அதனூடாக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகக் கூறி சர்வதேசத்தை ஏமாற்ற முற்பட்ட மஹிந்த அரசு, தற்போது மூன்றாவது தடவையாகவும் மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்படுமென ஒருபோதுமே எண்ணியிருக்க மாட்டாது. இதனால் அவசரம் அவசரமாக மேலும் அவகாசம் கோரும் முயற்சிகளிலும் ஈடுபட்டது. ஆனால் எதுவுமே நடக்கவில்லை. தற்போது அடங்கிப் போனால் என்னவெனச் சிந்திக்கும் அளவுக்கு நிலைமை மோசமாக மாறிவிட்டது.




குறிப்பாக தற் போதைய ஐ.நா. பொதுச் செயலாளரான பான் கீ-மூன் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட பின்னர் ஐ.நாவின் செயற்பாடுகள் தரம் தாழ்ந்து காணப் படுகின்றன. அதிலும் இலங்கையின் இறுதிப் போரின்போது அவர் செயற்பட்டவிதம் அவர் வகிக்கும் பதவிக்கு மாசு கற்பிப்பதாக அமைந்துவிட்டது என்றே கூறமுடியும். பல ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதன் பாவத்தை அவரும் சுமக்கத்தான் வேண்டும்.


இந்த நிலையில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசுக்கு ஆதரவான சில குரல்கள்.எழ ஆரம்பித்துவிட்டன. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் பிரேரணை சமர்ப்பிக்கப்படும் நாள் நெருங்கும்போது இனரீதியான ஒற்றுமையைத் தென் பகுதியில் இன்னமும் அதிகளவில் எதிர்பார்க்க முடியும். நீதி, நியாயங்களை ஒதுக்கிவிட்டு இவ்வாறான இனரீதியான சிந்தனைகள் எழுவதன் காரணமாகவே இலங்கை என்னும் அழகிய நாடு அலங்கோல நிலைக்கு மாறி வருகின்றது.

ஐ.நா.சபை வெறுமனே ஒரு சபை என்ற அளவில் மட்டுமே பார்க்கப்படக் கூடியதல்ல.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் உலகில் அமைதியையும், சமாதானத்தையும் நிலைநிறுத்த வேண்டும் என்ற நோக்குடன் உலக நாடுகள் அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டதொரு பெருமை வாய்ந்த அமைப்பாகும். உலகின் எந்தக் கோடியில் முரண்பாடுகள் தோன்றினாலும் அதில் தலையிட்டுத் தீர்வு காண வேண்டிய மிகப்பெரிய பொறுப்பும், தார்மீகக் கடமையும் அதற்குண்டு. ஆரம்பத்தில் எல்லாமே சீராக இடம்பெற்று வந்தன. ஆனால் பின்னர் இதன் நம்பகத்தன்மையே கேள்விக்குறியாக்கப்படும் அவலநிலை தோன்றியுள்ளது. குறிப்பாக தற்போதைய ஐ.நா. பொதுச் செயலாளரான பான் கீ-மூன் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட பின்னர் ஐ.நாவின் செயற்பாடுகள் தரம் தாழ்ந்து காணப்படுகின்றன. அதிலும் இலங்கையின் இறுதிப் போரின்போது அவர் செயற்பட்டவிதம் அவர் வகிக்கும் பதவிக்கு மாசு கற்பிப்பதாக அமைந்துவிட்டது என்றே கூறமுடியும்.

பல ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதன் பாவத்தை அவரும் சுமக்கத்தான் வேண்டும்.

தற்போது கூட அவர் தனது நேர்மைத் தன்மையை நிரூபிப்பதற்கான சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. வழக்கம்போல ஏற்றுக்கொள்ள முடியாத அறிக்கைகளை அவர் விடுப்பதை நிறுத்திவிட்டு மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவிருக்கும் பிரேரணை இலங்கை மீது தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் முழுமனதுடன் அவர் செயற்பட்டுக் காட்ட வேண்டும். அப்போதுதான் அவர் கடந்த காலங்களில் புரிந்த தவறுகளுக்குப் பரிகாரமாவது கிடைக்கும்.

பான் கீ-மூன் இதிலிருந்து மேலும் தவறுவாரேயானால் ஐ.நாவின் வரலாற்றிலேயே ஒரு மோசமான மனிதராகவே அவரை எதிர்காலம் கணிக்கும் என்பதில் ஐயமே இல்லை.

# மாணவர்களும் போட்டிகளும்

பாடசாலைகளில் கலைத்திட்டத்தினூடாகக் கொண்டுவரப்பட்ட கவின் கலைப் பாடங்கள் "போட்டிகளாலும், பொறாமைகளாலும்" தமது இலக்குத் தவறி நிற்கின்றன. கல்வியிலேற்பட்ட போட்டிகளும், கலைகளில் ஏற்பட்ட போட்டிகளும், பாராட்டுதல்களும், வாழ்த்துக்களும் என பிள்ளைகள், பெற்றோரால் ஒரு 'மாய உலகிற்குள்' தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அரியாலையூர்,
செ.செல்வதாஸன்



பாடசாலைகளில் முதலாவது தவணை ஆரம்பித்த கையோடு விளையாட்டுப் போட்டிகள் வெகு முனைப்புடன் இடம்பெற்று வருகின்றன. இவை நிறைவெய்தியதும் தமிழ்த் திறன் கலைப்போட்டிகள் ஆரம்பமாகும். பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் என அது பரந்து விரியும்.

தென்பகுதிப் பாடசாலை ஒன்றில் வகுப்பில் ஆறாவதாகவோ ஏழாவதாகவோ வரும் மாணவன் ஒருவர் பரிசளிப்பு நிகழ்வில் பரிசு பெற, முதலாமிடம் பெற்ற மாணவன் புறுமொதுக்கப்பட்டதாகப் புகார் ஒன்று செய்தியாக வெளிவந்திருந்தது. அதற்கான விளக்கத்தையும் அதிபரிடமிருந்து பெற்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. விளக்கம் வியாக்கியானத்துக்கு அப்பால், நம்பகமும், நடுவு நிலைமையும் மாணவர்களும், பெற்றோரும் உணரத்தக்கதாகவும் வெளிப்படைத் தன்மை வாய்ந்ததாகவும் அமைய வேண்டும். அதற்கேற்ற நடவடிக்கை அவசியம்.

அதிலும், பாடசாலை ஒன்றில் பரிசு பெறும் மாணவர் ஒருவர் அதே பாடசாலை ஆசிரியர் ஒருவரின் பிள்ளையாக இருப்பின், அதற்கு கண், காது, மூக்கு வைத்து பெரிய பிரளயமே நடத்தி விடும் போக்கும் உள்ளது. போட்டி அமைப்பாளர்கள் இத்தகைய 'புறம்பேசல்', 'சேறு பூசல்' நிகழாதவாறு ஏற்பாடுகளை மேற்கொள்ளல் சாலச் சிறந்தது.

பாடசாலைகளில் கலைத்திட்டத்தினூடாகக் கொண்டுவரப்பட்ட கவின் கலைப் பாடங்கள் "போட்டிகளாலும், பொறாமைகளாலும்" தனது இலக்குத் தவறி நிற்கின்றன. கல்வியிலேற்பட்ட போட்டிகளும், கலைகளில் ஏற்பட்ட போட்டிகளும், பாராட்டுதல்களும், வாழ்த்துக்களும் என பிள்ளைகள், பெற்றோரால் ஒரு 'மாய உலகிற்குள்' தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மலிந்த விளம்பரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தார்மீகமாக வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்றமையும் அவதானிக்கத்தக்கது.

கலைகளற்ற, வெறும் போட்டிக் கல்வி ஊடாக, கல்வியியலாளர்களை உருவாக்கிய தன் மூலம், புதிய கண்டுபிடிப்பாளர்களையும், ஆக்கத்திறன் மிக்கவர்களையும், படைப்பாளிகளையும் நாம் திசை மாற்றிக் கொண்டு வருகின்றோம்.

இந்த நிலை தொடரும் வரை மக்கள் "மாக்களாகவே' வளருவர்.

அவர்களை மீட்டெடுத்து நல்வழிப்படுத்த, கிராமங்கள் தோறும் உள்ள சனசமூக நிலையங்கள், நாடக மன்றங்கள், இலக்கிய வட்டங்கள், சமய கலை நிறுவனங்கள், பண்பாட்டு மையங்களாலேயே முடியும். அவர்கள்தமது ஆயுதமாக 'கலைகளைக்' கையிலெடுத்தலே இன்றைய சமூகத்தை மீட்கும் வழியாகும். ஐம்பது, அறுபது வருடங்களுக்கு முன்னர் தொடங்கப் பெற்ற சனசமூக நிலையங்கள். அந்தக்காலத்தில் கல்வி வாய்ப்பினையும், கலை, விளையாட்டு வாய்ப்பினையும் வழங்கி ஓர் ஆரோக்கியமான சமூகத்தினை உருவாக்கியிருந்தனர். பல சமூகங்கள் தமது இருப்பினை நிலை நிறுத்தவும், அடுத்த கட்ட சமூக அசைவியக்கத்துக்கும் இவை பெரும் பங்காற்றியிருந்தன. அதனைக் கருத்திற்கொண்டு, இன்றைய சவால்களுக்கு முகம் கொடுக்கத்தக்கவாறு மேலும் புதுப்பித்து, அறிவியல் அணுகுமுறைகளுடன் அத்தகைய பொற்காலத்தினை மீண்டும் கொண்டு வர சமூக உயர் நிலையிலுள்ளவர்கள் முன்வர வேண்டும்.



முன்பெல்லாம் சமூகத்தில் உயர் மட்டத்திலுள்ளவர்கள் சமூக மக்களுடன் ஒன்றிணைந்து அவர்களது முன்னேற்றத்துக்கு வழி காட்டினர். தற்போது அத்தகையவர்கள் சமூகத்திலிருந்து தம்மை வேறுபடுத்தி' தாம் உண்டு தமது பதவி உயர்வு உண்டு என்றவாறாக உள்ளனர். அவர்களை வலிந்து இழுத்து அவர்களது ஆலோசனைகளைப் பெற சமூக நலன் விரும்பிகள் ஆர்வம் காட்டாமையும் ஒரு குறைபாடாகும். எங்கோ ஓரிடத்தில் இவற்றிற்கிடையே ஒரு நல்லிணக்கம் ஏற்பட வேண்டியது சமூக மேம்பாட்டுக்கு அவசியம்.

## தவக்காலச் சிந்தனை

### நடு நிலையை மதிப்போம்

சனிக்கிழமை பொதுவாக அன்னை மரியாவை நினைவுகூரும் நாள். தவக்கால சனிக்கிழமைகளில் இயேசுவின் பாடுகளோடு ஒன்றித்து, தன் கண் முன்பாகவே அநியாயமாகக் கொல்லப்பட்ட தன்மகன் இயேசுவின் உடலைத் தன் மடியில் சுமந்த வியாகுல அன்னையாக மரியாவைக் காண்கிறோம்.

"சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க் கணி" அதாவது "சமமாக நின்று பொருளின் நிறையை வரையறுக்கும் துவாக்கோல் போல் மனதில் சமத்துவ உணர்வோடு இருத்தல் அறிவு நிறைந்தோர்க்கு அழகு" என்கிறார் திருவள்ளுவர்.

மறைநூல் அறிஞர்களும், பரிசேயரும், யூத சட்டங்களை நன்கு கற்றவர்களாகக் கருதப்பட்டனர். ஆயினும் அவர்கள் நடுநிலையை மதிக்கவில்லை. ஏழைகளையும், வரிதண்டுபவர்களையும், நோயுற்றோரையும், பிற இனத்தாரையும் பாவிகளாகக் கருதி ஒதுக்கினர்.

இந்தச் சிந்தனையை இயேசுக் கிறிஸ்து உடைத்தெறிகிறார். பாவிகள் என ஒதுக்கப்பட்டோரைத் தேடிச் சென்று அவர்களோடு பழகி, உணவருந்தி இவ்வுலகில் எல்லோரும் சமம் என வாழ்ந்து அதற்காக உயிர்தந்த இயேசுவின் பாடுகளைச் சிந்திக்கும் நாம் நமக்கு அடுத்திருப்பவர்களை எவ்வாறு காண்கிறோம்? இழிவாகவா? இறைவனின் பிள்ளைகளாகவா?

*அருட்பணி அ.ம.ஸ்ரீபன், செ.தா.*
*அருள் ஆச்சிரமம்*
*யாழ். கோயில் வீதி,*

## வாசகர் திருமுகம்

### கிறிஸ்தவ அடிப்படைக் கொள்கைகளுக்கு பாதகம் விளைவிக்கும் மத அலுவல்கள் அமைச்சின் விளம்பரம்

இலங்கை சுதந்திரம் அடைந்தது என்று கூறப்பட்டாலும் 1948 இல் இருந்து உருவான அரசியல் கட்சிகள் அனைத்து இன மக்களும் ஒரு தாயின் பிள்ளைகள் என்பதை மறந்து பெரும்பான்மை, சிறுபான்மை என்ற இனவாதத்துடன் மதவாதத்தையும் கலந்தபடியால் தேசம் அழிவின் பாதைக்குச் செல்ல வித்திட்டதுடன் இன்று ஜெனிவா போன்ற அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுப்பதுடன் தேசத்தின் கீர்த்தி பண்புகளை இழந்துள்ளது.


அன்பையும், அகிம்சையையும் பிரதானமாகக் கொண்ட மதக் கொள்கைகளை மதத் தலைவர்கள் சிலர் பேரினவாத மத வெறியாக மாற்றியதோடு அடாவடித்தனங்களை குழுக்களாக மேற்கொண்டு இன்று நாடாளுமன்றம் வரை மதவாதக் கட்சியாக உருவாகியுள்ளது கவலைக்குரிய விடயமே.

கடந்த காலங்களில் முஸ்லிம் இன மக்களுக்கு அவர்களுடைய மதக் கோட்பாட்டை மேற்கொள்ள முடியாதவாறு இடம்பெற்ற பிரச்சினைகள் தாம் அறிந்ததே. அத்தோடு இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டுத் தகர்க்கப்பட்டதும் நாம் அறிந்ததே. இதற்காக அநேக அரசியல் மதத் தலைவர்கள் குரல் கொடுத்து வந்தாலும் அவைகள் செவிடன் காதில் ஊதிய சங்கைப் போன்றே காணப்படுகின்றன. தற்போது மத அலுவல்கள், அமைச்சுக்கூடாக டெய்லி நியூஸ் பத்திரிகையில் விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டது. அதில் ஆலயம் கட்டவோ அல்லது வீடுகளில் தியானம் , ஜெபங்கள் நடத்தப்பட வேண்டுமாயின் மத அலுவல் அமைச்சுக்கூடாக அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது மீண்டும் சிறுபான்மை மக்களின் மத சுதந்திரத்தை கட்டுப்படுத்தி அவர்களை ஒடுக்குவதாகவே காணப்படுகின்ற ஒரு செயலாக நாம் காண்கின்றோம். மத அலுவல்கள் அமைச்சு பேரினவாத மதக் கட்டுப்பாட்டில் இயங்கி வருவது நாம் அறிந்ததே. இந்த அறிக்கை அனைத்து மதங்களுக்கும் பொதுவானது எனக் கூறப்பட்டாலும் நாளை அங்கீகாரம் பெறுவதற்கு விண் ணப்பிக்கும் போது அவை எந்தளவில் ஏற்றுக் கொள்ளப்படும் என்பது கேள்விக்குறியே.

பௌத்தர்களே இல்லாத இடங்களில் இன்று விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கு அங்கீகாரம் தேவையில்லை. மத அலுவல்கள் அமைச்சின் இந்த விளம்பரம் பல நூற்றாண்டுகளாக இந்த நாட்டில் வாழ்ந்து வரும் கிறிஸ்தவர்களின் அடிப்படை மத உரிமைகளை இழக்கச் செய்யும் ஒன்றாகும். இயேசுவின் போதனையின்படி கிறிஸ்தவர்கள் நாள்தோறும் வீடுகளில் கூடி ஜெபிப்பது வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஒரு முக்கிய விடயமாகும். அப்படியான செயற்பாட்டுக்கூடாகவே கிறிஸ்தவர்கள் தங்கள் பக்தி விருத்தியை உருவாக்கிக் கொள்வதுடன் நடைமுறை வாழ்க்கையில் இயேசுவின் போதனைகளை அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தக் கூடியதாயிருந்துள்ளது. இந்த அறிக்கை நடைமுறைக்கு வரும் போது கிறிஸ்தவர்களின் முக்கியமான இந்த நிகழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிடும்.

அமெரிக்கா போன்ற ஜனநாயக நாட்டில் இன்று அது கிறிஸ்தவ நாடாயிருந்தும் ஜனநாயகத்தை மதிக்கின்ற காரணத்தால் பல இன மக்களும் தமது கலாசார இன மத உரிமைகளைப் பெற்றுள்ளனர். இந்தக் காலகட்டத்தில் எமது அரசியல் மதத் தலைவர்கள் விழிப்படையவில்லையெனில் இது அவர்களின் சுயநலத்தையே காண்பிக்கின்றது.

*வண.கலாநிதி ஜெயமணிரட்ணம்*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மன நிறைவுடன் காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். இளவயது நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் பாக்கிகளை அதிரடியாகச் செயற்பட்டு வசூலிப்பீர்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். சிலரின் தவறுகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**மிதுனம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். உதவி கேட்டு சிலர் நச்சரிப்பார்கள். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**கடகம்:** ஆடம்பரமான செலவுகளைக் குறைப்பீர்கள். மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி தருவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும்.

**சிங்கம்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப்படுத்துவீர்கள்.

**துலாம்:** அவசர முடிவுகள் எடுக்காமல் இருப்பது நல்லது. சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**விருச்சிகம்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிட்டும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**தனுசு:** மனச்சாட்சிக்கு விரோதமின்றி செயற்பட வேண்டும் என்று நினைப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** உங்கள் ஆலோசனையை மற்றவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். உயரதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**மீனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். வியாபாரத்தில் திடீர் இலாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

## நாளை

**மாசி-25 ஞாயிற்றுக்கிழமை | 09.03.2014**

திதி: அட்டமி மு.ப.11.19 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.இ.11.18 வரை
சுபநேரம்: 09.24-10.54 வரை
இராகுகாலம்:. 04.54-06.24 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### ஜீவனும் இயற்கையும்

ஜீவனை ஜீவனாக உணர்வதே மதம்; ஜீவனை ஜடமாக உணர்வதன்று.

மதம் என்பது ஒரு வளர்ச்சி. ஒவ்வொருவரும் அதைத் தாமே அனுபவித்துப் பார்க்க வேண்டும். மனிதனைக் காப்பதற்காக யேசு நாதர் மரணமடைந்தார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். உங்களைப் [கிறிஸ்தவர்களைப் ] பொறுத்தவரை அது ஒரு கோட்பாடு. அந்தக் கோட்பாட்டில் நம்பிக்கை வைப்பது உங்களுக்கு விமோசனம் அளிக்கும். எங்களைப் பொறுத்தவரை மதக் கோட்பாட்டுக்கும், விமோசனத்துக்கும் சம்பந்தம் இல்லை. ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பும் கோட்பாட்டில் நம்பிக்கை வைக்கலாம். அல்லது, எதிலுமே நம்பிக்கை வைக்காமலும் இருக்கலாம்.

யேசு வாழ்ந்தது குறிப்பிட்ட எந்த ஒரு காலமாக இருந்தால் என்ன? அதில் என்ன வேறுபாடு இருக்கிறது? எரிந்த புதரில் கடவுளைக் கண்டார் மோசஸ் என்பதால் உங்களுக்கு என்ன வந்தது? மோசஸ் கடவுளை அங்கு பார்த்தது, நீங்கள் அவரைப் பார்க்க உதவுமா? அவ்வாறு உதவுவதாக இருந்தால் மோசஸ் சாப்பிட்டார் என்பதே உங்களுக்குப் போதுமே.

நீங்கள் சாப்பிடுவதை நிறுத்திவிடலாமே! இது அர்த்தமற்றது என்றால், முன்னதும் அர்த்தமற்றதே. கடந்த காலத்தில் வாழ்ந்த ஆன்மிகப் பெரியார்களின் வரலாறுகள் எல்லாம், நாமும் அவ்வாறு செய்ய, – அதாவது மதத்தை நாமே அனுபவித்துப் பார்க்க – நம்மைத் தூண்டுவனவே ; வேறு எவ்வகையிலும் நமக்கு உதவுவன அல்ல. கிறிஸ்துவோ, மோசஸோ, மற்றெவரோ செய்தவை எல்லாம் நம்மை அவ்வாறு செய்யத் தூண்டுபவையே. வேறு எவ்வகையிலும் நமக்கு உதவுபவை அல்ல.

# கடவுளை நெருங்குவதற்கு புற்களை உண்ணும் புதுமை



கடவுளை நெருங்குவதற்காக தென்னாபிரிக்க மக்கள் புற்களை உண்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்க நாட்டில் காரன்குவா பகுதியில் வசிக்கும் மக்களிடம் லெசிகோ டேனியல் என்ற மதத் தலைவர், பூமியில் விளைவதை உண்பதன் வழியாக நாம் கடவுளுக்கு அருகில் நெருங்கிச் செல்வோம் என்றும், அது மதத்தின் பக்தியை வெளிப்படுத்தும் அடையாளமாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

அதனைக் கேட்டு அங்கு வசிக்கும் மக்கள் ஆடுகளைப் போன்று மண்டியிட்டு கொண்டு புற்களை உண்ண ஆரம்பித்துவிட்டனர்.

அவர்களில் சிலர், தங்களது உடல்வியாதிகளானதொண்டை கரகரப்பு மற்றும் ஸ்டிரோக் போன்றவை குணமாகியுள்ளன என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தகவல் பல்வேறு சமூக வலைத்தளங்களிலும் வெளியிடப்பட்டுள்ளது.

தன்னைப் பின்பற்றுபவர்களிடம் டேனியல், தங்களது உடலுக்கு உணவு அளிப்பதற்கு எதை வேண்டுமானாலும் மனிதர்கள் உண்ணலாம் என்று தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | 7 | 4 | 2 | 9 |
| | | | | | 8 | | 5 | 7 |
| | | 9 | 4 | 5 | | | 8 | |
| | | 4 | | | 3 | 8 | | 1 |
| | 6 | | | | | | 3 | |
| 9 | | 2 | 5 | | | 7 | | |
| | 4 | | | 7 | 5 | 9 | | |
| 3 | 8 | | 9 | | | | | |
| 1 | 9 | 7 | 3 | | | | | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 6 | 4 | 2 | 7 | 8 | 3 | 9 |
| 3 | 7 | 2 | 1 | 9 | 8 | 4 | 5 | 6 |
| 8 | 4 | 9 | 6 | 5 | 3 | 1 | 2 | 7 |
| 7 | 2 | 8 | 3 | 4 | 6 | 9 | 1 | 5 |
| 1 | 5 | 3 | 8 | 7 | 9 | 6 | 4 | 2 |
| 6 | 9 | 4 | 5 | 1 | 2 | 7 | 8 | 3 |
| 4 | 3 | 7 | 2 | 6 | 1 | 5 | 9 | 8 |
| 9 | 8 | 1 | 7 | 3 | 5 | 2 | 6 | 4 |
| 2 | 6 | 5 | 9 | 8 | 4 | 3 | 7 | 1 |

## மரண அறிவித்தல்



### திருமதி விஜிதா விக்கினேஸ்வரன்

23/2, துரைராசா வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜிதா விக்கினேஸ்வரன் 05.03.2014 புதன்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் இராமநாதன் - சந்திராதேவி தம்பதியரின் அன்பு மகளும், கந்தசாமி - காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், விக்கினேஸ்வரனின் அன்பு மனைவியும், விதுஷன், லக்ஷன், லதுசன் ஆகியோரின் அன்புத் தாயும், கவிதாசன், கிருஷாந்தன், தினோசன் (இலங்கை), தர்சினி (சுவிஸ்) ஆகியோரின் மூத்த சகோதரியும், சுதர்சினி, ரேகா (இலங்கை), தர்சன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், இனியாவின் (சுவிஸ்) பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23/2, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை.
077 335 9030/
004 177 945 6847 (சுவிஸ்)

(45449) (12.3.6)

தகவல்:
கு.இராமநாதன் (காந்தி)
குடும்பத்தினர்.

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பழைய மாணவர்சங்கப்பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சகல பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்லூரிமுதல்வர் சுப்பிரமணியேஸ்வரன் கேட்டுள்ளார்.

(த-400)

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=,
நால்வர் 2000/=(Attached Bathroom)

Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222

(சி/12214)(3.6.4)

## வீடு வாடகைக்குண்டு

சகல வசதிகளுடனான 5 அறை கொண்ட மேல்மாடி வீடு தனி மின்சாரம், தனி வழிப்பாதை, வாகனத்தரிப்பிட வசதியுடன் வாடகைக்குண்டு.

நல்லூர் கோயிலுக்கு அருகில்

தொடர்பு: 077 296 7955 (சி/12617) (3.6.4)

## பிக்கப் வாகனம் விற்பனைக்கு

PS xxxx இலக்க "மஹின்ரா பொலறோ" (பவர் ஸ்ரியரிங்+ ஏ.சி) விற்பனைக்குண்டு.
லீசிங் வசதி செய்து தரப்படும். (43647) (3.6.4)

தொடர்பு: 077 923 8376, 071 454 6959

## காணி தேவை

யாழ். நகரில் ஏ9 வீதியோரமாக அரியாலையில் இருந்து யாழ். நகர மத்தி வரை உள்ள பகுதியில் காணி விலைக்குத் தேவை. (43548) (3.6.4)

தொடர்பு: 077 923 8376, 077 894 9672

## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் தனியார் வைத்திய நிலையமொன்றுக்கு இரு பெண் ஊழியர்கள் தேவை. மருந்தக அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் (A/L) தகைமை உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: 077 869 4625 (45446) (7.6.5)

நேர்முகத் தேர்வு : 09.03.2014 (10 - 12am)

## மணமகள் தேவை

35 வயது, கிறிஸ்தவம், தனியார்துறை முகாமையாளரான மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை.
சீதனம் பேசித் தீர்க்கலாம்.

தொடர்பு: 077 894 9672 (43546) (3.6.4)

## யாழ். றொட்டறிக் கழக

Rotary
RI DISTRICT 3220

ஏற்பாட்டில் இலங்கையின் முதல்தர கேக் அலங்கார நிபுணர்
**ஆர்.எல். கிளமன்ட்**
மற்றும்
அவரது மாணவர்கள்
இணைந்து வழங்கும்

# மலீ 2014



### கேக் கண்காட்சியும் பயிற்சிப் பட்டறையும்

காலம்: 15.03.2014, சனிக்கிழமை
நேரம்: காலை 9.00 – பி.ப 6.00 மணிவரை
பயிற்சிப்பட்டறை : அமர்வு 1 – மு.ப 10.00 – நண்பகல் 12.00 வரை
அமர்வு 2 – பி.ப 2.00– பி.ப 4.00 வரை
இடம் : இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபம்
இல. 63, கல்லூரி வீதி, நீராவியடி. யாழ்ப்பாணம்.

சர்வதேசத் தராதரமிக்க ஆசிரியரால் நேரடியாக நடத்தப்படும் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றி சமையற்கலை பயிற்சிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான அரிய வாய்ப்பு

**முற்பதிவுகளுக்கும் விவரங்களுக்கும்: 078 284 5010**

வருகையாளர்களுக்கான பரிசுக் குலுக்கலில் கவர்ச்சிகரமான பரிசில்கள் காத்திருக்கின்றன.



(C/12618)(10.6.3)

## BIT Bachelor of Information Technology

University of Colombo School of Computing (UCSC)

கொழும்பு பல்கலைக்கழகத் தகவல்தொழில் நுட்ப பட்டப்படிப்பு

குறைந்த மூலதனம்! பெறுமதிமிக்க பட்டப்படிப்பு...!!!

### BIT Plus முழுநேரப் பட்டப்படிப்பு

BIT plus முழுநேரப் பட்டப்படிப்பை தொடர்வதன் மூலம் கீழ்க்காணும் டிப்ளோமா கற்கை நெறிகளை இலவசமாகக் கற்றுக்கொள்ளலாம்.

- Semester 1 + DiHN DiWE DiSE
- Semester 2 — Fundamentals of Programming (JAVA)
- Semester 3 — Diploma in Hardware & Networking Part I & II
- Semester 4 — Diploma in Web Engineering - Part I & II
- Semester 5 — Diploma in Software Engineering - Part I & II
- Semester 6 — Project Guidance & Project Class; Linux /CentOS Network Administration

Free Courses Worth of Rs. 100,000/-

ACEDAMIC LECTURER PANEL

| | |
|---|---|
| Mr.S. Garigaraganapathy | Mr. V. Sasikumar |
| Mr. T. Tharmendra | Mr. S. Sivanathan |
| Mr. V. Ganeshanathan | And Our Usual Lecturer Panel |

UCSC இனால் வழங்கப்படும் BIT Programme இனை தொடர்வதற்கான அடிப்படைக் கற்கைநெறி

**FIT Fundamentals in Inforation Technology**

அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பினை சாதாரணதரப் பெறுபேற்றுடன் தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்!

### பகுதிநேரப் பட்டப்படிப்பு

இப் பட்டப்படிப்பை பகுதிநேரமாகவும் தொடரமுடியும். விரிவுரைகள் வாரத்தில் 1 நாள் 8.00am - 5.00pm வரை நடைபெறும்.

50% Discount for University Students
25% Discount for School Teachers
10% Discount for Full Payment

Semester 1 Batches
Batch: Saturday - 8.30 - 5.00 (22nd March 2014)
Batch: Sunday - 8.30 - 5.00 (23rd March 2014)

**Course Fee: Payable Installments**

2008 - 2013 வரை தொடர்ச்சியாகத் தங்கப்பதக்கங்களை வென்ற ESOFT மாணவர்கள்



2008 Mr. Ravith Bothejue — Gold Medalist - Batch Top, 1st Class Degree
2009 Mr. Danuka Lakmal — Gold Medalist - Batch Top, 2nd Upper Degree
2010 Mr. Udara Senanayake — Gold Medalist - Batch Top, 2nd Upper Degree
2011 Mr. Dasun Nilanjana — Gold Medalist - Batch Top, Gold Medalist - BEST PROJECT, 1st Class Degree
2012 Mr. Shavindra Premaratne — Gold Medalist - Batch Top, 1st Class Degree
2012 Ms. Zeenath.M. Nawfhal — Gold Medalist - BEST PROJECT, 1st Class Degree
2013 Ms. Trehana Fernando — Gold Medalist, 2nd Upper Degree

**ESOFT** Shaping Lives, Creating Futures.

ESOFT METRO CAMPUS
No.137, K.K.S Road, Jaffna
Telephone : 021 222 4142

- Di International — edexcel Assured — Diploma In Information Technology
- DiE — edexcel Assured International — Diploma In English
- DiBM — edexcel Assured International — Diploma In Business Management
- DiWE — edexcel Assured International — Diploma In Web Engineering
- DiSE — edexcel Assured International — Diploma In Software Engineering
- DiCA — edexcel Assured International — Diploma In Computerized Accounting

HOTLINE 077 309 9 308

Follow us on
facebook.com/ESOFTColombo
www.twitter.com/esoftsrilanka

(சி/12610)

இலங்கையின் மிகப்பெரிய பட்டப்படிப்பு வழங்குனர் நாடளாவிய ரீதியாக 45 கிளைகள் www.esoft.lk

## விற்பனைக்கு

கண்ணாடியினால் ஆன இறாக்கைகள் விற்பனைக்குண்டு. (12×8 அடி, 8×4 அடி)

(45425)(45.6.3) தொடர்பு: 077 903 8634

## நெல் கொள்வனவு

சகல விதமான நெல் வகைகளும் கொள்வனவு செய்யப்படும்.

மாப்பியன் மில், சுதுமலை. (45327)(7.6.3)

## மணமக்கள் தேவை

* 81இல் பிறந்த 12இல் சூரியனும் செவ்வாயும் 43 பாவமுடைய BBA, MA முடித்து அரச நிறுவனத்தில் முகாமையாளராக பணிபுரியும் மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
* 81இல் பிறந்த 10இல் சூரியனும் செவ்வாயும் 21¾ பாவமுடைய அரச நிறுவனத்தில் முகாமையாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 80இல் பிறந்த 7இல் செவ்வாய் 23¼ பாவமுடைய BSC, MSC PhD கெமிஸ்ரி படித்துக் கொண்டு அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 88இல் பிறந்த 2இல் செவ்வாய் 28½ பாவமுடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு படித்த கனடாவிலோ, உள்நாட்டிலோ மணமகன் தேவை.
* 87இல் பிறந்த 8இல் செவ்வாய் 26¼ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற எக்கவுண்டனாகப் பணிபுரியும் மணமகளுக்கு இஞ்சினியர், எக்கவுண்டர் மணமகன் தேவை.

தொடர்பு: காலக்கண்ணன் திருமண சேவை

இல.435/3, கோயில் வீதி, நல்லூர்.

T.P : 077 607 0862 (43140)(7.6.3)

## நிரந்தர தொழில்

இலங்கையில் முகாமைத்துவப் பயிற்சியிலும், சந்தைப் படுத்தல் துறையிலும் சிறந்து விளங்கும் எமது வவுனியா S.D.M கிளை காரியாலயத்திற்கு க.பொ.த.சா.தரம் கற்ற இருபாலாருக்கும் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு. பயிற்சிக்காலத்தில் சம்பளமும், பயிற்சி முடிவில் டிப்ளோமா சான்றிதழுடன் நிரந்தர வேலைவாய்ப்பும் 45000/= சம்பளமும் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கு நேரில் வரவும். (43201)(12.3.6) தொடர்பு: 077 367 8472/071 172 8832

## Personal Classes-English

அனைத்துத் தரப்பினருக்கும் தேவைக்கு ஏற்ப அனுபவம் வாய்ந்த பட்டதாரி ஆசிரியர் IELTS குறுகிய காலத்தில் விசேட பயிற்சிகள்.

இலகுவான, கவர்ச்சிகரமான கற்பித்தல்

தொடர்பு : 077 930 9740 (45376)(7.6.3)

## காணி விற்பனைக்கு

உடுவில், ஞானப்பிரகாச வீதியில் இடதுபக்க முதலாம் ஒழுங்கையில் 8¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. அல்லது 2½ பரப்புக் காணித்துண்டாகவும் விற்கப்படும்.

தொடர்பு:077 194 7426 (45332)(3.6.4)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

உரும்பிராய் கிழக்கு, பலாலி வீதியில் இந்துக்கல்லூரி முன் வீதியிலிருந்து 200 m தூரத்தில் வீட்டுடன் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு..

(45417)(45.6.3) தொடர்பு: 021 222 6879, 077 052 4358

## கடை வாடகைக்கு

யாழ். கஸ்தூரியார் வீதியில் ஸ்ரான்லி வீதி சந்திக்கும் கன்னாதிட்டிச் சந்திக்கும் இடையில் 25X35 அடி மாபிள்பதித்த கட்டடம் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 737 4726 (45428)(45.6.3)

## வீடு வாடகைக்கு/விற்பனைக்குண்டு

நெல்லியடி பெற்றோல் செற்றுக்கு அருகில் மேற்கால் உள்ள வீதியில் வீடு வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077 711 3097

(வீடு அல்லது காணி கொள்வனவு செய்ய விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்) (45439)(12.3.6)

## வண்ணை சிவன் கோயிலில் பஞ்சமூர்த்திகள் உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பெருந் திருவிழாவின் பத்தாம் நாளான இன்று இரவுத் திருவிழாவில் இருந்து பஞ்சமூர்த்திகள் உற்சவம் ஆரம்பித்து தொடர்ந்து நடைபெறவுள்ளது. விநாயகர், முருகன், அம்பாள், சண்டேஸ்வரர் ஆகிய பரிவார மூர்த்திகளுடன் வாலாம்பிகா சமேத வைத்தீஸ் வரப் பெருமான் பகல், இர வுத் திருவிழாக்களின் போது வீதி வலம் வர வுள்ளார். (த)

## யோகா பயிற்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

இலங்கை மனவளக் கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்பு யோகா பயிற்சிகளில் தற்சோதனைப் பயிற்சி இன்றும் நாளையும் காலை 8 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை நாளை தொடக்கம் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை மாலை 5.30 மணிக்கு மன வளக்கலை ஆரம்பப் பயிற்சி இடம்பெறவுள்ளது. (வ)

## பளைக் கோட்டமட்ட மெய்வன்மைப் போட்டி

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கோட்ட மட்ட மெய்வன்மைப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பளை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.ஆனந்தசிவம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக பளை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி உ.புவனராஜாவும் கலந்து கொள்வர். (ஒ-9)

## காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பழை பட்டிக் கடவையில் கிராம சேவையாளர் பிரிவு 232, 4 பரப்புக் காணி உடனடி விற்பனைக்குண்டு. மார்ச் 8,9, 10,11 ஆம் திகதிகளில் தொடர்புகொள்ளவும்.

தொ.பே.077 690 3287 / 077 169 8487 (சி/12417)(45.6.3)

(இந்த இலக்கங்களுடன் தொடர்புகொண்டு நேரில் வரவும். தரகர் தேவையில்லை)

## MEETING FOR THE J/HOLY FAMILY CONVENT PAST PUPILS

I cordially invite all the Past Pupils who have passed out at J/Holy Family Convent from 2007 to 2012 for a meeting to be held on **09.03.2014 at 3.30** p.m. in Holy Family Convent Main Hall.

**Secretary**
**J/Holy Family Convent** (45443) (7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




வட இலங்கை சங்கீத சபையில் 03.03.2014 திங்கட்கிழமை "கலாவித்தகர்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இளவாலை திருமறைக் கலாமன்ற இணைப்பாளர்

A.R. விஜயகுமார்

அவர்களை மேலும் கலையில் உயர்ந்து சிறப்புற வாழ்த்துகின்றோம்.

இணைப்பாளர், அங்கத்தவர்கள்.
திருமறைக் கலாமன்றம், இளவாலை. (45434)(7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




தற்போது அச்சுவேலியில் வசித்துவருபவரும் வசாவிளானை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவருமான

**முத்து சிவஞானம்**

அவர்கள் 1978 ஆம் ஆண்டு முதல் இன்று (08.03.2014) வரை (36 வருடங்கள்) **இலங்கை விமானப் படையகத்தில் சிவில் பகுதியில் கடமை புரிந்து** இன்று ஓய்வுபெறுவதையிட்டுப் பாராட்டுவதுடன், அவரின் ஓய்வுக்காலத்தில் சகல சௌபாக்கியத்துடன் வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

அச்சுவேலி. (45442)(3.6.4) கோ.மணிவண்ணன், கா.அகில்தரன்.

## KINGS ELECTRONICS

11A, Stanley Road, Jaffna,
T.P:- 021 222 3857



LED Bulbs for SALES

3 W 180 /=
5 W 230 /=
7 W 280 /=
9 W 360 /=

(45329)(2.6.3)

## SRI LANKA FOOD PROCESSORS ASSOCIATION

SLFPA

இலங்கை உணவு பதப்படுத்தல் நிறுவனமானது இலங்கை உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பமன்றத்துடன் இணைந்து, நன்கு அபிவிருத்திசெய்யப்பட்டு சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பாடநெறிகளை நாட்டின் பிரதான நகரங்களில் நடத்திவருகிறது. இந்தப் பயிற்சியை மேலும் வலுப்படுத்துவதற்கு **Deutsche Gesellschaft fur InternationaleZusammenarbeit (GIZ)** ஆதரவளித்து வருகிறது. இலங்கையில் உணவுபதனிடும் தொழில் துறையில் ஈடுபட்டுவரும் சிறியமற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளின் பயிற்சி மற்றும் செயலாற்றலை வளர்ப்பதைத் தனது நோக்கங்களில் ஒன்றாக இவ்வமைப்பு கொண்டுள்ளது. மாணவர்கள் மற்றும் உணவுத் தொழில்துறையில் ஈடுபடும் தொழிலாளர்களின் வேறுபட்ட தேவைப்பாட்டுக்கு அமைவாகப் பலவகையான கல்விசார் (academic) மற்றும் நடைமுறை (practical) பயிற்சிநெறிகள் நடத்தப்படுகின்றன. எமது பயிற்சிநெறிகள் தனித்துவமானவை. அங்கத்துவ நிறுவனங்களில் பயிற்சி பெறுவதற்கும் தொழில் புரிவதற்குமான வாய்ப்புக்கள் உள்ளன.

ஒவ்வொரு பாடநெறிக்கும் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருப்பதால் பதிவுசெய்வதற்கான உங்கள் விண்ணப்பத்தைத் தயவுசெய்து முன்கூட்டி அனுப்புங்கள்.

### 2014 மார்ச் மாதத்துக்கான SLFPA பயிற்சிநிகழ்வுகள்

**SLFPA Trainer: SLFPA சான்றிதழ் பெற்ற ஒரு பயிற்சியாளராகுங்கள்**
(இருமொழிகள்,ஆங்கிலம் மற்றும் சிங்களம் அல்லது தமிழில்)

மார்ச் 10 மற்றும் 11 கொழும்பில்
மார்ச் 17 மற்றும் 18 யாழ்ப்பாணத்தில்
மார்ச் 24 மற்றும் 25 திருகோணமலையில்

**உணவு பாதுகாப்பு தர நியமங்கள் மற்றும் HACCP,உணவு சுகாதாரம் மற்றும் GMP இல் பயிற்சிநெறி**
(இருமொழிகள், ஆங்கிலம் மற்றும் சிங்களம் அல்லது தமிழில்)

மார்ச் 12, 13 மற்றும் 14 கொழும்பில்
மார்ச் 19, 20 மற்றும் 21 யாழ்ப்பாணத்தில்
மார்ச் 26, 27 மற்றும் 28 திருகோணமலையில்

*விசாரணைகள் மற்றும் பதிவுகளுக்குத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:*

**SLFPA SME Development Project Office**
1, 1/1, Anderson Road, Colombo 5
Email: **training@slfpa.org** Telephone: 011 492 0206. Fax: 011 754 8771.
Mobile: 077 7579598. **Website: www.slfpa.org** (C/12418)(2.6.3)

## MAJESTIC CINEMA - CARGILLS SQUARE

CEYLON THEATRES
(Opposite Jaffna Teaching Hospital)

விசாரணை 021-2227712
www.facebook.com/CeylonTheatres
Web: www.ceylontheatres.com

இப்பொழுது திரையில் DAILY - 10.30am, 2.30pm, 6.30pm




Platinum




Silver




Bronze

(C/12416)

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்புக் கடன் நிவர்த்திச் சங்கத்தின்

## 53ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

விஜய வருடம் நாளை (09.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ கிளினிக் சாய்சாலை பகுதியில் தலைவர் செ.பேரின்பநாதன் தலைமையில் 53ஆவது வருடாந்தக் கூட்டம் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சி.பாக்கியலிங்கம்
செயலாளர். (45448)(7.6.3)

# புகைத்தலை எதிர்த்து வடமராட்சியில் நேற்று நடைபெற்ற பேரணி








*கரவெட்டி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, பிரதேச செயலகம், பிரதேச சபை, கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம், நெல்லியடி வர்த்தக சங்கம், கரவெட்டி சமுர்த்தி மகா சங்கம், சமுர்த்திச் சங்கம் மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து கரவெட்டி பிரதேச செயலகம் முன்பாக நடத்திய பேரணி.* (வ-173)

## பொதுக் கூட்டம்

கொடிகாமம் பிரதேச மருத்துவமனை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மருத்துவமனை மண்டபத்தில் நடைபெறும். மருத்துவமனை வளர்ச்சியில் அக்கறையுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

★ ★ ★

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பி.ப.2 மணிக்கு ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது என வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் வை.யதுநந்தனன் தெரிவித்துள்ளார்.

பொதுக் கூட்டத்தில் நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறவுள்ளதால் வைத்தியசாலையின் வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்கள் தவறாது சமுகமளிக்குமாறும் அவர் கோரியுள்ளார். (வ-51)

★ ★ ★

வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் நிர்வாகக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமைமல்லாகம்வலி.வடக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ)

★ ★ ★

வரணி இடைக்குறிச்சி சண்முகானந்தா சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொள்வர். (ஒ-122)

# போரால் பாதிக்கப்பட்ட எமது பெண்களுக்கு தீர்வு வேண்டும்

***யாழ். மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் புதுக்குடியிருப்பு பிரதேச செயலரிடம் இன்று மனு கையளிப்பு***

யாழ்ப்பாணம்.மார்ச் 8

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தீர்வு பெற்றுக்கொடுங்கள்என்பதை முன்னிலைப்படுத்தி மனு ஒன்றை யாழ். மாவட்டமகளிர் அபிவிருத்தி நிலையம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலரிடம் கையளிக்கவுள்ளது.

யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் இன்று முற்பகல் 10 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவி திருமதி சரோஜா சிவ.சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும், அவர்களும் சமுதாயத்தில் பாதிப்பை எதிர்கொள்ளாது வாழ்வதற்கு வழிகள் ஏற்படுத்தப்பட வேண்டும், அவர்களது நியாய மான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் அடங்கிய 'பெண்களின் குரல்' என்ற மனு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் இ.பிரதாபனிடம் கையளிக்கப்படவுள்ளது.

**நியாய மான கோரிக்கைகள் நிறை வேற்றப் பட வேண்டும் போன்ற கோரிக் கைகள் அடங்கிய 'பெண்களின் குரல்' என்ற மனு கையளிக்கப் பட்டது.**

நிகழ்வில் கைவேலி புதுக்குடியிருப்பு கணேசா வித்தியாலய அதிபர் சிவராணி தங்கமலர், முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி கு.சரோஜா ஆகியோர் கலந்துகொள்வர். மனு கையளிப்பைத் தொடர்ந்து சிறப் புரைகளும், கலைநிகழ்வுகளும்இடம்பெறவுள்ளன. (வ-14)

# இன்றும் நாளையும் மின்தடை

யாழ்ப்பாணம், மார்ச். 8

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கம்பஸ் லேன், வைமன் வீதி, அரசடி வீதி, கோயில் வீதி, நல்லூர், இராசாவின்தோட்டம், றக்கா வீதி, ஆஸ்பத்திரி வீதி, பழைய பூங்கா, கச்சேரியடி, சுண்டுக்குழி, குருசோ வீதி, பாசையூர், ஈச்சமோட்டை, கொழும்புத்துறை, நெடுங்குளம், ஆனந்தன் வடலி வீதி, எழிலூர், மகேந்திரபுரம், உதயபுரம், மணியந்தோட்டம், புங்கங்குளம் வீதி, பருத்தித்துறை வீதி, நாவலர் வீதி, கைலாச பிள்ளையார் கோயில் சந்தி - ஸ்ரீலங்கா ரெலிகொம், பிரதம தபாலகம், நீதிமன்ற வளாகப் பிரதேசம், பண்ணைப் பிரதேசம், யாழ். நூலகம், சத்திரச் சந்தியில் ஒரு பகுதி, வேம்படி 1 ஆம் குறுக்கு, யாழ். பிரதான வீதி ஒரு பகுதி, 2 ஆம், 3 ஆம் குறுக்கு, விஜிதா கபே, சிறைச்சாலைப் பிரதேசம், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மேற்கு, குரும்பைசிட்டி, அச்செழு, ஈவினை, வாகையடி, மயிலங்காடு, சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து சுன்னாகம் சந்தி வரையான பிரதேசம், சூராவத்தை, மலப்பை, மயிலங்காடு, ஏழாலை, குப்பிளான், கட்டுவன் ஆகிய இடங்களிலும்-

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை தலங்காவில், பலாலி வீதி, கந்தர்மடம், ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், இராசாவின்தோட்டம், ஆனைப்பந்தி சந்தி, இலுப்பையடி சந்தி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, மணிக்கூட்டுகோபுர வீதியின் ஒரு பகுதி, பரமேஸ்வராச் சந்தி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

# மகளிர் தின நிகழ்வுகள்

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சமாச மகளிர் குழுத் தலைவி திருமதி ஜெபமணி ஜோசவ் தலைமையில் சமாச அலுவலகத்தில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் மகளிர் குழுத் தலைவி திருமதி இ. இராசமணி கலந்து கொள்வார். (வ)

★ ★ ★

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமைபிற்பகல் 3 மணிக்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினராக வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் உதவிச் செயலாளர் சட்டத்தரணி உமா தங்கவேலும் கலந்து கொள்வர். (ஐ-400)

★ ★ ★

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் கொட்டடி சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சனசமூக நிலையக் கட்டடத்தில் நடைபெறும்.

குறித்த கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் சனசமூக நிலையம் ஆகியவற்றின் தலைவர் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை முதல் வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்து கொள்வார். (வ)

★ ★ ★

யாழ். சமூக செயற்பாட்டுமையத்தின் ஏற்பாட்டில் 'பெண்கள் உரிமைகளும் மனித உரிமைகளே' எனும் தொனிப்பொருளிலான மகளிர் தின நிகழ்வு நடத்தப் படவுள்ளது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் தலைவி வைத்தியர் பவானி ஞானச் சந்திரமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளதுடன் சுவிஸ் தூதரகத்தைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் மகளிர் தின அமைதி ஊர்வலம் குறித்த தினத்தில் காலை 9.00 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் ஆரம்பமாகி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நிறைவடைவதுடன் தொடர்ந்து மைதான நிகழ்வுகள் இடம் பெறும்.

அன்றைய தினம் மாலை நடன நிகழ்வுகள், விருந்தினர் உரைகள், கௌரவிப்பு நிகழ்வு, மக்கள்அரங்கம்உட்படபல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (வ-10)

★ ★ ★

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் மகளிர் தின விழா நல்லூர் கோயில் வீதி யிலுள்ள துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (வ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தெய்வானை அப்பையா



சரசாலை மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானை அப்பையா 05.03.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் அப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகன்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னவன்-வள்ளி தம்பதியரின் மருமகளும், செல்வராசா, செல்வராணி காலஞ்சென்ற புஸ்பமலர் மற்றும் செல்வரத்தினம், செல்வகுமார், செல்வமதி மற்றும் பாலமோகன் (பெறாமகன்) ஆகியோரின் அன்புத் தாயும், சசிகலா, தங்கராசா, குமுதினி, சிவதர்சினி, பன்னீர்செல்வம் மற்றும் சிசிலிகா ஆகியோரின் மாமியும், கற்பகம், கந்தையா, கணபதிப்பிள்ளை, பரமசாமி (குஞ்சுராசு) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கணேசு மற்றும் பாக்கியம், தங்கம்மா, விமலா ஆகியோரின் மைத்துனியும், மெலனி, திஷானி, திபேனி, தனீஸ்றாஜ், சதீஸ்றாஜ், திபேஸ்றாஜ், றஜிதா, றொஷானி, றிஷானி, சுவேன், சுவேனுகா, [illegible] நிலானி, நிருன், யூஜின், யூஜினா, ஆஸ்லி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் [illegible] எறியால் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.
(45435)(3.6.4)

தகவல்:
குடும்பத்தினர்.
077 616 4254

## திருமதி மகேஸ்வரி துரையப்பா



நுணாவில் கிழக்கு, தாளையம்பதி வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி துரையப்பா 05.03.2014 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பாவின் (ஓய்வுபெற்ற சிறாப்பர்-தபால் தலைமைக் காரியாலயம், கொழும்பு) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பா-அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், துரைராசா (ஜேர்மனி), தேவராசா(கொழும்பு), சறோ ஜினி தேவி (கொழும்பு), பிரகேஸ்வரி(கனடா), ரவிந்திரராசா (ஜேர்மனி), தர்மராசா(பிரான்ஸ்), மோகநந்தினி(கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஞ்சினி, சூரியகலா, செகதீஸ் வரன், சுரேந்திரன்,சிவநிதி, நந்தினி, ஜெயபாலன் ஆகியோரின் பாசமிகு மாமியும்,திரோபன், திவாகன், ஜகிபன், திவியா, துஷித்தா- முரளி கிருஷ்ணா, துஷாணி- பாலஸ்கந்தா, சுரேக்கா, ஜனனி, நிருஜா, சாருஜன், ஜெனயன், ஜெகிஷா, ஜெனுயா, காலஞ்சென்ற யமுனா மற்றும் சங்கர்-சோபனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அக்ஷயா, சிவஹரிஷி ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்(முன்னாள் நகரசபை உறுப்பினர்- சாவகச்சேரி), நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, வைத்திலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலவாணர், சிவலோகநாதர் மற்றும் பத்திமினிதேவி-ஸ்ரீதரன் ஆகியோரின் மாமியும், சிவசுந்தரராசன், சிவராணி, காலஞ்சென்ற சிவஞானம் ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
கல்வயல் வீதி,சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
011 492 2381


# முஸ்லிம்களை நசுக்குகிறது பதவியிலுள்ள மஹிந்த அரசு

### ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச், 8

இந்த அரசின் ஆட்சியின் கீழ் நாட்டில் முஸ்லிம் சமூகம் நசுக்கப்பட்டு இனவாதம் தூண்டப்பட்டு மிகவும் மோசமானதொரு நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதனால் முஸ்லிங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையிலிருந்து எமது சமூகத்தை மீட்டெடுக்க அரசால் ஒருபோதும் முடியாது.

இவ்வாறு மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் மத்திய கொழும்பு ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளருமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித் தார்.

மாளிகாவத்தை பிரதேசத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு மக்களை அரசு பல வகையிலும் சோதித்து வருகின்றது. ஆரம்பத்தில் முஸ்லிம் மக்களின் வியாபாரத்தில் கை வைத்தார்கள். தற்போது எமது வீடுகளை இடித்து தரை மட்டமாக்குகின்றனர். அப்பாவி மக்களை வெளியேற்றிவிட்டு அந்த இடங்களை சூதாட்ட விடுதிகள் அமைப்பதற்கும் வெளிநாடுகளுக்கு விற்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் கிராண்ட்பாஸ், தெஹிவளை, அத்திடிய, மெகட கொலன்னாவ, ராஜகிரிய, கொஹிலவத்தை உட்பட பல இடங்களில் பள்ளிவாசல்கள் தாக்குதல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகியுள்ளன.

ஹலால் எதிர்ப்பு, மாடறுப்புக்கு தடை விதித்தல் என எமது சமூகத்தின் மார்க்கக் கடமைகளுக்கு இடையூறு விளைவிப்பதற்கு அரசு துணை போகின்றது. அதனைத் தடுத்து நிறுத்த திராணியற்ற இந்த அரசை இனியொருபோதும் ஆட்சியமைக்க மக்கள் இடமளிக்கக் கூடாது.

இவர்களின் சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய தருணத்தில் நாம் இருக்கின்றோம். இதற்கான சந்தர்ப்பம் தற்போது கிட்டியுள்ளது. அரசை வீழ்த்துவதற்கு இந்த மாகாண சபையைப் பயன்படுத்த வேண்டும். எனவே நாம் ஒற்றுமையாக ஐக்கிய் தேசிய கட்சியின் கீழ் ஓரணியில் திரண்டு அரசை விரட்டியடிக்க வேண்டும்- என்றார். (ச-10)

# காரைநகர் சிவனுக்கு இன்று கொடியேற்றம்

காரைநகர், மார்ச் 8

ஈழத்துச் சிதம்பரம் என்று சிறப்பிக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலின் வருடாந்த பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் திருவிழாக்கள்நடைபெறவுள்ளன.

11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு கைலாய வாகனத்திருவிழாவும், 15 ஆம்திகதி சனிக்கிழமை, இரவு பெரிய சப்பறத் திருவிழாவும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த் திருவிழாவும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக் கல்யாண உற்சவமும் இடம் பெறவுள்ளன.

திருவிழாக் காலங்களில் தினமும் யாழ்.நகரிலிருந்து ஆலயம் வரை நேரடி பஸ் சேவை இடம்பெறவுள்ளதுடன் ஆல யச் சூழலில் உள்ள மடாலயங்களில் அன்னதானமும் நடைபெறவுள்ளது. (வ-50)

# சைவ சமயப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசளிப்பு இன்று

தென்மராட்சி, மார்ச் 8

தென்மராட்சி கல்வி வலய சைவ சமயப் பிரிவு நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலைகள், மாணவர்கள் , ஆசிரியர்கள் ஆகியோருக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

வலய சைவ சமய ஆசிரிய ஆலோசகர் செல்வி இ. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினமும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) திருமதி சி.சிவநாதன், ஓய்வுநிலை அதிபர்களான த.கந்தையா, திருமதி சா.நகுலேஸ்வரன், மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ல.முகுந்தன் ஆகியோரும்- கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் தா.பாலசுந்தரம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் நடனமும், மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்களின் நாடகமும், கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய ஆசிரியைகளின் வில்லுப்பாட்டும் இடம்பெறும்.

(வ-9)

# சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி நுணாவில் மத்தி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். திருவிழா கிரியைகள் பிரம்மஸ்ரீ தே.பிரசன்னக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ஓ-9)

★ ★ ★

மூளாய் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஒ)

★ ★ ★

சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திரு விழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ)

# சுழிபுரம் பகுதியில் வைக்கோலுக்கு பெரும் கிராக்கி

சுழிபுரம் பகுதியில் வைக்கோலுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள் ளது. கால்நடைகள் வளர்ப்போர் அதிக விலை கொடுத்து வைக்கோலை வாங்கிச்செல்கின்றனர். இம்முறை காலபோக நெல் விளைச்சல் அதிகம் இல்லாது போனாலும் அறுவடை செய்த வைக்கோலை வாங்க தினமும் பலர் சுழிபுரம் வந்து போவதைக் காண முடிகின்றது. (ஓ-28)


# மரண அறிவித்தல்

## சின்னத்துரை திலகராஜா

(ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர்-மதுவரி திணைக்களம்)



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், 3ஆம் கட்டை, பலாலி வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை திலகராஜா நேற்று (07.03.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயதேவியின் அன்புக் கணவரும், தர்ஷினியின் (SDC நிறுவனம்) பாசமிகு தந்தையும், மகேந்திரனின் (முன்னாள் முகாமையாளர்-Scisl Sri Lanka) மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் கட்டை, பலாலிவீதி,
திருநெல்வேலி
(45440)
(10.6.3)

தகவல் :
திருமதி தர்ஷினி மகேந்திரன்
(மகள்)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும்

திருமதி ம.ஸ்ரனிஸ்லஸ் அவர்களின் அன்புத் தாய்

திருமதி அருளம்மா யோசப்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(45441)
(12.3.8)

தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
முருகேசு சற்குணம்



மண்ணில்
02.02.1942

விண்ணில்
08.02.2014

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" யோவான் 11:25

கடந்த மாதம் 08.02.2014 அமரத்துவமடைந்த முருகேசு சற்குணம் அவர்களின் நினைவு ஆராதனை நாளை (09.03.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல்11.30 மணியளவில் உப்புமாவெளி அளம்பில் இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உப்புமாவெளி, அளம்பில்,
முல்லைத்தீவு.
(45335)(3.6.4)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## விபத்துக்குக் காரணமான சாரதி மீது நடவடிக்கை தேவை

வட மாகாண சபை உறுப்பினர் கூறுகிறார்

விபத்துக்களின்போது தவறு மேற்கொள்ளும் சாரதிகள் மீது பொலிஸார் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதில்லை என்று வடமாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் தெரிவித்தார்.

பளையில் நேற்று முன்தினம் காலையில் இடம்பெற்ற பஸ் விப்த்து தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பளையில் இடம்பெற்ற விபத்துக்கு சாரதி அதி வேகமாக பஸ்ஸைச் செலுத்தியமையே முக்கிய காரணமாகவுள்ளது. குறித்த சாரதி இதற்கு முன்னரும் மூன்று தடவைக்கு மேல் விபத்துக்களுக்கு காரணமாக இருந்த போதிலும் அவர் மீது பொலிஸாரால் இறுக்கமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுவே தொடர்ச்சியான தொடர் விபத்துக்கு காரணமாக அமைந்துள்ளது. என்றார். (வ-18)

## சிரமதான பணி

அச்சுவேலி மேற்கு மகளிர் விவகாரக் குழு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சிரமதானப் பணியை மேற்கொண்டது. கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சிரமதானப் பணிகள் குழுவின் தலைவி திருமதி எஸ்.சோபிகா தலைமையில் நடைபெற்றது. குழு உறுப்பினர்கள் 50 பேர் சிரம தானப் பணியில் ஈடுபட்டனர்.

அச்சுவேலி தோப்பு அரசடிச் சந்தியில் இருந்து வீதியோரமாக வளர்ந்துள்ள பாதீனியம் செடியை வெட்டி அழிக்கும் பணி சிரமதானம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. (ஓ-11)

## மாணவர் வரவு குறித்த கணிப்பீட்டுப் படிவம் விநியோகம்

தென்மராட்சி, மார்ச் 8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களின் வரவு தொடர்பான கணிப்பீட்டுப் படிவம் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே வலய பாடசாலை அதிபர்கள் குறித்த படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து கையளிக்குமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் அறிவித்துள்ளார். (வ-9)

# தனியார் பஸ்கள் புறப்பட்டு சில இடங்களில் நீண்ட நேரம் நின்று பின் 'மின்னல்' ஓட்டம்

## பயணிகளைப் பொருட்படுத்தாத சாரதிகள், நடத்துநர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

பயணிகளை ஏற்றும் போட்டியில் குறிக்கப்பட்ட தூரங்களுக்கு ஆமை வேகத்தில் பயணிக்கும் தனியார் பஸ்கள் குறிப்பிட்ட சில இடங்களில் தரித்து நிற்கின்றன. இதனால் பயணிக்கும் பயணிகள் பஸ்ஸுக்குள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது.

இதனால் பயணிக்கும் தனியார் பஸ் நடத்துநர்களுக்கும் இடையில் அடிக்கடி முரண்பாடு ஏற்பட்டுவருகிறது.

யாழ்.மாவட்டத்தில் உள்ளூர் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் குறிக்கப்பட்ட நேரத்தில் சேவையில் ஈடுபட வேண்டும் என்று தனியார் பஸ் சங்கத்தால் நேர அட்டவணை வழங்கப்பட்டுள்ளது.

இதனைக் கண்காணிப்பதற்கு அந்தந்த வழிச்சேவைகளில் நேரக் கணிப்பாளர்களும் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த நேரத்தை அடிப்படையாகக் கொண்டு தரிப்பிடங்களில் பஸ்கள் நிறுத்திவைக்கப்படுகின்றன. நீண்ட நேரம் பயணிகளுடன் டியூட்டறிகள், பிரதேச செயலகங்கள் மற்றும் அரச அலுவலகங்களுக்கு முன்பாக தனியார் பஸ்கள் நிறுத்திவைக்கப்படுகின்றன. இதனால் பஸ்ஸுக்குள் இருக்கும் பயணிகள் தாம் செல்ல வேண்டிய இடத்துக்கு தாமதித்து செல்ல வேண்டியிருப்பதுடன் அடுத்த பஸ்ஸை தவற விடவும் நேரிடுகிறது. தாமதத்தை ஆட்சேபித்தால் பஸ் நடத்துநருடன் முரண்பட வேண்டியும் ஏற்படுகிறது.

கடந்த 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலிக்குப் பயணிகளுடன் புறப்பட்ட தனியார் பஸ்ஸொன்று கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன் பாக சுமார் 7 நிமிடங்கள் தரித்து நிறுத்தப்பட்டிருந்தது. இது தொடர் பாக பயணி ஒருவர் நடத்துநரிடம் கேட்டபோது பயணிக்கும் நடத்துநருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற் பட்டது.



கோப்புப்படம்

இது தொடர்பாக தனியார் பஸ் சங்கத் தலைவர் பொ.கெங்காதரனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,

பயணிகளுடன் செல்லும் பஸ்ஸை இடையில் நீண்ட நேரம் நிறுத்தி வைப்பதற்கு அனுமதி இல்லை. குறித்த நேரத்தில் பஸ் சேவையை நடத்துவதற்காக அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கலாம்.

பயணிக்கும் நேரம் அதிக மாக நிர்ணயிக்கப்படுவதால் அதனை குறைப்பதற்கு சங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

குறித்த நேரத்தில் பஸ்ஸை கொண்டு செல்வதற்காக முதலில் மெதுவாக பயணிக்கும் பஸ்கள் நேரம் நெருங்கியவுடன் மின்னல் வேகத்தில் பறக்கின்றன. இதனால் பயணிகள் குலைநடுக்கத்தில் பயணிக்கின்றனர். எந்த நேரத்தில் விபரீதம் நடக்குமோ என்ற அச்சம் பதற்றத்துடன் தாங்கள் பயணம் செய்ய வேண்டியுள்ளது என்றும் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஓ-வ-14)

# வடக்கில் கண்ணிவெடி அகற்றலுக்கு 92 மி. ரூபாவை வழங்கியது ஜப்பான்

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடக்கில் கண்ணிவெடி அகற்றலுக்காக ஜப்பானிய அரசு 716, 608 அமெரிக்க டொலர்களை அடிமட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடைத் திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது. இது இலங்கைப் பெறுமதியில் அண்ணளவாக 92 மில்லியன் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநன்கொடை தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானிய தூதர் நொபுஹிதொ ஹொபொ மற்றும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஸ்டனிஸ்லெவ் டம்ஜனொவிக் ஆகியோருக்கு இடையே ஜப்பானிய தூதர் இல்லத்தில் கடந்த 3 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.




ஜப்பானிய தூதர் நொபு ஹிதொ ஹொபொ மற்றும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத் தின் திட்ட முகாமையாளர் ஸ்டனிஸ்லெவ் டம்ஜ னொவிக்கை சந்தித்த போது.....

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஸ்டனிஸ்லெவ் டம்ஜனொவிக் இந்நன்கொடை வழங்கல் தொடர்பாக கூறுகையில், "ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வடக்கில் மீள் குடியமர்தலுக்கும் வாழ்வாதாரத்துக்குமான மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் திட்டத்துக்கு அண்ண ளவாக 92 மில்லியன் ரூபா வழங்கப்பட்டிருப்பதுடன் இந்தத்திட்டத்தின் மூலம் மக்கள் மீளக் குடியமர்ந்து அவர்களது வாழ்வாதாரத்தை மீள ஆரம்பிக்க ஏதுவாக கண்ணி வெடி புதைக்கப்பட்டுள்ள இடங்களைப் பாதுகாப்பான நிலமாக மாற்றியமைக்கும் இலங்கை அரசின் முயற்சிகளை துரிதப் படுத்துவதற்கு இது பங்களிப்புச் செய்யும். இடம்பெயர்ந்தோர் மீளத் திரும்புவது மற்றும் மீள்குடியமர்வதை துரிதப்படுத்துவதற்கும் விவசாயம் மற்றும் வேறு வாழ்வாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கும் ஜப்பான் இலங்கையில் கண்ணிவெடி அகற்றலுக்கு பிரதான நன்கொடையாளராக இருந்து வருகிறது.

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனமானது 2003 ஆம் ஆண்டிலிருந்து எங்களது கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளுக்கு நிதியளிக்கும் ஜப்பானிய அரசால் ஒரு நம்பிக்கைக்குரிய பங்காளியாக கௌரவப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தத்திட்டத்தின் மூலம் வடக்கில் வசிக்கும் மோசமாக கண்ணிவெடி அபாயத்துக்கு உள்ளாகிய 5000 மக்கள் நேரடியாகப் பயனடைவதுடன் மேலும் 45000 பேர் மறைமுகமாகவும் பயனடைவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-10)



பொதுநோக்கு மண்டபத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார் ஜப்பான் தூதர்

# பொது நோக்கு மண்டபத்தை திறந்தார் ஜப்பான் தூதுவர்

கிளிநொச்சி, மார்ச் 8

கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொண்ட ஜப்பானிய தூதுவர், திருவையாறு பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொது நோக்கு மண்டபத்தையும், மலையாளபுரம் பகுதியில் புனரமைக்கப்பட்ட ஒரு கிலோ மீற்றர் நீளமான வீதியையும் திறந்து வைத்துள்ளார்.

வியாழக்கிழமை கிளிநொச்சிக்கு பயணம் செய்திருந்த ஜப்பானிய தூதர் நொபு ஹிட்டோ முற்பகல் 9.30 மணியளவில் திருவையாறு பகுதியில் ஜப்பானிய அரசின் நிதியதவியுடன் யு.என். ஹபிற்றற் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட பொது நோக்கு மண் டபத்தைத் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட ஒரு கிலோ மீற்றர் நீளமான வீதியையும் அவர் திறந்து வைத்தார்.

ஜப்பான் தூதரகத்தின் முதற் செயலாளர் கென்சி மியாடா, கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேசசெயலாளர் திரு.சி.நாகேஸ்வரன், கிராம மட்ட சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் யு.என். ஹபிற்றற் நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (த-55)

# சர்வதேச விசாரணைக்கான பரிந்துரை அமெரிக்க தீர்மான வரைபில் அவசியம்

## கனேடிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சிடம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 8

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் 'சர்வதேச விசாரணைக்கான பரிந்துரை, அமெரிக்கத் தீர்மான வரைபில் கட்டாயம் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் இதற்குரிய சகல நடவடிக்கைகளையும் கனேடிய அரசு முன்னெடுக்க வேண்டும் என்றும் கனேடிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வலியுறுத்தியுள்ளார்.

கனேடிய வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், அந்த நாட்டு எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் போல் டீவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் மற்றுமொரு தீர்மான வரைபு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள், பொறுப்புக்கூறல் - நல்லிணக்கம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியிருந்தது.

இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைபும் அதே விடயங்களை வலியுறுத்துவதுடன் அது தொடர்பில் மனித உரிமை ஆணையாளர் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றது.

இவ்வாறானதொரு நிலையில், இலங்கை அரசின் பொறுப் புக்கூறல், நல்லிணக்கம், போர்க் குற்றம் குறித்த விசாரணைகள் தொடர்பில் கனேடிய அரசு காத்திரமான நடவடிக்கைகளை இலங்கைக்கு எதிராக மேற்கொள்ள வேண்டும்.

கனேடிய அரசு, தீர்மான வரைபை சமர்ப்பித்துள்ள நாடுகளுடன் இணைந்து குறித்த தீர்மான வரைபினூடாக இலங்கைக்கு எதிராக கடுமையான செய்தியைச் சொல்ல வேண்டும். குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்துள்ள இலங்கை தொடர்பான அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள, போரின் போது இழைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் சுதந்திரமான சர்வதேச விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரை தீர்மான வரைபில் உள்ளடக்கப்பட வேண்டும்.

இதற்குரிய சகல நடவடிக்கைகளையும் கனேடிய அரசு மேற்கொள்ள வேண்டும்" - என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (வ-5)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## திருமதி அன்னபூரணம் சின்னையா



தோற்றம் 24.08.1924 — மறைவு 06.02.2014

கடந்த 06.02.2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (08.03.2014) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

155,4 ஆம் ஒழுங்கை, சோமு கடையடி, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி.

பாசமிகு: பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(45463)(10.14)

## ஹெரோயின் மீட்பு

ஊறுகொடவத்தையில் 36 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று சுங்கப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர். பாகிஸ்தானிலிருந்து கொண்டுவரப்பட்ட இரண்டு பெட்டிகளில் இந்தப் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இரும்பு உருக்குப் பொருள்களை இறக்குமதி செய்யும் போர்வையில் இந்த போதைப் பொருள்தொகுதி கொண்டு வரப்பட்டுள்ளது என்று அவர்கள் கூறினார். (ச)

# மரண அறிவித்தல்

## சண்முகராஜா பிரதீபன்



தங்கோடை காரைநகரைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராஜா பிரதீபன். 05.03.2014 புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் சண்முகராஜா (முன்னாள் வர்த்தகர் AMT & Sons றுவான் வெல்ல)-தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், கணேஸ்வரியின் (சுசி-நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை) அன்புச் சகோதரனும், றுவான் வெல்ல முன்னாள் வர்த்தகர் தம்பிப்பிள்ளை பார்வதிப்பிள்ளை மற்றும் காலஞ்சென்ற நடராஜா செல்லம்மாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

18A, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில்.

(45461)(10.14)

த.சண்முகராஜா
தொ.பே: 077 9793325

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கம் ஐயம்பிள்ளை



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம் ஐயம்பிள்ளை நேற்று முன்தினம் (06.03.2014) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார்-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நல்லமாவின் அன்புத் தாயும், காலஞ்சென்ற குணசிங்கத்தின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான நாகநாதி, முருகேசு மற்றும் சுந்தரம், சின்னம்மா, பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2014) ஞாயிறு முற்பகல் 10.00 மணியளவில் சீர்க்கண்ணன் சீர்களம் முல்லை வீதி, விசுவமடு என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


சீர்க்கண்ணன் சீர்களம், முல்லை வீதி, விசுவமடு.

(43549)(10.14)

தகவல்: பேரப்பிள்ளைகள்.
T.P: 077 5394481

# மரண அறிவித்தல்

## கந்தையா இராசரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)



புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் நேற்று (07.03.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லசேகரம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் குகப்பிரியை, நிமலவேணி (மேல் நீதிமன்றம் யாழ்ப்பாணம்), குகநேசன் (கனடா), பத்மாசனி, மோகனா (கனடா), பேரின்பநேசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நித்தியானந்தன், ஜெயவதனா (கனடா), தேவேந்திரன் (சிவா - மக்கள் வங்கி சாவகச்சேரி), சக்திவேல் (கனடா), விநோதினி (கனடா) ஆகியோரின் அன்புமாமனும் துஷ்யந்தன் (பிரான்ஸ்), குகன், புவிநாத், மகிழினி, துவாரகேசன், மதுர்சிகா, சஜீத்தன் (கனடா), நரேஸ் (கனடா), நிசாந் (கனடா), தனுஷ் (கனடா), தட்சியா (கனடா) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி பாக்கியம் திருநாவுக்கரசு ஆகியோரின அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தம் ஜெகதீசன் ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பிள்ளைகள், மருமக்கள்.

புத்தூர் கிழக்கு, புத்தூர்.

# மரண அறிவித்தல்

## செல்வி இந்திராணி தாமோதரம்பிள்ளை

(ஓய்வுநிலை ஆசிரியை-கொழும்பு, காரைநகர்)

காரைநகர் துறைமுகத்தைப் பிறப்பிடமாகவும், இல.7, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்வி இந்திராணி தாமோதரம்பிள்ளை (ஓய்வுநிலை ஆசிரியை) நேற்று (07.03.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான (Postmaster) தாமோதரம்பிள்ளை-மீனாட்சி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், கௌரி, பவானி, குகனேசன், காலஞ்சென்ற சண்முகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருஞானசம்பந்தர், சண்முகரத் தினம், சாவித்திரிதேவி ஆகியோரின் மைத்துனியும், உமா-ஸ்ரீஸ்கந்தராசா, ஆரூரன்- ரேவதி, வித்தியா-சர்வேஸ்வரன், உமாசுதன் ஆகியோரின் பெரிய தாயும், ஆரணி, அபிராம், கரிகரன், வர்ஷா, பவகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வசந்தி, பார்த்தீபன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது தம்பியின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கீரிமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மடத்தடி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

(45459)(10.14)

தகவல்: தா.குகனேசன், (ஓய்வுநிலை முகாமையாளர்- இலங்கைவங்கி)

# மரண அறிவித்தல்

## பொன்னையா நாகராசா



இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நாகராசா நேற்று முன்தினம் (06.03.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக்கணவரும் கமலாம்பிகை, பராசக்தி (கனடா), பொன்னம்பலம், சிதம்பரேஸ்வரி (ஜேர்மனி), சிதம்பரநாதன் (சுவிஸ்), அருளானந்தம் (ஜேர்மனி), ஞானேஸ்வரி (ஆஸ்திரேலியா), Rev. N.அருட்பிரகாசம் (தலைமைப் போதகர் ஜீவ ஒளி மிஷன்சபை கனடா), யோசுவா Rev.N.சிவகுமார் (தலைமைப் போதகர் ஜீவ ஒளி மிஷன் - இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குலசிங்கம், நகுலேஸ்வரன் (கனடா), சிறோஜினி, உதயகுமார் (ஜேர்மனி), பத்மினி (சுவிஸ்), ஈசா (ஜேர்மனி), அருளாளன் (ஆஸ்திரேலியா), கஜந்தி (கனடா), சாயிநந்தினி ஆகியோரின் மாமனும் சஞ்ஜீபன் - நளாயினி (ஆசிரியர் யா/யூனியன் கல்லூரி), தர்ஷா (கனடா), பிரதீஸ்குமார் - தனுஷாயினி, கிஷன் (பிரான்ஸ்), பவித்திரா, பிரியங்கா, தனுஷன், விேனாதா -வினிதா (ஜேர்மனி), சபீனா, சங்கீதா, சந்தியா (சுவிஸ்), சாருகா - கயன் (ஜேர்மனி), நிலானி, திலக்ஷன் - நிவேதா (ஆஸ்திரேலியா), ஜோய் ஷெக்கீனா - ஷீபா ஜெமீமா, ஷெரூபினா (கனடா), யூட் சைமன், யுதானி, யூலிய ஜோய், யூலிய ஜொய்சி, யூலிய ஜொயானா ஆகியோரின் அன்புப்பேரனும் ஷேபா, ஆராதனா, யூதா, யோசுவா, ஸ்ரீராகத்ரிஷிகா ஆகியோரின் அருமைப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

இணுவில் கிழக்கு, இணுவில். T.P : 021 3210819


R.L. Clement Cake Decorating School

சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற R.L.CLEMENT அவர்கள் ஆரம்பிக்கும் கேக் வகுப்புகள் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பாடங்கள் - வகுப்புகள்





Knightbridge PME (UK) என்னும் இங்கிலாந்து பாடசாலையினால் நடத்தப்படும் கேக் அலங்கரிக்கும் டிப்ளோமா Master Course வகுப்புகள் ஆரம்பம்.

(இந்த Master Course வகுப்புகளை இலங்கையில் கற்பித்து சர்வதேச சான்றிதழ் வழங்கும் அனுமதி R.L.CLEMENT கேக் அலங்கரிக்கும் வகுப்புக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது)

அமெரிக்காவில் வில்டன் கேக் வகுப்பினால் நடத்தப்படும் (Course I, II, III) வகுப்புகளை இங்கு கற்பித்து வில்டன் கேக் வகுப்பு (USA) சான்றிதழ் வழங்கப்படும்.

யாழ் வாழ் மக்களுக்கான விஷேட வகுப்புகள்



- கேக் தயாரிக்கும் நவீன முறைகள்
- பல வகையான பிறந்த நாள் கேக் அலங்கரிக்கும் முறைகள்

20 நாள்களில் (தினமும் காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை)
சகலவித உபகரணங்களும் உள்ளடங்கும்

ஆர்.எல்.கிளமன்ட் மற்றும் சானிகா கிளமன்ட் சேர்ந்து நடத்தும்

Malmee 2014 Most Popular Cake Exhibition and Workshop

"மல் மீ" கேக் கண்காட்சி

எதிர்வரும் (15.03.2014) சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை யாழ்ப்பாணம் இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

புதிய மாணவர்களுக்கான பதிவுகள் கேக் கண்காட்சி தினத்தன்று முற்பகல் 10.00 மணிமுதல் பதிவு செய்யப்படும்.
(குறிப்பிட்ட பதிவுகள் மட்டுமே) பதிவுகளுக்கு முந்துங்கள்

E-mail : clementcake@gmail.com
Website: www.clementcake.com
CONTACT - 011 252 2201

# வடக்கில் பெண்களுக்கெதிரான பாரபட்சங்கள் யாவும் ஒழியும்

## மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண்கள் தமது வாழ்க்கைத் தரத்தை தாமே மேம்படுத்திக் கொள்ளகளம் அமைத்துக்கொடுக்கும் வகையில் பெண்களுக்கெதிரான அனைத்து பாரபட்சங்களையும் ஒழித்து அர்ப்பணிப்புடன் செயற்படும் என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தனது மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஏறத்தாழ 30 வருட காலப் போரினால் ஏற்பட்ட இழப்புக்களைத் தாங்கி நவீன சமூக, பொருளாதார, கலாசார மாற்றத்துக்கு ஈடு கொடுத்து முன்னேறி வரும் வடக்கு மாகாண மகளிரைப் பார்க்கும் பொழுது கண்ணீர்த்துளியில் வைரங்கள் செய்யும் கலையைக் கற்றுக்கொள் என்னும் கவித்துவமான வரிகள் நினைவுக்கு வருகின்றன.

சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8 இன்று மாற்றத்துக்காக ஒன்றிணைவோம் என்ற மகுட வாசகத்தின் கீழ் ஒன்றிணைந்து செயற்படும் பெண்களின் மனப்பாங்கு சர்வதேச தரத்துக்கு விரிந்திருப்பதைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். எமக்கான பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் வெளியிலிருந்து ஒரு தீர்வு கிடைக்குமென எதிர்பார்த்துக் காத்திருப்பதை விட சவால்களுக்கு முகங்கொடுத்துச் சாதிக்கும் சக்திகளாகப் பெண்கள் உருவெடுத்துள்ளார்கள். இது பாராட்டுக்குரியது. சக்தியானது தான் இருப்பதற்கு இடத்தைப் பிடிக்காது, இருப்பது கூட கண்ணுக்குத் தெரியாது. ஆனால் அனைத்தையும் இயக்கும். அவ்வாறே எமது பெண்கள் தமது திறனின் உதவியுடன் எமது சமூகத்தை மாற்றியமைக்க முன்வருவார்கள் என்று திடமாக நம்புகின்றேன்.

முதலமைச்சரின் அமைச்சின் ஒரு அங்கமான மகளிர் விவகார அலகு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண்கள் தமது வாழ்க்கைத் தரத்தை தாமே மேம்படுத்திக் கொள்ள களம் அமைத்துக் கொடுக்கும் வகையில் பெண்களுக்கெதிரான அனைத்து பாரபட்சங்களையும் ஒழித்து அர்ப்பணிப்புடன் செயற்படும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தி மாற்றத்துக்காக ஒன்றிணைவோம் என்று கூறி மகளிர் அனைவரையும் இத்தினத்தில் மனதார வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகின்றேன்- என்றுள்ளது. (த)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சர்வதேச

யக் கூட்டமைப்பு சாடியிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான பேச்சு சர்வதேச மத்தியஸ்தத்துடன் நடைபெற வேண்டும். இலங்கை இராணுவம் தமிழ் மக்களின் காணிகள் பறிப்பது நிறுத்தப்பட வேண்டும். பறித்த காணிகள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்பதுடன் இனி மேல் அவ்வாறு இடம்பெறாது என்பதை சர்வதேச பொறிமுறையினூடாக உறுதிப்படுத்த வேண்டும். இலங்கையின் போர்க் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். என்ற மூன்று கோரிக்கைகளும் அமெரிக்காவின் இறுதித் தீர்மான வரைவில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

மேற்படி கோரிக்கைகளையே நேற்றைய சந்திப்பில் வலியுறுத்தியதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார். எமது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் இதனை உடனடியாக வோஷிங்டனுக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்தனர் என்றார் சுரேஷ். (த-5)

### மகாலிங்கத்துக்கு

வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா சபையின் யாழ். மாவட்ட தலைவர் மௌலவி அப்துல் அஸீஸ் ஆகியோர் உட்பட மாகாண சபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், முஸ்லிம் வர்த்தக சமூகப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

நிகழ்வின் இறுதியில் யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களால் நினைவுச் சின்னமொன்றும் தூதுவருக்குக் கையளிக்கப்படவுள்ளது. (த-10)

### தீர்மான

மான வரைவு கடந்த 3 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த தீர்மான வரைவு நேற்றையதினம் தமக்கு உத்தியோகபூர்வமாகக் கிடைத்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சயிட் அக்பாருதீன் தெரிவித்தார்.

குறித்த பிரேரணையில் உள்ள விடயங்கள் தொடர்பில் இந்திய அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர். இந்தப் பிரேரணை தொடர்பில் ஜெனிவா அமர்விலும் கலந்துரையாடல்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்று தெரிவித்த அவர், இந்திய அரசின் நிலைப்பாடு குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. (த-5)

### நவிப்பிள்ளை

பட்ட படையினரைக் காட்டிக் கொடுக்கச் சில நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்துக்கு அழுத்தம் கொடுக்கின்றன. இந்த அழுத்தங்களுக்கு இலங்கை அரசு ஒரு போதும் இணங்கப் போவதில்லை என்று சமரசிங்க கூறினார்.

ஒரு சில இராணுவத்தினருக்கு எதிராகக் குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு எதிரான உள்ளக விசாரணைப் பொறிமுறை தொடர்வதை சமரசிங்க சுட்டிக்காட்டினார்.

சில நாடுகளின் செயற்பாடுகளுக்கு அமைய எங்களால் செயற்படமுடியாது என்பதை மனித உரிமை ஆணையாளரிடம் தெரிவித்தாகச் சமரசிங்க குறிப்பிட்டார். (த-5)

### தலைவர்

கள் கூறுகின்றனர். ஆனால் அவர் வளர்த்து வந்த கரடிக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியவில்லை. அவர் வளர்த்த யானை மிகவும் அழகானது. அது தற்போது பின்னவெல யானைகள் சரணாலயத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. 2009 இல் போர் தீவிரம் பெற்றபோது, விடுதலைப் புலிகள் தம்மால் எடுத்துக் கொண்டு செல்லக் கூடியவற்றைமட்டும் கையில் எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

அப்போது இந்த யானையைக் கைவிட்டுச் சென்றனர். அதிர்ஷ்டவசமாக அது இறுதிப் போரில் கொல்லப்படாமல் தப்பிக் கொண்டது. அந்த யானை கிளிநொச்சிக் காட்டுக்குள் தப்பி ஓடியிருந்தது. பலாலி இராணுவ முகாமில் இருந்து சென்ற கொண்டிருந்த படையினரின் கண்களில் அது தற்செயலாகப்பட்டது.

அதை அவர்களை தம்முடன் கொண்டு சென்று பின்னர், தெஹிவளை மிருகக் காட்சிச் சாலைக்கு அனுப்ப ஏற்பாடு செய்தனர். கப்பல் மூலம் திருகோணமலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து தெஹிவளைக்கு அனுப்பப் பட்ட அந்த யானை, பின்னர் பின்னவெல சரணாலயத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இளம் பெண் யானையான அதற்கு மெனிகா என்று அங்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதற்குத் தற்போது 22 வயதாகிறது. பிரபாகரனுடன் இருந்த போது அது எப்படி அழைக்கப்பட்டதென்று தெரியவில்லை என்றும் கொழும்பு ஆங்கில நாளிதழ் மேலும் தெரிவித்துள்ளது. (த-5)

### மூதூர்

யாற்றிய பிரான்ஸ், தனது நாட்டின் அக்ஷன் பெய்ம் (பட்டினிக்கு எதிரான அமைப்பு) பணியாளர்கள் 17 பேர் இலங்கையின் திருகோணமலை மாவட்டத்தின் மூதூரில் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிட்டது.

இந்தப் படுகொலையுடன் தொடர்புடையவர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வரவேண்டியது இலங்கை அரசின் கடமை எனவும் பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

தண்டனை விதிக்கப்படாமைக்கு எதிரான போராட்டம் எல்லா இடங்களிலும் அவசியம். இலங்கையைப் பொறுத்தவரை தண்டனை விதிக்கப்படாமைக்கு எதிரான போராட்டம் தேசிய நல்லிணக்கத்துக்கு இன்றியமையாதது.

இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும். இவற்றை இலங்கை அரசிடம் வலியுறுத்துவதாகப் பிரான்ஸ் நேற்றைய அமர்வில் தெரிவித்தது

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 4 ஆம் திகதி திருகோணமலை மூதூரில் மனித நேயப் பணியாளர்கள் 17 பேர் கோரமாகச் சுட்டுக் கொல்லப் பட்ட நிலையில் மீட்கப்பட்டிருந்தனர். குறித்த படுகொலையை இலங்கை இராணுவமும், கடற்படையுமே மேற்கொண்டதாக அக்ஷன் பெய்ம் நிறுவனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### கொழும்பை

எட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை தோல்வியடைந்துவிட்ட நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் சபை தனது சொந்த - சர்வதேச - விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று நேற்று முன்தினம் நவிப்பிள்ளை பரிந்துரைத்திருந்தார்.

அவரது இந்தப் பரிந்துரையின் அடிப்படையில் சிறப்புக் குழுவை நியமிப்பது குறித்து தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது.

"சிறப்புக் குழுவில் ஒருவரா மூவரா நியமிக்கப்படவேண்டும் என்பது தொடர்பில் விவாதிக்கப்பட்டு வருகின்றது. விரைவில் அது தொடர்பான இறுதி முடிவு அறிவிக்கப்படும்" என்று ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களின் ஆதரவுடன் இந்தக் குழு செயற்படும் என்று தெரிகிறது. அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானம் சர்வதேச விசாரணை ஒன்றை இலங்கை மீது வலியுறுத்தா விட்டாலும் இந்தச் சிறப்புக் குழு நியமிக்கப்படும் என்று கூறப்படுகின்றது. (உ)

### பயங்கரவாத

யைப் பெற்றுத் தரவில்லையாயின், குற்றம் இழைத்தவர்களை நாம் தான் தண்டித்து எமக்கான நீதியை நிலைநாட்ட வேண்டும் - தமிழினத்தின் காவலர்கள்' என்ற வாசகம் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் கடந்த இரு தினங்களாக வடபகுதியின் பெரும்பாலான பகுதிகளில் விநியோகிக்கப்பட்டிருந்தன.

நான்கு பக்கங்களைக் கொண்ட இந்தத் துண்டுப் பிரசுரத்தில், தற்போதைய காலம் அஹிம்சைப் போராட்டத்துக்கான காலம் எனவும், எமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைத் துணிந்து சொல்லி அதற்கான தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இனப் படுகொலை என்பதை அங்கீகரிக்கும்போது தான் எமக்கான தமிழீழத் தனியரசு கிடைக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட துண்டுப் பிரசுரங்களை வைத்திருந்தனர் எனத் தெரிவித்துப் பளைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை இரு இளைஞர்களைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். உடையார்கட்டு, இத்தாவிலைச் சேர்ந்த இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஏழாலையைச் சேர்ந்த இளைஞனைப் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இளைஞனின் வீட்டுக்கு வெள்ளை வானில் சென்ற சிவில் உடை தரித்த 8 பேரே அவரைக் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர். குறித்த இளைஞனை கைது செய்ததற்கான ஆதாரப் பத்திரத்தினையும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் வீட்டிலிருந்தவர்களிடம் வழங்கிச் சென்றுள்ளனர். (த-5)

### புகைத்தலுக்கு

கரவெட்டி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, பிரதேச செயலகம், பிரதேசசபை, கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம், நெல்லியடி வர்த்தக சங்கம், கரவெட்டி சமுர்த்தி மகா சங்கம், சமுர்த்திச் சங்கம் மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்தப் பேரணியை நடத்தின.

கரவெட்டிப் பிரதேச செயலகம் முன்னால் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதி ஊடாக நெல்லியடி மத்திய பஸ் நிலையம் ஊடாக மாலி சந்திக்கு அண்மையில் உள்ள கரவெட்டி பிரதேச சபையுடன் நிறைவுற்றது.

பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், கோப்பாய், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிகளான மருத்துர் எஸ். ஜெயசீலன், மருத்துவர் எஸ்.செந்தூரன், கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் பொ. வியாகேசு, நெல்லியடி வணிகர் கழகத் தலைவர் எஸ். அகிலதாஸ், கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் உபாலி பொன்னம்பலம் ஆகியோர் பேரணியில் முன்னணியில் வந்து கொண்டிருந்தனர். பேரணியில் பெண்களும் மாணவர்களும் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்றனர்.

புகைத்தலுக்கு எதிரான பதாகைகள், சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும், புகைத்தலுக்கு எதிர்ரான கோஷங்களை எழுப்பியவண்ணமும் மக்களும் மாணவர்களும் பேரணியில் பங்கேற்றனர்.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமான பேரணி சுமார் ஒரு மணி நேரத்தில் மு.ப. 10.30 மணிக்கு முடிவடைந்தது. நெல்லியடிப் பொலிஸார் பேரணி சிறப்பாக நடைபெற போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தனர்.

பேரணி முடிவில் கரவெட்டி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் புகைத்தலால் விளையும் தீமைகள் தொடர்பான கருத்துரைகளும் இடம்பெற்றன. அத்துடன் புகைபொருள் விற்பனை செய்யாத உணவகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களுக்கு மாகாண சுகாதார அமைச்சின் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (த-173)

### மருதங்கேணி

மக்கள் தெரிவித்துள்ளனர்.

மருதங்கேணிப் பிரதேச மீளாய்வுக் கூட்டம் நேற்று இடம்பெற்றபோதே மக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மருதங்கேணி பிரதேச மீளாய்வுக் கூட்டம், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் இடம்பெற்றது. இது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இல்லை என்றும், மீளாய்வுக் கூட்டமே என்று பிரதேச செயலாளர் கூட்டத்தின் ஆரம்பத்தில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.

மீளாய்வுக் கூட்டம் என்பதால், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தலைவர் தவிர்ந்த ஏனைய அரசியல்வாதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்ட போதும், பருத்தித்துறைப் பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் வடமாராட்சி அமைப்பாளருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் இதில் கலந்து கொண்டிருந்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் பிரதானமாக, தமது பிரதேசத்தின் வீதிகள் திருத்தப்படாமை, மின்சார வசதி வழங்கப்படாமை, போக்குவரத்து வசதிகள் சீரின்மை தொடர்பில் பிரஸ்தாபித்தனர்.

சுனாமி, போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம். சுனாமி ஆபத்துக்குரிய பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசம். ஆனால் இடர் ஏற்படுகின்றபோது தப்பித்துச் செல்வதற்கு எந்தவொரு வீதிகளும் சீரில்லை. பிரதான வீதிகள் மட்டுமல்ல, உள்ளூர் வீதிகளும் சீரில்லாமல் இருக்கின்றன. எமது பிரதேசம் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் போடப்பட்ட வீதிகளுக்கு மேலேயே வீதிகள் போடப்படுகின்றன. ஆனால் எமது பிரதேசத்தில், அதுவும் இடர் எதிர்கொண்டுள்ள எமது பிரதேசத்துக்கு வீதிகள் புனரமைப்பதற்கு நிதியில்லை என்கிறார்கள் என இந்தக் கூட்டத்தில் மக்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டனர்.

பருத்தித்துறை - மருதங்கேணி பிரதான வீதி இன்னமும் புனரமைப்புச் செய்யப்படவில்லை. 32 கிலோ மீற்றர் நீளமான மேற்படி வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த வீதியை திருத்தித்தரு மாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்துக் களைத்துவிட்டோம். இன்னும் மூன்று மாதங்களுக்குள் வீதியைப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் சாத்வீக ரீதியில் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்று எச்சரித்தனர் மக்கள். (த-5)

### மன்னார்

வைக்கப்பட்டும் புதைக்கப்பட்டுள்ளன. எனவே, புதைக் கும் போது சம்பிரதாயபூர்வமான நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளமை அப்பகுதி மயானம் என்பதை உறுதி செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.


அருகில் கோயில் ஒன்று நிர்மாணிக்கப்பட்டமையே மயானம் கைவிடப்பட்டமைக்குக் காரணமாக அமைந்திருக்கலாம் எனத் திணைக்களம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பிரதேசம் தொடர்பான தொல்பொருள் திணைக்களத்தின் அறிக்கை நேற்று முன்தினம் மன்னார் நீதிவானிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த-5)

# 15,17 வயதுக் கரப்பந்தாட்டத்தில் வயாவிளான் அணிகள் சம்பியன்



வயாவிளான் மத்திய மகா வித்தியாலய 15 வயதுப் பெண்கள் அணி



வயாவிளான் மத்திய மகா வித்தியாலய 17வயதுப் பெண்கள் அணி

யாழ்ப்பாணம், மார்ச் 8

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 15,17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப் பந்தாட்டத்தின் இறுதியாட்டத் தில் இரு பிரிவுகளிலும் வயா விளான் மத்திய மகா வித்தி யாலயம் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

நேற்று முன்தினம் வியாழக் கிழமை தெல்லிப்பழை யூனி யன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதி யாட்டத்தில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து அளவெட்டி அருணாசலம் மகா வித்தி யாலய அணி மோதிக் கொண் டது.

3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் வயாவி ளான் மத்திய மகா வித்தியா லய அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

மூன்றாமிடத்துக்கான ஆட் டத்தில் தெல்லிப்பழை மகாஜ னக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை மெய் கண்டான் மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

**3 செற்களைக் கொண்ட இறுதி யாட்டத்தில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.**

இதில் தெல்லிப்பழை மகாஜ னக் கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக் கியது.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட் டத்தில் அளவெட்டி அருணோ தயக் கல்லூரி அணியை எதிர்த்து வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட இறுதி யாட்டத்தில் வயாவிளான் மத் திய மகா வித்தியாலய அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத் தில் இளவாலை மெய்கண் டான் வித்தியாலய அணியை எதிர்த்து அளவெட்டி அருணா சலம் வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட ஆட் டத்தில் இளவாலை மெய்கண் டான் மகா வித்தியாலய அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமி டத்தைத் தனதாக்கிக் கொண் டது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

கண்டாவளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந் தாட்டம், மேசைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கி ழமை தர்மபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

இதேவேளை 19 வயதுப் பிரிவு ஆண்,பெண் இருபா லாருக்கு மான கரப்பந்தாட் டப் போட்டியும் இன்று இடம் பெறவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச் 8

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக்கழகங்களுக்கு இடை யிலான ஆண், பெண் இருபா லாருக்குமான உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் இன்று சனிக்கிழமை ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை நாளைமறு தினம் ஞாயிற்றுக்கிழமை ஆண், பெண் இருபாலாருக் குமான எல்லே போட்டிகள் இடம்பெறவுள்ளன. (த-23)

★ ★ ★

மன்னார் உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்க ளுக்கு இடையே நடத்தும் முதற்தர அணிகளுக்கு இடை யிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை பள்ளி முனை சென்.லூட்சியா விளை யாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பள்ளி முனை சென்.லூட்சியா விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.சேவியர் விளை யாட்டுக்கழக அணி மோத வுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 8

தீவகக் கல்வி வலயப் பாடசா லைகளின் 15 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான சதுரங் கம், கரம் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நாரந்தனை றோ.க. வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன. (த-23)

## வலிகாமம் கல்வி வலயத்தின் கரப்பந்தாட்டப் போட்டிகள்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையி லான 15 வயது, 17 வயது, 19 வயதுப்பிரிவு ஆண், பெண் இரு பாலா ருக்குமான கரப்பந்தாட் டப் போட்டி எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் பண்டத்த ரிப்பு இந்துக் கல்லூரி மைதா னத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் 11 ஆம் திகதி ஆண்க ளுக்கான போட்டியும், 12 ஆம் திகதி பெண்களுக்கான போட் டியும், 13 ஆம் திகதி ஆண், பெண் இருபாலாருக்குமான இறுதியாட்டமும் இடம்பெற வுள்ளன. (த-23)

## முசலிப் பிரதேசக் கரப்பந்தாட்டம் ஹமீதியா, ஜேம்ஸ் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 8

முசலிப் பிரதேச செயலர் பிரி வுக்கு உட்பட்ட பதிவு செய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்க ளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட் டித் தொடரின் இறுதியாட் டங்கள் அண்மையில் கொக் குப் படையான் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றன.



கொண்டச்சி ஹமீதியா வி.க. அணி

முதலில் இடம்பெற்ற ஆண்க ளுக்கான இறுதியாட்டத்தில் கொண்டச்சி ஹமீதியா விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து சிலாவத்துறை அல் ஹமாஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் கொண்டச்சி ஹமீதியா விளையாட்டுக் கழக அணி 27:25, 20:25, 25:19 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.



கொக்குப் படையான் சென். ஜேம்ஸ் வி.க.

தொடர்ந்து இடம்பெற்ற பெண் களுக்கான இறுதியாட்டத்தில் கொக்குப்படையான் சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முள்ளிக் குளம் சென்.ஜோசப் விளை யாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் கொக்குப் படையான் சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி 25:19, 25:18 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (த-23)

## சிலாவத்தை இளம்பறவை இறுதியாட்டத்துக்கு தகுதி



யாழ்ப்பாணம், மார்ச் 8

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான உதைபந் தாட் டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் சிலா வத்தை இளம்பறவை அணி வெற்றி பெற்றுள்ளது.

அரையிறுதியாட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக மைதா னத்தில் இடம்பெற்றது.

இதில் சிலாவத்தை இளம் பறவை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளம்பில் இளந்தென்றல் விளையாட் டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் சிலாவத்தை இளம் பற வைகள் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்று இறுதி யாட்டத்துக்குத் தகுதி பெற் றது. (த-23)

## தீவக கல்வி வலயத்தின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 8

தீவகக் கல்வி வலயப் பாடசா லைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட் டிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை ஊர்காவற்றுறை சென். அன் ரனீஸ் கல்லூரி மைதானத் தில் இடம்பெறவுள்ளன. (த-23)

## இளைஞர் கழகங்களின் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 8

தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் ஆண், பெண் இரு பாலாருக்குமான கபடி, கயிறு இழுத்தல் போட்டிகள் இன்று சனிக்கிழமை இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்க விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

## நாரந்தனை அண்ணா வி.க. அணி வெற்றி


யாழ்ப்பாணம், மார்ச் 8

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக்கழகங்களுக்கு இடை யிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட் டத்தில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழகம் சம்பிய னானது. அண்மையில் ஊர்கா வற்றுறை சென். அன்ரனீஸ் கல் லூரி மைதானத்தில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது.

**நாரந்தனை அண்ணா விளையாட் டுக் கழக அணி 19.12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற் றுச் சம்பியனானது.**

இதில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதன்போது நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழக அணி 19:12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற் றுச் சம்பியனானது. (த-23)



ஹர்பஜன் சிங்

# நமக்கு நாமே போட்டி

இந்திய வீரர்கள் யாருடனும் எனக்குப் போட்டி கிடையாது. எனக்கு நான் மட்டுமே போட்டி என தெரிவித்துள்ளார் ஹர்பஜன் சிங்.

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்(வயது - 33). உடற் தகுதியீனம் காரணமாக அணியில் இருந்து நீக்கப்பட்டார், இவருக்குப் பதிலாக இடம்பெற்ற தமிழக சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின், உள்ளூரில் மிரட்டினாலும் அந்நிய மண்ணில் சொதப்புகிறார்.

இதனால் ஹர்பஜன் சிங் மறுபடியும் அணிக்குத் திரும்ப வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

இது குறித்து ஹர்பஜன் சிங் கூறுகையில், இத்தனை ஆண்டு கிரிக்கெட் வாழ்க்கையில் ஒருவரை மட்டும் தான் போட்டியாக நினைப்பேன். அதாவது எனக்கு நான் மட்டுமே போட்டி. ஒருபோதும் அஷ்வின் அல்லது வேறு யாரையும் போட்டியாக நினைத்தது இல்லை.

நமக்கு நாமே போட்டியாக இருந்தால் தான் சிறந்த கிரிக்கெட் வீரராக உருவாக முடியும். மற்றப்படி, தற்போதுள்ள இந்திய வீரர்கள் குறித்து எவ்வித கருத்தும் தெரிவிக்க விரும்பவில்லை.

என்னைப் பொறுத்தவரையில் வயது என்பது ஒரு இலக்கம் மட்டும் தான். ஒருவர் 45 வயதிலும் திறமை வெளிப்படுத்தினால், அவரை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. இந்திய அணிக்காக இன்னமும் விளையாட வேண்டும் என்ற விருப்பம் உள்ளது எனத் தெரிவித்துள்ளார். (த)

# டேல் ஸ்ரெய்ன், ஜோன்சன் 20/20 தொடரில் இல்லை

ஆஸ்திரேலியா-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள 20/20 போட்டித் தொடரில் இரு அணிகளினதும் முக்கிய அதி வேகப் பந்து வீச்சாளர்கள் விளையாடப்போவதில்லை.

தொடர்ச்சியாக போட்டிகளில் மிச்சல் ஜோன்சன் விளையாடி வருவதனால், உலக 20/20 தொடருக்கு முன்னதாக ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை தென்னாபிரிக்காவின் டேல் ஸ்ரெனுக்கு இறுதி டெஸ்ட் போட்டியில் தசைப்பிடிப்பு ஏற்பட்டது. அது குணமடைய 7-10 நாள்கள் தேவை என்ற நிலையில் முதல் இரு போட்டிகளிலும் விளையாடமாட்டார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது போட்டியில் விளையாடுவது சந்தேகம் என்ற நிலையில் உலக 20/20 தொடருக்கு தயாராகி விடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)






# இலங்கை கிரிக்கெட் சபைக்கு எதிராக வீரர்கள் போர்க்கொடி

இலங்கை கிரிக்கெட் சபைக்கு எதிராக வீரர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இலங்கை கிரிக்கெட் சபை அண்மையில் வீரர்களுக்கு 7 வீத சம்பள உயர்வை அறிவித்தது. ஆனால் உலகக் கிண்ணம் போன்ற போட்டிகள் மூலம் கிடைக்கும் வருவாயில் 20 வீதம் தர வேண்டும் என்பது இலங்கை வீரர்களின் கோரிக்கை. இதை நிராகரித்துள்ள இலங்கை கிரிக்கெட் சபை, சபையின் 58 வீத வருமானம் வீரர்களின் சம்பளத்துக்காக மட்டும் செலவிடப்படுகிறது. அதைவிட 7 வீத சம்பள உயர்வையும் இந்த ஆண்டு அறிவித்துள்ளோம். இந்த நிலையில் இப்படி வீரர்கள் கோரிக்கை வைப்பது நியாயமல்ல என்று தெரிவித்துள்ளது. (த)




# தொடரை வென்றது இங்கிலாந்து

இங்கிலாந்து-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், இங்கிலாந்து அணி 2-1 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இரு அணிகளுக்குமிடையில் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இங்கிலாந்து அணி 25 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. முதலில் துடுப்பாடிய இங்கிலாந்து அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜோ ரூட் 107 (முதல் ஒரு நாள் சர்வதேசப் போட்டி சதம்) ஓட்டங்களையும், ஜோஸ் பட்லர் 99 ஓட்டங்களையும் பெற்றனர்.

மொஈன் அலி 55 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்துவீச்சில் டுவைன் பிராவோ 3 இலக்குகளைக் கைப்பற்றிக்கொண்டார்.

பதிலுக்குத் துடுப்பாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 47.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 278 ஓட்டங்களைப் பெற்றது. டினேஷ் ராம்டின் 128 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். ரிம் பிரஸ்னன் 3 இலக்குகளையும், ஸ்டுவோர்ட் புரோட் 2 இலக்குகளையும் கைப்பற் றினர். போட்டியின் நாயகனாகவும் தொடர் நாயக னாகவும் ஜோ ரூட் தெரிவு செய்யப்பட்டார். (த)

# ரொனால்டோ புதிய சாதனை



கிறிஸ்டியானோ ரொனால்டோ

சர்வதேச நட்பு உதைபந்தாட்ட போட்டியில் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் அசத்தலில், கமரூன் அணிக்கு எதிராகப் போர்த்துக்கல் அணி வெற்றி பெற்றது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர்(ஜூன் 12, ஜூலை 13) பிரேஸிலில் நடக்கவுள்ளது. இதற்குத் தயாராகும் விதமாக உலகின் பல்வேறு பகுதிகளில் சர்வதேச நட்பு உதைபந்தாட்டப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

போர்த்துக்கல்லில் உள்ள லெய்ரியாவில் நடந்த போட்டியில் போர்த்துக்கல் அணி, கமரூன் அணியை எதிர்கொண்டது.

21ஆவது நிமிடம் போர்த்துக்கல்லுக்கு ரொனால்டோ முதல் கோல் அடித்தார், கமரூன் அணியின் வின்சென்ட் 43ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார். இரண்டாவது பாதியில் போர்த்துக்கல் வீரர்கள் ரால் மெய்ரிலெஸ் (66), பேபியோ கான்டிரோ (67), எடினோ (76) ஆகியோர் கோல் மழை பொழிந்தனர்.

83ஆவது நிமிடம் கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றொரு கோல் அடித்ததால், போர்த்துக்கல் அணி 51 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 2 கோல்கள் அடித்ததன் மூலம், சர்வதேச அரங்கில் போர்த்துக்கல் அணிக்காக அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற சாதனை படைத்தார் ரொனால்டோ. இவர் இதுவரை 110 போட்டியில் 49 கோல்கள் அடித்துள்ளார். இதற்கு முன் முன்னாள் வீரர் பாலெட்டா 88 போட்டியில் 47 கோல்கள் அடித்திருந்தார். (த)

2 கோல்கள் அடித்ததன் மூலம், சர்வதேச அரங்கில் போர்த்துக்கல் அணிக்காக அதிக கோல் கள் அடித்த வீரர் என்ற சாதனை படைத்தார் ரொனால்டோ.

# பாகிஸ்தான் இலங்கை பலப் பரீட்சை இன்று

12ஆவது ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி பங்காளதேஷில் நடைபெற்று வருகிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்காளதேஷ், மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய 5 அணிகள் பங்கேற்றன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒருமுறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும்.

நேற்று முன்தினத்துடன் லீக் ஆட்டங்கள் முடிவடைந்து விட்ட நிலையில் புள்ளி பட்டியலில் முதல் இரண்டு இடங்களைப் பிடித்த பாகிஸ்தான், இலங்கை அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றன.

இலங்கை அணியைப் பொறுத்த வரை நடைபெற்ற அனைத்து லீக் (4 போட்டி) ஆட்டத்திலும் வெற்றி பெற்றது. பாகிஸ்தான் அணி 3 வெற்றி ஒரு தோல்வி பெற்றது. இந்தியா அணி 2 வெற்றி, 2 தோல்வி, ஆப்கானிஸ்தான் ஒரு வெற்றி, 3 தோல்வி பெற்றன. சொந்த மண்ணில் விளையாடிய பங்காளதேஷ் ஒரு வெற்றி கூட பெறாமல் அனைத்து ஆட்டத்திலும் தோல்வி அடைந்து ஏமாற்றம் அளித்தது.

ஆசிய கிண்ண இறுதிப்போட்டி இன்று டாக்காவில் நடக்கிறது. இதில் பாகிஸ்தான்- இலங்கை அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இரு அணிகளும் சமபலம் வாய்ந்தது என்பதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. லீக் ஆட்டத்தில் இலங்கையிடம் பாகிஸ்தான் தோற்றது. குறிப்பிடத்தக்கது

இதற்கு பழிதீர்க்க பாகிஸ்தான் முயற்சிக்கும். பாகிஸ்தான் அணியில் முகமது ஹபீஸ், மிஸ்பா- உல்-ஹக், உமர் அக்மல், அப்ரிடி போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். இதில் அப்ரிடி இந்தியா, பங்காளதேஷிக்கு எதிராக அதிரடியாக விளையாடி பாகிஸ்தானை வெற்றிபெற வைத்தார். உமர் குல், சயீத் அஜ்மல், ஜுனைட்கான் போன்ற பந்து வீச்சாளர்களும் நல்ல நிலையில் உள்ளனர்.



*ஆசிய கிண்ணம்*

இலங்கை அணியும் சம பலத்துடன் உள்ளது. அந்த அணி தோல்வியே சந்திக்காமல் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளது. சங்கக்கார, மத்தியூஸ், திரிமன்னே போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு பலம் சேர்க்கும் வகையில் ஜோக்கர்' மன்னன் மலிங்கா மிரட்டுவார். அஜந்தா மெண்டீஸ், சேன நாயக்க ஆகியோர் சுழற்பந்தில் அசத்துவார்கள்.

ஆசிய கிண்ணத்தை இலங்கை 4 முறையும், பாகிஸ்தான் 2 முறையும் கைப்பற்றி உள்ளன. 2012 ஆம் ஆண்டு நடந்த போட்டியில் பாகிஸ்தான் சம்பியன் பட்டம் பெற்றது. இன்று நடைபெறும் போட்டியிலும் வெற்றி பெற்று ஆசிய கிண்ணத்தை தக்க வைக்கும் முனைப்புடன் உள்ளது. ஆனால் இலங்கை அணி தற்போது உள்ள நிலையில் இலங்கை அணிக்கே கிண்ணம் வெல்ல அதிக வாய்ப்பு பிரகாசமாகவுள்ளது. இரு அணிகள் இன்று கிண்ணத்தை வென்று சாதனை படைக்கப் போகின்றார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். (த-400)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்.

Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

Diploma in English 2 1/2 Months

- எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
- Excellent Teacher's Panel & Individual Attention.

Jaffna Branch : NO. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel : 021 222 4550
Vavuniya Branch : NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyamkulam, Vavuniya. Tel : 024 324 5287
Hotlines : 0777585913, 0777222422, 0714299935, 0777730074

Batch 1 : 08.03.2014
Batch 2 : 10.03.2014
Batch 3 : 15.03.2014
Batch 4 : 17.03.2014

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

முதன்முறையாக
ஆபரண மலிவு விற்பனைச் சந்தை
வவுனியாவில்

தங்க முலாம் பூசப்பட்ட நகைகள், கிளசிக் பேர்ல்ஸ், ரேடியம் முலாம் பூசப்பட்ட பெரிய கல் பதித்த ஆபரணங்கள் முதலியவற்றை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மகளிருக்கு ஓர் பொன்னான சந்தர்ப்பம்.

ரூ.50/- ரூ.150/- மற்றும் ரூ. 400/- மட்டுமே.

இடம்: நெல்லி ஸ்டார் ஹொட்டல் கிளை - பாக்கியம் ரெஸ்ட்
1ம் குறுக்கு வீதி, வவுனியா.
தொ.இல.024 2220216, 024 2224477

இறுதி 2 நாள்கள் மட்டுமே 08 மற்றும் 09 மார்ச் 2014
சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரண்டு தினங்கள் மட்டுமே
(நேரம்:காலை-10மணிமுதல்-மாலை-8மணி-வரை.

1 இலட்சத்திற்கு மேற்பட்ட டிசைன்களிலிருந்து தெரிவு செய்து வாங்குவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

| Rs.50/- மட்டும் | Rs.150/- மட்டும் |
| --- | --- |
| • தங்கமுலாம் பூசப்பட்ட மோதிரம்... | • கொரியன் ஸ்டோன் ஸ்டச்... |
| • புதிய வித முத்து மாலை... | • அவுஸ்திரேலியன் மோதிரம்... |
| • புத்த சிலை பதித்த கீடைக்... | • வெஸ்டன் ஸ்டைல் தோடு... |
| • கிறிஸ்தவ சிலை பதித்த கீடைக்... | • தங்கமுலாம் பூசப்பட்ட ஆண்களுக்கான மோதிரம் |
| • டொல்பின் வடிவம் பதித்த கீடைக்... | • கொரியன் ஸ்டோன் தோடு... |
| • என்டிக்ஸ் கிடைக்கும் ... | • வெள்ளி முலாம் பூசப்பட்ட கால் கொலுசு... |

Rs.400/- மட்டும்

| | |
| --- | --- |
| • அவுஸ்திரேலியன் டயமண்ட் நெக்லஸ் செட். | • கிளாசிக் பேர்ஸ் நெக்லஸ் செட்... |
| • தங்கமுலாம் பூசப்பட்ட வளையல் செட். | • சுஹாகன் மங்கல் சூக்ரர்... |
| • தங்க முலாம் பூசப்பட்ட சங்கிலி. | • பென்சி வளையல்... |
| • அவுஸ்திரேலியன் டயமண்ட் சேலை பின். | • முத்துதோடு... |
| • தங்க முலாம் பூசப்பட்ட ஜிமிக்கி. | • ஆண்களுக்கான கைமாலை... |

விசேட சலுகை:திருமண மற்றும் விசேட வைபவங்களுக்கான ஆபரணங்கள் ரூபாய் 500/- முதல் 3000/- வரையான விலைகளில் விற்கப்படும்.
Entry - Free | Contact :0755 075675 | Sunday Open
வழங்குவோர் : Beauty Tex, Colombo

விற்பனைக்கு
ஒரு மாதம் நிரம்பிய German Shepherd இன நான்கு நாய்க்குட்டிகள் (கறுப்பு நிறம்) உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 3798684
நேரம்: 11மணிக்குப் பின்
(29779)(12.5.6)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கைநெறிகள்
IABF & DABF, CBF&DBF
(Tamil & English Medium)
Chartered CAB 1 & CAB 11
(Tamil & English Medium)
Aat (Sri Lanka)
(Tamil & English Medium)
Further Datails:
JAFFNA COLLEGE UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
021 222 3382
(கி/12356)(7.6.3)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பொங்கல் விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும்
வாணிபர்களுக்கான அறிவித்தல்
நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் 17.03.2014 திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இந்த விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான வியாபார நிலையங்களுக்கான ஏலமும், வாகனத் தரிப்பிடங்களுக்கான ஏலமும் நாளை 09.03.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.
முக்கிய குறிப்பு: 2014 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரம், 2014 ஆம் ஆண்டுக்கான கரைச்சிப் பிரதேச சபையின் தற்காலிக உரிமம் என்பன பெற்றிருத்தல் வேண்டும். ஏலத்தின்போது முழுப் பணமும் செலுத்தப்படல் வேண்டும்.
நாகதம்பிரான் ஆலய பரிபாலனசபை.
புளியம்பொக்கணை.
(43543)(2.6.3)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள், தொழில் தேடுவோர் வெளிநாடு செல்வோர், இளைஞர், யுவதிகள் இணையமுடியும்.
"எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 15.03.2014 சனிக்கிழமை
பிரிவு:4 03.00-05.00
வாரநாள் பிரிவுகள் ஆரம்பம் 11.03.2014 செவ்வாய்
1. காலை 9.00-11.00 2. காலை 11.00-01.00
குறிப்பு - பயிற்சியில் இணைந்துகொள்ள அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சர்வதேச மகளிர் தினம் இன்று



பொதுவாகவே ஒவ்வொரு ஆண்டும் பல்வேறுபட்ட சர்வதேச நாள்கள் பிரகடனப்படுத்தப்பட்டு அவை சார்ந்த முக்கியத்துவமும் விழிப்புணர்வும் மக்களுக்கு ஏற்படுத்தப்படுகின்றது. அந்த வகையில் மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர்தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இது 103 ஆவது மகளிர் தினமாகும். மார்ச் 8 ஆம் திகதியை பெண்கள் தினமாக பிரகடனப்படுத்தியமைக்கு வரலாற்றுப் பின்னணியும் உள்ளது. குறிப்பாக காலம் காலமாக பெண்களுக்கு இழைக்கப்படும் பாரபட்சம், வன்முறைகள், உரிமைமீறல்களை பெண்கள் அனுபவித்தாக வேண்டும் என்ற மூடநம்பிக்கையைத் தகர்த்தெறிந்து உரிமைக்காக குரல்கொடுத்து வெற்றிஅடைந்த நாள் இதுவாகும்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகர ஆடைத்தொழிற்சாலையில் கடமையாற்றிய பெண்கள் மிகவும் நலிவுற்ற வேலைச்சூழலில் இருந்ததுடன் ஆண்களுக்கு வழங்கப்பட்ட சம்பளத்தில் அரைவாசி சம்பளத்தைப் பெற்று வந்தனர். இதனால் பெரும்பாலான பெண்கள் நோய் காரணமாக உரிய காலத்துக்கு முன்னரே இறக்கவேண்டி ஏற்பட்டது. அத்தகைய சூழலில் தமக்குச் சம உரிமைவேண்டி இந்தப் பெண்கள் 1857 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி வீதியில் இறங்கித் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதில் வெற்றியும் கண்டனர். பெண்கள் அணியாகத் திரண்டு உரிமைக்காகப் போராடி வெற்றி பெற்ற அந்தச் சம்பவத்தை நினைவு கூரும் முகமாக சர்வதேச மகளிர்தினம் 1910 ஆம் ஆண்டு தொடக்கம் கொண்டாடப்பட்டு வருகின்றது.




இந்த 100 வருடகாலப்பகுதியில் பெண்கள் அடைந்த வெற்றிகள், எமது சமூகத்தில் இன்றைய பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் சவால்களும், அதனை எவ்வாறு வெற்றிகொள்ளுதல் ஆகியனவற்றுக்கான நீண்டகாலத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பல்வேறு மட்டங்களிலும் உணர்த்தும் முகமாக இந்த மகளிர் தினத்தை நடத்துவது வழமையாகும். இந்த வருடத்துக்கான சர்வதேச மகளிர் தின தொனிப்பொருளாக எழுச்சியூட்டும் மாற்றம் என்பது அமைகின்றது.

எமது சமூகத்தைப் பொறுத்தவரை கடந்த 100 ஆண்டு காலப்பகுதியில் பெண்கள் பல்வேறு முன்னேற்றங்களை அடைந்துள்ளார்கள். ஏனைய தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடும் போதும் இலங்கையின் எழுத்தறிவு வீதம் உயர்வாக உள்ளது. குறிப்பாகப் பெண்களின் கல்வியறிவு வீதம் 90 வீதத்தினைத் தாண்டியுள்ளது. தீர்மானம் எடுக்கும் மட்டங்களிலும் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளது.



பெண்கள் சகல துறைகளிலும் சமத்துவத்தை அடைதல் என்பதை ஒரு சில நாள்களில் கொண்டு வரமுடியாது. அதனை அடைவதற்கு நீண்டகாலம் எடுக்கும். இதற்கு சமூகத்தின் சில தரப்பினரின் முயற்சி மட்டும் போதாது. சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரதும் ஒத்துழைப்பும்வேண்டும். குறைந்தபட்சம் தனது குடும்ப சமூக மட்டத்திலாவது இத்தகைய முன்னேற்றங்களுக்கு ஒத்துழைத்தல் வேண்டும். அதனை இன்றே செய்யத் தொடங்குவோம். அதற்காக உறுதிபூண்டு பெண்களுக்கான சம சந்தர்ப்பத்தை நோக்கிய நகர்வுக்கு ஒன்றிணைவோம்.

*உதயனி நவரத்தினம்*
*மாவட்ட இணைப்பாளர், பெண்கள் அபிவிருத்தி*
*மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.*

# அதிக வேலை செய்தும் பெண்களுக்கு குறைந்த வருமானமே

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் உலகளாவிய ரீதியில் பெண்கள் 60 வீதமான வேலைகளை மேற்கொள்கின்ற போதிலும் கிடைக்கின்ற வருமானத்தில் 10 வீதமான அளவு மட்டுமே அவர்களைச் சென்றடைகின்றது. மேலும் மொத்த உலக சொத்துக்களில் ஒரு வீதத்தை மட்டுமே அவர்கள் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு ஊடகத்துறையில் உள்ள தென் ஆசியாவின் பெண்களின் இலங்கைக்கான பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் பெண்கள் தாம் ஈட்டும் வருமானத்தில் 90 வீதமானவற்றைத் தமது குடும்பத்துக்கும் திரும்ப முதலிடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இலங்கையில் கூட பெண்கள் அதிக வருவாய் ஈட்டிக் கொடுப்பதில் முன்னிலை வகிக்கின்றனர். ஆனால் இலங்கை உட்பட தென்னாசிய நாடுகளில் பெண்களின் பாதுகாப்பு என்பது பெரிய பிரச்சினையாகவே காணப்படுகின்றது. ஊடகத்துறையில் பணியாற்றும் பெண்கள் கூட அச்சுறுத்தப்பட்டு சில செயல்களைப் புரியுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அத்துடன் அச்சுறுத்தப்படல், வன்முறைப் பிரயோகம் மற்றும் கொலை என்பன அவர்களைப் பொறுத்தவரை ஒரு சமூகப் பிரச்சினையாகவே உருவெடுத்துக் காணப்படுகின்றது.

இந்த ஆண்டுக்கான மகளிர் தின சுலோகமாக 'மாற்றத்துக்கான தூண்டுதல்' என்பதை நினைவில் கொண்டு பெண்களுக்கான பாதுகாப்பான சூழல் ஒன்று இங்கு ஏற்படுத்தப்பட வேண்டும்.








காயத்திரி.வி

# பெண்களுக்கு இழைக்கப்படுபவையும் அவர்களால் இழக்கப்படுபவையும்

இன்றைய நவகாலனித்துவ உலகில் பெண்கள் சகலதுறைகளிலும் வீறுநடை போட்டுக் கொண்டிருப்பது பெண் வர்க்கத்துக்கே பெருமை சேர்க்கும் ஒன்று என்றுதான் கூறவேண்டும். இது ஒருபுறம் இருக்க, மறுபுறம் பல பெண்கள் அடிமைகளாக அடக்குமுறை என்ற வட்டத்துக்குள்ளே ஓரங்கட்டப்படுவதும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. இவர்களுக்குள்ளும் எத்தனையோ ஆசைகள், கனவுகள், மறைந்து கிடக்கின்றன என்பதை அறியாத வர்க்கத்தினர் இன்னமும் அவர்களை அடிமைகளாக்கி ஆட்சி செலுத்தி வருகின்றனர்.

அந்தவகையில் இக்கட்டுரையானது பெண்களின் இரு கோணங்களையும் ஆராய்வதாக அமைந்துள்ளது. அதாவது பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளும் பெண்கள் தாமாகவே இழப்பவைகளும் என்ற நோக்கில் ஆராய வேண்டியுள்ளது. ஏனெனில் இன்று பெண்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கு ஓரளவுக்கு அவர்களே காரணமாக இருக்கின்றனர்.

தமிழர்களது பண்பாட்டுச் சூழலில் பெண்களின் பிரத்தியேக வாழ்க்கை வீட்டுடனும், வீட்டுடன் இணைந்த அயலுடனும் தொடர்புபட்டிருந்தது. ஆனால் கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றமே அவாகளை இன்று விண்வெளிவரை கொண்டு சென்றுள்ளது. அதாவது "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்று சிலர் கூறுவார்கள். ஆனால் இன்றைய பெண்கள் அடுப்பூதுவதும் இல்லை. படிக்காமல் விடுவதும் இல்லை என்று நாம் தம்பட்டம் அடித்துக்கொண்டிருந்தாலும் இன்றும் பெண் கல்வியுரிமையை மறுக்கும் நிலை இருக்கத்தான் செய்கின்றது. அதிகமாக முஸ்லிம் பெண்கள் வாழும் நாடுகளில் இந்நிலையைக் காணமுடிகின்றது.

தலைப்பிள்ளை பெண் பிள்ளையாகப் பிறந்தால் கள்ளிப்பால் கொடுத்தும், சட்டியால் மூடியும் கொல்லும் வழக்கம் இன்னமும் இந்தியா உள்ளிட்ட பல்வேறுபட்ட நாடுகளிலேயே காணப்படுகின்றது.

அதேபோல் ஆபிரிக்க நாடுகளில் பெண்பிள்ளைகளுக்கு நேரும் பாலியல் கொடுமைகளைத் தடுக்கும் நோக்கில் அவர்களின் மார்பகங்களில் சூடு வைக்கும் ஒரு கொடுமை பரவலாக நடைபெற்று வருகிறது. கமரூன் நாட்டில் நான்கில் ஒரு பெண்கள் இதற்கு ஆளாகுகின்றனர். புள்ளிவிவரங்களின்படி 3.8 மில்லியன் பெண்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இதிலும் கொடுமை என்னவெனில் பெற்ற தாய்மார்களே இந்தக் காட்டுமிராண்டித் தனமான செயலில் ஈடுபடுகின்றனர். இக்கொடுமை அதிகரித்துள்ளதே தவிர குறைவடையவில்லை என ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன. சுமார் ஒன்பது வயதை எட்டும் பிள்ளைகள் பருவமடையும் தறுவாயில் சூடானகல், தேங்காய் ஓடு, மரக்கரண்டி, மரக்கட்டை, சுத்தியல் போன்றவற்றைக் கொண்டு நிலக்கரிமேல் வெப்பமூட்டி சூடுவைக்கின்றனர். இதனால் ஆண்கள் ஈர்க்கப்படுவது தடுக்கப்படுகிறது எனவும் இதன் மூலம் தங்கள் குழந்தைகளை தாங்கள் காப்பாற்ற முடியும் என்ற பெருமையுடன் இதனை நியாயப்படுத்துகின்றனர். ஆனால் குழந்தை உடல், உளரீதியாக எதிர்கொள்ளும் பாதிப்பை இவர்கள் சற்றும் எண்ணிப்பார்ப்பதில்லை என்பது வருந்தத்தக்க ஒன்றாகும். இவர்களுக்கு இத்தீக்காயங்களால் மார்பகப் புற்றுநோய், நீர்க்கட்டி, மனஅழுத்தம், மார்பகத்தொற்று, உருக்குலைந்த மார்பகம் போன்றவைகளுடன் அவர்கள் பிற்காலத்தில் தமது குழந்தைகளுக்கு பால் புகட்ட முடியாமல் போகக்கூடிய நிலைகளும் நிறையவே உண்டு என்கின்றது மருத்துவ ஆய்வுகள்.

சிறுசிறு குற்றச்செயல்களுக்காக, புனர்வாழ்வளித்தல் என்ற பெயருடன் சிறைவாசம் அனுபவித்துவரும் பெண்கள் சிறைச்சாலைகளில் சொல்லொணாத் துயரங்களுக்குள்ளாக வேண்டிய நிலை உள்ளது. அந்தவகையில் இலங்கைச் சிறைச்சாலையில் எலிகளின் தொந்தரவு, பாய் மற்றும் தலையணைகளுக்கான தட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. அதேவேளை மிக மோசமான வெப்பநிலையுள்ள காலப்பகுதிகளில் கூட இவர்களுக்கான மின்விசிறி வசதிகள் இல்லையெனச் சுட்டிக்காட்டப்பட்டபோதும் இன்னமும் அவை குறித்து எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. அத்துடன் பெண்கள் சிறைக்கூடங்களில் இரண்டு கழிவறைகள் மட்டுமே காணப்படுவதுடன் ஒரு கழிவறையை அதிகளவான பெண் கைதிகள் பயன்படுத்த வேண்டிய அவல நிலையுள்ளது. அத்துடன் சில சிறைக் கூடங்களில் தங்குமிட வசதியே மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. மேலும் 75 பேர் தங்கக் கூடிய கூடமொன்றில் 150க்கும் அதிகமான பெண் கைதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சிறைவாசம் அனுபவித்து வரும் பெண்களின் எண்ணிக்கை ஆண்களுக்கு நிகராக அதிகரித்து வருகின்ற போதும் அவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் வழங்கல் குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்காமலிருப்பது அவர்களை புறந்தள்ளுவதாகவே சுட்டிக்காட்டப்படுகிறது.

தற்போது சமுகவலைத் தளங்களின் அதிகரித்த பாவனை காரணமாக பெண்களின் தற்கொலை முயற்சிகள் சகல நாடுகளிலும் இடம்பெற்று வருகின்றன. முன்னைய காலங்களில் இப்படியான ஒன்று நடைபெற்றதற்கான சந்தர்ப்பத்தை யாருமே அறிந்திருக்கவில்லை. அண்மையில் எமது நாட்டில் கூட பேஸ்புக் என்ற சமூக வலைத்தளப் பாவனையினால் ஏற்பட்ட தகராறு காரணமாக இரு பெண்கள் தற்கொலை செய்துள்ளனர். இதைவிட அதிகமான தற்கொலைகள் நடந்தேறியிருக்கின்றன. கண்டதும் காதல் போல காணாமலே காதல் என்ற அடிப்படையில் எத்தனையோ இளவயதுப் பெண்கள் தமது வாழ்க்கையைத் தொலைத்திருக்கின்றனர். இது ஒருபுறமிருக்க ஒரு நாடு பேஸ்புக் கணக்கை வைத்திருந்தமைக்காக பெண்ணொருவருக்கு மரண தண்டனை வழங்கியிருப்பது மிகக் கொடியசெயல் எனப் பலதரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சிரியா நாட்டிலே இத்துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது. அந்நாட்டு அரசு பெண்கள் பேஸ்புக் கணக்கை திறப்பதற்கு தடை விதித்திருந்தது. முறையற்ற பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்காகவே இந்நடைமுறை பின்பற்றப்பட்டாலும் அதற்காக அவரைச் சாகடிக்கும் தண்டனை விதிக்கப்பட்டமை ஓர் அநீதியான செயலாகும். ஓர் இஸ்லாமியப் பெண்ணே இவ்வாறு கொல்லப்பட்டவராவார். இவருக்கு மரணண்டனை விதித்ததையடுத்து அவருக் குப் பொதுமக்கள் முன்னிலையில் கல்லால் அடித்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இச் சம்பவம் சிரியா நாட்டுப் பெண்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பலநாடுகள் இச்சட்டத்துக்கெதிராக கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான போர் வேண்டுமானால் ஓய்ந்திருக்கலாம். ஆனால் இலங்கைத் தீவில் வசித்து வரும் தமிழ்ப் பெண்களின் வாழ்க்கைப் போராட்டம் இன்னமும் ஓயவில்லை. நிர்க்கதியாக்கப்பட்ட அபலைப் பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்படுவது அன்றாட நிகழ்வாகிவிட்டது. இலங்கை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆயிரக்கணக்கான பெண்கள் போர் காரணமாக விதவைகளாக்கப்பட்டுள்ளனர். இந்தப் பெண்கள் தமது குடும்பத்துக்காக தாமே கூலிவேலை செய்து பிழைத்து வாழ்க்கையை ஓட்டுகின்றனர். இவர்களில் பலரும் தமது குடும்ப வறுமை, உறவினர்களை இழந்த துக்கம் ஆகியனவற்றுக்கு மேலாக தமது பாதுகாப்பற்ற நிலை தொடர்பாகவே கவலை அடைந்துள்ளனர். அண்மைய புள்ளிவிவரப்படி இந்த வருடம் பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்திருப்பதாகவும் குறிப்பாக இராணுவத்தினர் குழுமி இருக்கும் பகுதிகளில் இவை அதிகம் இனங்காணப்படுவதாகவும் தெரிய வருகின்றது. பெருமளவான இராணுவத்தின் இருப்புக் காரணமாக இராணுவமயமாக்கப்பட்ட பகுதிகளிலேயே தமிழ், முஸ்லிம் பெண்கள் மிகவும் மோசமான பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றார்கள். விசாரணை என்ற பெயரில் கைதுசெய்யப்படும் பெண்களே இவ்வாறான நிலைக்கு உள்ளாகுகின்றனர். குறிப்பாக 2012இல் யாழ்ப்பாணத்தில் ஒரே மாதத்தில் இளம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளான 56 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. சில பெண்கள் கருத்துத் தெரிவிக்கையில் மாற்று இனத்தவரின் கட்டுப்பாட்டில் நாங்கள் இருப்பதால் எம்மை அவர்களின் உடமைகள் என எண்ணுகின்றார்கள் போலும், அத்துடன் தாம் போரில் வெற்றி கொண்டதால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்றும் கருதுகிறார்கள் எனவும் பெண்கள் அமைப்புக்களும் இது தொடர்பில் விசனம் தெரிவித்துள் ளன. இதுவரை சுமார் 400 வரையிலான பலாத்காரச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஆனால் ஓர் இராணுவ வீரர் மீதும் பாலியல் வன்கொடுமை அல்லது மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. இதனால் பெண்கள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு வருவது டன் காமக் கொடூரர்கள் வட்டமிடுவதும் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

தேர்தல் காலங்களில் பாடசாலை ஆசிரியர்களின் விவரங்களைச் சேகரித்த படையினர் தற்போது அவ்விலக்கங்களுக்கு அழைப்பு விடுத்து தொடர்பு கொள்வதாகவும் சிங்களத்தில் ஆபாசமாகப் பேசுவதாகவும் பல்வேறு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. போர் முடிவுற்றது என்றும் இனி மேல் இலங்கையில் எந்தவிதமான போர் நடவடிக்கைகளும் நடைபெறாது என்றும் ஒருபுறம் எமது அரசு கூறிவந்தாலும், மறுபுறம் பெண்களை அதிலும் குறிப்பாகத் தமிழ்ப் பெண்களை இராணுவத்தில் இணையுமாறு நிர்ப்பந்தித்து வருவதாக பலர் கண்ணீர் மல்கத் தெரிவித்து வருவதை அறிய முடிகின்றது. தாயகக் கனவு தகர்ந்தது போன்று தமது வாழ்க்கைக் கனவும் தகர்ந்துவிட்டதாக பெண்கள் உணர்கின்றனர்.

எமது கலாசாரத்தில் பொதுவாக ஆண்களையே குடும்பத் தலைவர்களாக ஏற்றுக்கொண்டு வந்துள்ள போதிலும் தற்காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக பெண்களையும் குடும்பத் தலைவர்களாக ஏற்குமளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. அதாவது போர் காரணமாக கணவனின் இறப்பு, காணாமல் போதல், அங்கவீனம், கணவனால் கைவிடப்பட்ட தன்மை, தனியே வாழுதல், விவாகரத்து, கணவன் பாதுகாப்பின் நிமித்தம் வெளிநாடு சென்றமை போன்றவற்றால் இக்குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றாலும் இவற்றில் எத்தனை பெண்கள் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும், வசதியாகவும், சுதந்திரமாகவும், வாழ்கின்றார்கள் என்று ஆராய்வோமானால் மிகச் சொற்ப அளவிலேயே பெண்கள் இருப்பது தெரியவரும். பல பெண்கள் வறுமை காரணமாகத் தாம் பெற்ற பிள்ளைகளுக்கே உணவளிக்க முடியாமல் தத்தளிக்கின்றனர்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உள்ள பெண்கள் இரவு நேரங்களில் கூட கல்வி, தொழில் நடவடிக்கைகளில் எந்தவித பயமும் இல்லாமல் ஈடுபடுகின்றார்கள். ஆனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பெண்கள் இரவில் தனியாகச் செல்ல முடியாது. இதற்குக் காரணம் எமது சமூக ஒடுக்குமுறையே. ஒருபுறம் கயவர்களின் தொந்தரவு. மறுபுறம் சமூக அடக்குமுறை. பெண்ணின் முன்னேற்றத்தைச் சமூகமே தடுக்கின்றது, தப்பான கண்ணோட்டத்தில் கண், காது, வாய், மூக்கு வைத்துப் பார்க்கின்றது. ஆனால் அவள் எதற்காக வெளியே செல்கிறாள்? அவளது குடும்ப நிலை என்ன? என்று சற்றுக் கூட நினைத்துப் பார்க்கவில்லை. இதனாலேயே நாங்கள் இன்னமும் நிர்க்கதியான நிலையிலேயே இருக்கின்றோம்.

எனவே பெண்களின் நலன் தொடர்பிலும், அவர்களின் பாதுகாப்புத் தொடர்பிலும் முன்னேற் றங்களையும், விழிப்புணர்வுகளையும் கொணரவேண்டிய பொறுப்பு எம் அனைவரிலுமே தங்கியுள்ளது. பெண்கள் தினமான இன்றிலிருந்து நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவோமாயின் ஓரளவாவது பெண் அடக்குமுறையைத் தடுக்க முடியும்.



# நினைவில் நிறைந்த பெண் திலகங்கள்

தொகுப்பு: தட்சா ஜோ



## அன்னை தெரேசா

அன்னை தெரேசா 1910 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 26 ஆம் திகதி அல்பேனியாவில் பிறந்தார். ஒகஸ்ட் 26 ஆம் திகதி பிறந்த போதிலும் அவர் திருமுழுக்குப் பெற்ற ஒகஸ்ட் 27 ஆம் திகதியையே தனது உண்மைப் பிறந்தநாளாகக் கருதினார். இவர் அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவர். இந்தியக் குடியுரிமை பெற்ற உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரியும் ஆவார். இவரின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ என்பதாகும்.

பன்னிரண்டு வயதுக்குள் துறவறம் புக முடிவு செய்து கொண்டார். தனது பதினெட்டாம் வயதில் அவர் வீட்டை விட்டு வெளியேறி லொரேட்டோ சகோதரிகளின் சபையில் மறைப்பணியாளராகத் தன்னை இணைத்துக் கொண்டார். அதற்குப் பிறகு தனது தாயையோ அல்லது உடன்பிறந்த சகோதரியையோ அவர் மீண்டும் பார்க்கவில்லை. 1950 ஆம் ஆண்டு இந்தியாவின் கொல்கத்தாவில் பிறர் அன்பின்பணியாளர் என்றகத்தோலிக்கதுறவறசபையினைநிறுவினார்..

1970 ஆம் ஆண்டுக்குள் இவர் சிறந்த சமூக சேவகர் எனவும் ஏழைகளுக்கும் ஆதரவற்றோருக்கும் பரிந்து பேசுபவர் என்றும் உலகம் முழுவதும் புகழப்பட்டார்.

அன்னை தெரேசாவின் பிறர் அன்பின் பணியாளர் சபை அவரது இறப்பின் போது 123 நாடுகளில் 610 தொண்டு நிறுவனங்களைக் கொண்டிருந்தது. இதில் எய்ட்ஸ், தொழு நோய் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கான ஆலோசனைத் திட்டங்கள், அநாதை இல்லங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவை இவற்றுள் அடங்கும். இவரின் மறைவு 1997 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி இடம்பெற்றது. இவர் மறைந்த பின்னர் திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் முக்திபேறு அடைந்தவராக அறிவிக்கப்பட்டு கொல்கத்தாவின் அருளாளர் தெரேசா என்று பட்டம் சூட்டப்பட்டார்.

## புளோரன்ஸ் நைட்டிங் கேர்ல்



இவர் பிரித்தானியாவின் புளோரன்ஸ் நகரில் பிறந்தார். இவர் பிறந்த இடத்தின் பெயரைத்தழுவி இவருக்கு புளோரன்ஸ் நைட்டிங்கேல் எனப் பெயரிட்டார்கள்.

கிறிஸ்தவர் என்ற முறையில் தனக்கு இறைவனால் விதிக்கப்பட்ட பணியாக தாதியர் சேவையை அவர் உணர்ந்தார்.

தாயாரின் எதிர்ப்புக்கும் மத்தியில் தாதியர் சேவையில் ஈடுபடவேண்டும் என்னும் தனது முடிவை புளோரன்ஸ் 1845 ஆம் ஆண்டு அறிவித்தார்.

விக்டோரியா அரசிக்கு அடுத்தபடியாக மிகவும் அறியப்பட்ட பெண்ணாகக் கருதப்பட்டார் இவர்.

தாதியர் சேவையை நிறுவி அதை முன்னேற்றும் பணியிலேயே அவர் தனது வாழ்நாளைக் கழித்தார்.

இவர் 1896 ஆம் ஆண்டளவிலிருந்து படுத்த படுக்கையானார்., 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 ஆம் நாள் தனது 90 ஆம் வயதில் மிகவும் அமைதியாக தனது அறையில் இயற்கையைத் தழுவிக் கொண்டார்.



## சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

ஜனவரி 7, 1925 இல் யாழ்ப்பாண மாவட்டம் தெல்லிப் பழையில் அப்பாக்குட்டி-தையல்பிள்ளை தம்பதிகளுக்குப் பிறந்த தங்கம்மா 1929 ஆம் ஆண்டு மல் லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தார். பின்னர் தனது இடைநிலைக் கல்வியை மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் தொடர்ந்தார். 1941 ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சிக்குச் சேர்ந்தார்.

தமிழையும் சைவ சமயத்தையும் முறையாகக் கற்று 1952 ஆம் ஆண்டு பாலபண்டிதராகத் தேர்வடைந்த இவர், 1958 இல் தமிழகத்தில் சைவப்புலவர் பட்டத்தையும் பெற்றார். இவரது 31 ஆண்டுகள் கொண்ட ஆசிரியைப் பணியில் கடைசி 12 ஆண்டுகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியையாகப் பணியாற்றி 1976 இல் ஓய்வு பெற்றார்.

'பண்டிதை' என அழைக்கப்பட்டு வந்த தங்கம்மா சமயச் சொற்பொழிவுப் பணிமூலம் சமய வளர்ச்சிக்குத் தொண்டு செய்யும் வகையில் தனது சமயப்பணியைத் தொடக்கினார். 1970களில் சிறிய கோயிலாக இருந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் திருத்தலத்தைக் கட்டியெழுப்பி ஆலயப் பணியுடன் மக்கள் தொண்டும் ஆற்றி வந்தார். இவர் 1998இல் யாழ் பல்கலைக்கழகத்தால் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அவர் 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியால் நிறுவப்பட்ட மகளிர் இல்லம் இன்றும் தெல்லிப்பழை ஆலய வளாகத்தில் சிறப்புற அவரின் நினைவாக செயற்பட்டு வருகிறது.

அவரது நாமம் தமிழ்மக்கள் மத்தியில் என்றும் நிலைத்து நிற்கும்.




## மேரி கொல்வின்



1956 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி அமெரிக்காவில் பிறந்த இவர் 1985 ஆம் ஆண்டிலிருந்தே லண்டன் 'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் ஓர் இதழியலாளராகப் பணியாற்றினார். சிரியாவின் கிளர்ச்சி தொடர்பான செய்தி சேகரிப்பில் ஈடுபட்டபோது 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 இல் கொல்லப்பட்டார். மானுட வியலில் தனது முதல் பட்டத்தை 1978 இல் பெற்றுக் கொண்ட மேரி கொல்வின் நியூயோர்க் யுனைற்றட் பிறஸ் இன்ரநஷனல், பிரித்தானியாவின் 'த சண்டே ரைம்ஸ்' போன்ற பத்திரிகைகளில் இணைந்து பணியாற்றினார். மத்திய கிழக்கு விடயங்களில் சிறப்புத் தேர்ச்சி கொண்டவரான மேரி கொல்வின் மிக ஆபத்தான சூழ்நிலைகளில் பணியாற்றினார். சர்வதேசப் பெண்கள் ஊடக அமைப்பின் இதழியலின் தற்துணிவுக்காக வழங்கப்படும் சர்வதேச விருதையும் இவர் பெற்றுக் கொண்டார். 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று செய்தி சேகரித்து மீண்டும் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழையும் போது இலங்கை இராணுவத்தின் தாக்குதலினால் தனது இடது கண்ணை இழந்தார்.

பின்னர் மேரி கொல்வின் சட்ட விரோதமாக சிரியாவுக்குள் நுழைந்து செய்தி சேகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது சற்றலைட் தொலைபேசியின் சிக்னல்களைப் பின் தொடர்ந்த சிரிய இராணுவத்தால் நடத்தப்பட்ட தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார்.



## மேரி கியூரி அம்மையார்

மேரி கியூரி அம்மையார் 1867 ஆம் ஆண்டு நவம்பர் 7 ஆம் நாள் போலந்தின் வார்ஷாவ் நகரில் ஏழ்மையான குடும்பமொன்றில் பிறந்தார். மரியாவின் தந்தை ஓர் அறிவியல் ஆசிரியர். அதனாலேயே அவருக்கு அறிவியலில் அதிக ஆர்வம் ஏற்பட்டது. கல்வியில் மிகச்சிறந்து விளங்கிய மரியா சிறு வயதிலிருந்தே ஒரு விஞ்ஞானியாக வரவேண்டும் என்று விரும்பினார். அந்தக்காலத்துப் பெண்கள் கற்பனைகூட செய்து பார்க்க முடியாத ஒன்று அது. ஆனால் தனது கனவை நனவாக்க முடியும் என்று நம்பினார் மரியா.


தனது 24 ஆவது வயதில் உயர் கல்விக்காக ஸாபான் என்ற பாரிஸ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். இயற்பியலில் மிகச்சிறப்பாகத் தேர்ச்சிபெற்று பட்டமும் பெற்றார். அப்போது அவர் பியரி கியூரி என்றவரைச் சந்தித்து நான்கு ஆண்டுகள் கழித்து அவரைத் திருமணம் செய்து கொண்டார். கணவன், மனைவி இருவருமே இயற்பியலிலும் வேதியியலிலும் ஆராய்ச்சி செய்ய விரும்பினர். தோரியம் போன்ற சில தனிமங்களுக்கு கதிரியக்கச் சக்தி இருப்பதை அவர்கள் கண்டறிந் தனர். அவர்களது தொடர்ச்சியான ஆய்வின் பயனாக இரண்டு புதிய தனிமங்கள் உலகுக்குக் கிடைத்தன. ரேடியத்தையும், இயற்கையான கதிரியக்கத்தையும் கண்டுபிடித்ததற்காக கியூரி தம்பதிகளுக்கு 1903 ஆம் ஆண்டு இயற் பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

முதல் நோபல் பரிசை வென்ற எட்டே ஆண்டுகளில் அதாவது 1911 ஆம் ஆண்டில் மேரி கியூரிக்கு இரண்டாவது நோபல் பரிசை வழங்கிக் கௌரவித்தது நோபல் குழு. இம்முறை ரேடியத்தின் அணு எடையை அளக்கும் முறையைக் கண்டுபிடித்த தற்காக வேதியியல் துறையில் இந்த விருது வழங்கப்பட்டது.

மேரி கியூரியின் கண்டுபிடிப்புகளால்தான் புற்று நோய்க்கான சிகிச்சை பிறந்தது. பல ஆண்டுகள் ரேடியத்தோடு ஆராய்ச்சி செய்ததால் அவருக்கு கடும் கதிரியக்க தாக்கம் ஏற்பட்டது.

மனுகுல மேன்மைக்காக பாடுபட்ட அந்த உன்னத விஞ்ஞானியின் உடலை லூக்கிமீயா என்ற புற்றுநோய் அரித்தது. கிட்டத்தட்ட தனது விரல்களையும், கண் பார்வையையும் கதிரியக்கத்துக்கு காவு கொடுத்த நிலையில் 1934 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் திகதி தனது 67 ஆவது அகவையில் மரணத்தைத் தழுவினார் மேரி கியூரி அம்மையார்.

## கல்பனா சாவ்லா



கல்பனா சாவ்லா இந்தியாவிலுள்ள ஹரியானா மாநிலத்தில் கர்னல் என்ற ஊரில் 1961 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி பிறந்தார்.

இவர் 1982 ஆம் ஆண்டு சண்டிகரில் உள்ள கல்லூரியொன்றில் விமான ஊர்தியல்துறையில் பட்டம் பெற்றார் பின்னர் அமெரிக்கா சென்று விண்வெளிப் பொறியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

1995 இல் நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் இணைந்து கொண்டார்.

2003 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி விண்வெளி ஆராய்ச்சிக்கென அமெரிக்கரினால் கொலம்பியா விண்வெளி ஊர்தி அனுப்பி வைக்கப்பட்டது. அதில் கல்பனா உள்ளிட்ட ஏழுபேர் பயணித்தனர். 16 நாள் ஆய்வுகளின் பின்னர் அந்த விண்வெளி ஊர்தி பூமிக்குத் திரும்பியபோது வான்பரப்பில் வெடித்துச் சிதறியது. அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர். கல்பனா என்ற அந்த வீரப் பெண்ணின் சாவு உலகையே அதிர வைத்தது.



# மகுடம் சூடி மகிழ்ந்திடு பெண்ணே......

மண்ணில் மணம் வீச
மலர்ந்திட்ட மங்கையே!
பெண்ணினத்தின் விடியாத
விடிவிற்காய்
நிமிர்ந்த நடையும்
நேர்கொண்ட பார்வையுமாய்
பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்,
சரித்திரம் படைக்கப்
புறப்படு பெண்ணே!

சதிகாரக் கூட்டத்தின்
அதிகார வலைக்குள் அகப்பட்டு
மதிக்காத வஞ்சகரை
துச்சமென நீ நினைத்து
அன்புடன் அதிகாரத்தை கரம்பற்றி
ஆணாதிக்கத்தைச் சிறையிலிட்டு
ஆணவத்தை தீயிலிட்டு
மங்கையரின் மலர்வுக்காய்
போராடப் புறப்படு பெண்ணே!

சாதனைப் பாதைகள்
உன் வரவிற்காய்
காத்துக் கிடக்கின்றன

அறியாத வயதினிலே தெரியாத வஞ்சகரால்
பறிபோகும் கற்பிற்கு விலைபேச முடியுமா?
பாலியல் கொடுமைதனை
பூண்டோடு அழித்து
பெண்ணினத்தின் விடிவிற்காய்
புதுயுகம் ஒன்று படைத்திடு பெண்ணே!

மரணங்கள் மலிந்து போன மண்ணில்
மதியினால் மரணத்தை வென்று
மலரத்துடிக்கும் மங்கையரின் வாழ்விற்காய்
சமத்துவத்தை நிலைநாட்டி
சமாதானத்தை கட்டியெழுப்பி
மகுடம் சூடி மகிழ்ந்திடு பெண்ணே!

ரேவதி தர்மா,
மாவையூர்

# நீயும் தூக்கு வெற்றிக்கொடி

பண்டைய வாழ்வின் அடக்குமுறைகள்
பாரினிலே ஒழிந்துவிட்டது என்று
தூக்கடி பெண்ணே - நீயும்
வெற்றிக்கொடி

வீட்டினில் சிறைவாசம் இருந்தோம் அன்று
விஞ்ஞான உலகில் வீறுநடை போடுவோமென்று
தூக்கடி பெண்ணே -நீயும்
வெற்றிக்கொடி

பதவிகள் எம்மை ஆள்வதில்லை
பதவிகளை நாமே ஆள்வோமென்று
தூக்கடி பெண்ணே - நீயும்
வெற்றிக்கொடி

ஆண்களின் அடக்குமுறைக்கும்
சமூகத்தில் யாருக்கும் அஞ்சோம் என்றும்
தூக்கடி பெண்ணே -நீயும்
வெற்றிக்கொடி

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக
பட்டங்கள் பல பெற்று
சட்டங்கள் வகுப்போமென்றும்
பதவிகள் பல வகிப்போமென்றும்
தூக்கடி பெண்ணே - நீயும்
வெற்றிக்கொடி.

ச. வர்மினா
உசன்



# விண்ணை முட்டும் வீரியம் பெறுக....!

மடந்தை யென்று மழுங்க வைத்து
மனித மாண்பைச் சிதைத்திடாது
உடந்தையென்று உலக வாழ்வில்
உயர்வு பெறுவீர் பெண்களாலே!
உணர்வுகளையே கட்டிப் போட்டு
ஊனமாக உலாவ விடுதல்
மனவிகாரம் கொண்ட மனிதர்
மனங்களதன் வெளிப் பாடுகளே!
உரிமைகளைப் பறித்தடக்கி
உயிர் பிழிந்து நீர் மகிழ்ந்தால்
கரிமையாகும் உம் வாழ்வும்
கலந்தே விடுமே தீவினைகள்!
பிள்ளை பெறும் இயந்திரமாய்
பிறழ்வாய் நீரும் எண்ணிவிட்டால்
பள்ளமாகும் உங்கள் வாழ்வும்
பலித்திடாதே இல்லத்து அமைதி!
மனிகுலத்துப் பூங்காக்கள்
மாண்பு நிறை ஆலயங்கள்
புனிதமதன் இருப்பிடங்கள்
புரிந்து கொள்வீர் பெண்ணினத்தை!
சுயசிந்தை சுயவாழ்வு
சுயம் மறுக்கும் தடைவேண்டாம்
இயல்பாய் என்றும் மகளீரினை
இயங்க நல்ல வழிசெய்வீர்!
கல்வி தனையே மகளீர்க்களித்து
கலங்கரை விளக்காய் ஆக்குகின்ற
நல்ல பல பணிகள் செய்ய
நாளும் சபதம் தனையெடுப்பீர்!
பெண்மை மேன்மை பெற்றுயர்ந்தால்
பெருமை பெறுமே மனுக்குலமும்
விண்ணை முட்டும் வீரியம் பெறவே
விடுங்கள் அவர்கள் தாமேயுயர்வர்!

சூரியநிலா, உசன்

# நெருப்பாய் இருப்பாய் பெண்ணே.....

நெருப்பாய் இருப்பாய் பெண்ணே!
நெருங்கான் எவனும் உன்னை..
கருத்தாய் இருப்பாய் கற்பில்
கழிந்து வாழ் கயவரை...
உருத்தாய் வடிவம் கொண்டவளே
உண்மையாய் இருந்திடு
உனக்குள்..

மறுக்கள் குற்றங்கள் இந்த
மண்ணிலுண்டு மறவாதே..
பொறுப்போடு இரு-உன்
பொன்னான நல்லெதிர்காலத்திற்கு
விருப்போடு காரியம் செய்
விளைவது நல்லதெனில்....

தெருவிலே கிடக்குதடி
தேனொக்க நம் பண்பாடு!
கருத்தோடு நின்று நம்
கலாசாரம் காத்திடப் பாடுபடு!
சுறுசுறுப்பாய் உழைத்து
சுகதுக்கங்களை ஒன்றாகக்
கொண்டாடு...

செருப்படிகளும்
வாழ்விலுண்டு
சோகம் கொண்டு
வீழ்ந்திடாதே!-ஞானச்
செருக்குடன் நிமிர்ந்து
சேர்ந்து நட...
ஜெகம் உன் பின்னால்
வரும்!!
வெறுத்துவிடு காம
வெறியர்களை-முடிந்தால்
வெட்டிவிடு!அன்றேல்
விரட்டிவிடு...

பெருஞ்சரித்திரங்கள்
படைக்க
போர்தொடடி!-எதிர்த்து
வரும் தரித்திரங்கள்
வாயடைக்க
வாளெடடி!-துணிந்
திருந்து துட்டர்களை
துவம்சிக்க
தூது போ காலனுக்காய்....

அம்பிகை பஞ்சலிங்கம்..



# புனிதமாக்கு

என் இனியவளே
இதயம் கவர்ந்தவளே
சின்னஞ் சிறுவர்களாய்
சிரித்து விளையாடி
ஒன்றாய் திரிந்தோம்
பட்டுப்பாவாடையில் நீ
பவனி வந்தால்
பார்த்து ரசிக்கும்
எனதுள்ளம்
பின்னிச் சடையிட்டு
பூவைத்து
பின்னலை முன்விட்டு நீ
போகும் அழகை
கற்பனையில் கண்டேன்
இன்று நீ
இறுக்கிப்பிடிக்கும்
ஜீன்சும் ரீசேர்ட்டும்
முன்னுக்குப்பின்
முரணாக வெட்டிய
கூந்தலும் குதியுயர்ந்த
செருப்புமாய் உன்தோற்றம்
அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு
அத்தனையும் மறந்த பெண்
அகங்கார நடையுடன்
அலைந்து திரிகிறாய்
செல்போன் நாகரீகத்தில்
சிவந்துபோகிறாய்
பற்றைக்குள் சிசுவும்
பலாத்காரத்தில் கொலையும்
சமூகமேடையில் நர்த்தனமாடுது
விழிமூடுமுன் விளைவுகளை
மூளையைதேய்த்து முன்வை
பாழாகும் சந்ததிக்கு
பாதியாவது மீதமாகும்
காவியங்களை ஓவியமாக்கி
போதித்து புனிதமாக்கு

த. பவானி
கரவை மத்தி.